


யாழ் - ஏழாலை வடக்கு

திருமதி. தெய்வானை இளையதம்பி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

09 - 01 - 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி. தெய்வானை இளையதம்பி



தோற்றம் : 17.6.1906 மறைவு : 9.1.1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என் கணவரின் தாயாய் இருந்து எம்மையெல்லாம் அன்பு காட்டி ஆதரவளித்து எமது வாழ்விற்கு ஒளியேற்றி வையத்து வாழ்வாங்கு வாழ வைத்த எமது அன்புத் தெய்வம் அமரர் திருமதி இளைய தம்பி. தெய்வானை அம்மையார் அவர்களின் பாத கமலங்களிலும், அவரது அருமை மகன் திரு. நடராஜா ஆசிரியர் (அமரர்) அவர்களது பாத கமலங்களிலும் பக்தியுடனும், அன்புடனும் அஞ்சலி செய்து இம்மலரை அவர்களுக்கு அர்ப்பணித்து ஆசி பெறுகின்றேன்.

அன்புடன்
திருமதி. ஆ. நடராஜா
பண்ணாகம்,
சுளிபுரம்
இலங்கை.

தோற்றம் : **17.6.1906**
மறைவு : **9.1.1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் வணக்கம்

திருவுங்கல்வியும் சீரும் தழைக்கவும் கருணை
பூக்கவும் தீமையைக் காய்க்கவும் பருவமாய்
நமதுள்ளம் பழுக்கவும் பெருகு மாளத்துப்
பிள்ளையைப் பேணுவாம்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்.

வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே.
அப்பம் முப்பழம் அமுது செய்தருளிய
தொப்பை அப்பனைத் தொழ வினை அறுமே

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் சப்தகம்

குருவே பரமன் கொழுந்தே பணிந்தேன்
குவலயம் போற்றும் கண நாதா!
வருவாய் நினைவில் வந்தெனை ஆள்வாய்
வடிவேலவனின் சோதரனே!
அருள்வாய்! உனையே அனுதினம் பணிவேன்
அன்னை பராசக்தி அருள்மகனே
திருமால் மருகா! திருவடி சரணம்!
தீனரஷகனே கணநாதா!

ஆனையின் அன்பன் அழகு முருகனின்
அண்ணனாய் உலகில் அவதரித்தாய்
ஆனைமுகத்தோடு ஐங்கரங் கொண்டோர்
அற்புத வடிவே! கணநாதா!
யானெனை தென்னும் எண்ணங்கள் நீக்கி
இகபர சுகமதை எனக்களிப்பாய்
யானுனை என்றும் இராப்பகல் தொழுதேன்!
என்துயர் களைவாய்! கணநாதா!

குஞ்சரனே எழிற் குஞ்சரி நாதனாம்
குகசரவணபவ சோதரனே!
வெஞ்சம ரெதிலும் வெற்றியே தருவாய்!
வேழமுகத்தோய் கணநாதா!
அஞ்சிடும் அன்பருக் கபயம் அளிப்பாய்!
அரவணைத் தெனையும் ஆண்டருள்வாய்!
பஞ்சமி! பைரவி! பார்வத புத்திரி
பார்வதி மைந்தா! கணநாதா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வல்லபை நாதா! விக்ன வினாயகா!
வாழ்த்திப் பணிந்தேன் உன்பதமே!
வல்வினை எல்லாம் வலியை இழந்தே
வாடிடச் செய்வாய் கணநாதா!
தொல்வினை யாலிவன் துயருறும் அடியேன்
துன்பமெல்லாம் நீ துடைத்திடுவாய்!
அல்லொடு பகலும் அனவரதமும் உன்
அடியினை தொழுவேன் கணநாதா!

வானொடு நீரும் வளியும் தீயும்
வையகம் யாவும் உன் வடிவே
மானிட வாழ்வை மகிழ்வுறச் செய்வாய்
மங்கலப் பொருளே கணநாதா
தேனொடு பாலும் தெங்கொடு பழமும்
தெவிட்டா அமுதம் தினமும் படைப்பேன்
ஊனொடு உயிரும் உணர்வும் புரப்பாய்!
உன்னடி தொழுதேன் கணநாதா

ஓமெனும் வடிவே உன் வடிவாமென
உலகிற் கெல்லாம் நீ உணர்த் திடுவாய்
ஆம் எனச் சொல்வாய்! அன்னை குமாரா
ஆதரித்தருள் வாய்! கண நாதா
ஓமெனும் ஒலியில் உன்குரல் கேட்டே
உள மகிழ்ந்துன் புகழ் பாடிடுவேன்
ஓமெனும் பொருளே உமையவள் பாலா!
ஒரு பரம் பொருளே! கணநாதா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரன் மகனே! சஞ்சலம் தீர்ப்பாய்
சக்தி குமாரா! கணநாதா!
ஐங்கரனே! உன் அடியினை தொழுதேன்
அடைக்கலம் நீயே கணநாதா!
சங்கரித் திடுவாய் சங்கட மெல்லாம்
சம்பு குமாரா! கண நாதா!
சங்கரி மைந்தா! சந்ததம் பணிவேன்
சரணம்! சரணம்! கணநாதா!



ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக்களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ(கு) எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழமுகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீலமேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!

இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப்பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதல் ஐந் தெழுத்தும் தெளிவாய்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடிவாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இது பொருள் என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடு வினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத் தங்குச நிலையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறிவித்துக்
கடையில் சுழிமுனை கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலை
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூட்மமும்
எண்முக மாக இனிதெனக் அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரி எட்டு நிலையும் தெரிசனப்படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு
அப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக! விரை கழல் சரணே!
மூஷிக வாகன மோதகஹஸ்த
ஸாமர கர்ணவிளம்பித சூத்ர
வாமந ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பரத நமஸ்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சண்முக கவசம்

## பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் அருளியது

அண்டமாய் அவனியாகி அறியொணாப் பொருளதாகி
தொண்டர்கள் குருவும் ஆகித் துகள் அறு தெய்வம்ஆகி
எண்திசை போற்ற நின்ற என் அருள் ஈசன் ஆன
திண்திறல் சரவ ணத்தான் தினமும் என் சிரசைக் காக்க 1

ஆதியாம் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக்
காக்க
தாது அவிழ் கடப்பம் தாரான் தான் இரு நுதலைக்
காக்க
சோதியாம் தணிகை ஈசன் துரி இலா விழியைக் காக்க
நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க 2

இருசெவிகளையும் செவ்வேள் இயல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பல் முழுதும் நல்குமரன் காக்க
துரி அறு கருப்பை யானைத்துண்டனார் துணைவன்
காக்க
திரிவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க 3

ஈசனாம் வாகுலேயன் எனதுகந் தர்த்தைக் காக்க
தேசுறு தோள்வி லாவும் திருமகள் மருமகன் காக்க
ஆசு இலா மார்பை ஈரா(று) ஆயுதன் காக்க எந்தன்
ஏ(சு) இலாமு ழங்கை தன்னை எழில் குறிஞ்சிக்
கோன் காக்க 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியாய் முன்கை தன்னை உமைஇள மதலை காக்க
தறுகண் ஏறிடவே என்கைத் தலத்தைமா முருகன் காக்க
புறம்கையை அயிலோன் காக்க பொறிக்கர விரல்கள்
பத்தும்
பிறங்கு மான் மருகன் காக்க பின் முதுகைச் சேய்
காக்க 5

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை ஊர்தியோன் காக்க
வம்புத் தோள்நிமிர் சுரேன் உந்திச் சுழியினைக் காக்க
குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக் காக்க 6

எஞ்சிடாது இடும்பை வேலுக்கு
இறைவனார் காக்க காக்க
அஞ்சனம் ஓர் இரண்டும் அரன் மகன்
காக்க காக்க
விஞ்சிடு பொருள் காங்கேயன்
விளரடித் தொடையைக் காக்க
செஞ்சரண் நேச ஆசான்
நிமிரும்முன் தொடையைக் காக்க 7

ஏரகத் தேவன் என் தாள்
இரு முழங் காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச்
சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பாடு இரண்டும்
நிகழ்பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத்
திருச்சோலை மலையன் காக்க 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயுறு மலையன் பாதத்(து)
அமர்பத்து விரலுங் காக்க
பையுறு பழநி நாத பரன்
அகம் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும் ஆதிவிமல
சண் முகவன் காக்க
தெய்வநா யகவி சாகன்
தினமும் என் நெஞ்சைக் காக்க 9

ஒலியெழ உரத்த சத்தத்
தொடுவரு பூத ப்ரேதம்
பலிகொள்இ ராக்க தப்பேய்
பலகணத்து எவை ஆனாலும்
கிலிகொள் எனைவேல் காக்க
கெடுபரர் செய்யும் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம்
வருந்திடா(து) அயில் வேல் காக்க 10

ஓங்கிய சீற்றமே கொண்டு
உவணிவில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எஃகம்
தடிபர(சு) ஈட்டி யாதி
பாங்குடை ஆயுதங்கள் பகைவர்
என்மேலே ஒச்சின்
தீங்குசெய் யாமல் என்னைத்
திருக்கைவேல் காக்க காக்க 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவிய முளர்ஊன் உண்போர்
அசடர்பேய் அரக்கர் புல்லர்
தெவ்வர்கள் எவர் ஆனாலும்
திட முடன் எனைமல் கட்டத்
தவ்வியே வருவா ராயின்
சராசரம் எலாம்பு ரக்கும்
கவ்வுடைச் சூர சண்டன்
கை அயில் வேல் காக்க 12

கடுவிடப் பாந்தள் சிங்கம்
கரடிநாய் புலிமா யானை
கொடிய கோனாய் குரங்கு
கோலமார்ச் சாலம் சம்பு
நடையுடை எதனா லேனும்
நான் இடர்ப் பட்டி டாமல்
சடிதியில் வடிவேல் காக்க
சானவி முனைவேல் காக்க 13

நகரமே போல் தழீஇ
ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதேன் தண்டுக் காலி
செய்யன் ஏ(று) ஆலப் பல்லி
நகமுடை ஓந்தி பூரான்
நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை இவையால் ஏற்(கு)
ஓர் ஊறு இலா(து) ஐ வேல் காக்க 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலத்தில் உய்வன்மீன் ஏறு
தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலும் சலத்திலும் தான்
நெடும் துயர் தரற்கே உள்ள
குலத்தினால் நான்வ ருத்தம்
கொண்டிடா(து) அவ்வவ் வேளை
பலத்துடன் இருந்து காக்க
பாவகி கூர்வேல் காக்க 15

ஞமலியம் பரியன் கைவேல்
நவக்கிர கக்கோள் காக்க
சுமவிழி நோய்கள் தந்த
சூலை ஆக் கிராண ரோகம்
திமிர்கழல் வாதம் சோகை
சிரமடி கர்ண ரோகம்
எமை அணு காமலேபன் னிருபுயன்
சயவேல் காக்க 16

டம ருகத்(து) அடிபோல் நைக்கும்
தலையிடி கண்ட மாலை
குமறுவிப் புருதி குன்மம்
குடல்வலி ஈழை காசம்
நிமிரொணா(து) இருந்தும் வெட்டை
நீர்ப்பிர மேகம் எல்லாம்
எமை அடையாமலே குன்று
எறிந்தவன் கைவேல் காக்க 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணக்கம்இல் லாத பித்த
எரிவுமா சுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்கும் குஷ்டம்
மூலவெண் முளைதீ மந்தம்
சணத்திலே கொல்லும் சன்னிசாலம்
என்(று) அறையும் இந்தப்
பிணிக்குலம் எனை ஆளாமல்
பெரும்சக்தி வடிவேல் காக்க 18

தவனமா ரோகம் வாதம்
சயித்தியம் அரோ சகம்மெய்
சுவறவே செய்யும் மூலச் சூடு
இளைப்பு உடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோய்
அண்டவா தங்கள் சூலை
எவையும் என் னிடத்(து) எய்தாமல்
எம்பிரான் திணிவேல் காக்க 19

நமைப்புறு கிரந்தி வீக்கம்
நணுகிடு பாண்டு சோபம்
அமர்ந்திடு கருமை வெண்மை
ஆகுபல் தொழுநோய் க்க்கல்
இமைக்கு முன் உறுவலிப்போ(டு)
எழுபுடைப் பகந்த(ர) ஆதி
இமைப் பொழுதேனும் என்னை
எய்தாமல் அருள் வேல் காக்க 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லது கடித்து மீசை
படபடென்றது டிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சம்
காட்டியே உருட்டி நோக்கி
எல்லினும் கரிய மேனி
எம்படர் வரினும் என்னை
ஒல்லையில் தார காரி
ஓம் ஐம் ரீம்வேல் காக்க 21

மண்ணிலும் மரத்தின் மீதும்
மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை ஜலத்தின் மீதும்
சாரிசெய் ஊர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தின் உள்ளும்
வே(று) எந்த இடத்தும் என்னை
நண்ணிவந்(து) அருளார் ஷஷ்டி
நாதன்வேல் காக்க காக்க 22

யகரமே போல்சூல் ஏந்தும்
நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈரா(று)
அம்பகன் வேல்பின் காக்க
சகரமோ(டு) ஆறும் ஆனோன்
தன்கை வேல் நடுவில் காக்க
சிகரமின் தேவமோலி திகழ் ஐ
வேல் கீழ்வேல் காக்க 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஞ்சித மொழிதே வானை
நாமகள் வள்ளி பங்கன்
செஞ்சய வேல்கி ழக்கில்
திறமுடன் காக்க அங்கி
விஞ்சிடு திசையில் ஞான
வீரன்வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக் கதிர்கா மத்தோன்
இகலுடைக் கரவேல் காக்க 24

லகரமே போல்கா ளிங்கன்
நல்லுடன் நெளிய நின்று
தகர மர்த் தனமே செய்த
சங்கரி வருகன் கைவேல்
நிகல்எனை நிருதி திக்கில்
நிலைபெறக் காக்க மேற்கில்
இகல் அயில் காக்க வாயு
வினில்குகன் கதிர்வேல் காக்க 25

வடதிசை தன்னில் ஈசன் மகன்
அருள் திருவேல் காக்க
விடையுடன் ஈசன் திக்கில்
வேதபோ தகனவேல் காக்க
தடக்கையில் இருக்கும் ஞான்றும்
நவில் கையில் நிமிர்கையில் கீழ்
கிடக்கையில் தூங்கும் ஞான்றும்
கிரிதுளைத் துளவேல் காக்க 26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகழ்ந்துபோ காத வாழ்வை
ஈயுமுத் தையனார் கைவேல்
வழங்கும்நல் ஊண்உண் போதும்
மால்விளை யாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம்
பணிந்து நெஞ்(சு) அடங்கும் போதும்
செழும் குணத் தோட காக்க
திட முடன் மயிலும் காக்க 27

இளமையில் வாலிபத்தில்
ஏறிடு வயோதி கத்தில்
வளர் அறு முகச்சி வன்தான்
வந்தெனைக் காக்க காக்க
ஒளிஎழு காலைமுன் எல்
ஓம் சிவ சாமி காக்க
தெளிதடு பிற்ப கல்கால்
சிவகுரு நாதன் காக்க 28

இறகுடைக் கோழித் தோகைக்(கு)
இறைமுன்இ ராவில் காக்க
திறலுடைச் சூர்ப்ப கைத்தே
திகழ்பின்இ ராவில் காக்க
நறவுசேர் தான்சி லம்பன்
நடுநிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எம்கோன்
மாறாது காக்க காக்க 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம் எனத் தொண்ட ரோடும்
இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந் தன்னில்
சரவண பவனார் காக்க
நனிஅநு பூதி சொன்ன
நாதர்கோன் காக்க இந்தைக்
கனிவொடு சொன்ன தாசன்
கடவுள்தான் காக்க வந்தே

# கந்த குரு கவசம்

**ராகம்: நாட்டை**

கலியுகத் தெய்வம் கந்தனுக்கு மூத்தோனே
மூஷிக வாகனனே மூலப் பொருளோனே
ஸ்கந்தகுரு கவசத்தைக் கலிதோஷம் நீங்கிடவே
திருவடியின் திருவருளால் செப்புகிறேன்
காத்தருள்வாய்
சித்தி வினாயக ஐயமருள போற்றுகிறேன்
சிற்பர கணபதே நற்கதியும் தந்தருள்வாய்
கணபதி தாளிணையைக் கருத்தினில் வைத்திட்டேன்
அச்சந் தீர்த்தென்னை ரக்ஷித் திடுவீரே.

**ராகம் : நாட்டை**

ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரவணபவ குகா சரணம் சரணம்
குருகுகா சரணம் குருபரா சரணம்
சரண மடைந்திட்டேன் கந்தா சரணம்
தனைத்தா னறிந்து நான் தன்மயமாகிடவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்கந்தகிரி குருநாதா தந்திடுவீர் ஞானமுமே
தந்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர்
அவகாத சத்குருவாய் ஆண்டவனே வந்திடுவீர்
அன்புருவாய் வந்தென்னை ஆட்கொண்ட
குருபரனே
அறம் பொருளின்பம் வீடுமே தந்தருள்வாய்
தந்திடுவாய் வரமதனை ஸ்கந்த குருநாதா
சண்முகா சரணம் சரணம் ஸ்கந்த குரோ
காத்திடுவாய் காத்திடுவாய் ஸ்கந்தகுரு நாதா
போற்றிடுவேன் போற்றிடுவேன் புவனகுரு நாதா
போற்றி போற்றி ஸ்கந்தா போற்றி
போற்றி போற்றி முருகா போற்றி
ஆறுமுகா போற்றி அருட்பதம் அருள்வாய்
தகப்பன் சாமியே என் இதயத்துள் தங்கிடுவாய்
சுவாமி மலைதனில் சொன்னதனைச் சொல்லிடுவாய்

**ராகம் : சகானா**

சிவகுரு நாதா செப்பிடுவாய் பிரணவமதை
அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்
திக்கெலாம் வென்று திருச்செந்தில் அமர்ந்தோனே
ஆறுமுக சாமி உன்னை அருட்ஜோதியாய்க் காண
அகத்துள்ளே குமரா நீ அன்புமயமாய் வருவாய்
அமரத் தன்மையினை அனுக்கிரகித் திடுவாயே
வேலுடைக் குமரா நீ வித்தையுந் தந்தருள்வாய்
வேல்கொண்டு வந்திடுவாய் காலனை விரட்டிடவே
தேவரைக் காத்த திருச்செந்தில் ஆண்டவனே
திருமுருகன் பூண்டியிலே திவ்வியஜோதி யானகந்தா
பரஞ்சோதி யுங்காட்டி பரிபூர்ண மாக்கிடுவாய்
திருமலை முருகாநீ திடஞான மருள்புரிவாய்
செல்வமுத்துக் குமரா முக்தியை மகற்றிடுவாய்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடிமுடி யறியவொண்ணா அண்ணா மலையோனே
அருணாசலக் குமரா அருணகிரிக் கருளியவா
திருப்பரங் கிரிகுகனே தீர்த்திடுவாய் வினைமுழுதும்
திருத்தணி வேல்முருகா தீரனாய் ஆக்கிடுவாய்
எட்டுகுடிக் குமரா ஏவல்பில்லி சூனியத்தை
பகைவர் சூதுவாதுகளை வேல்கொண்டு
விரட்டிடுவாய்
எல்லாப் பயன்களும் எனக்குக் கிடைத்திடவே
எங்கும் நிறைந்த கந்தா என்கண் முருகாநீ
என்னுள் ளறிவாய் நீ உள்ளொளியாய் வந்தருள்வாய்
திருப்போரூர் மாமுருகா திருவடியே சரணமய்யா
அறிவொளியாய் வந்து நீ அகக் கண்ணைத்
திறந்திடுவாய்.

**ராகம் : கல்யாணி**

திருச்செந்தூர் ஷண்முகனே ஐகத்குருவிற்கு
அருளியவா
ஜகத்குரோ சிவகுமரா சித்தமல மகற்றிடுவாய்
செங்கோட்டு வேலவனே சிவானு பூதிதாரும்
சிக்கல் சிங்காரா ஜீவனைச்சிவ னாக்கிடுவாய்
குன்றக் குடிகுமரா குருகுகனாய் வந்திடப்பா
வந்திடப்பா
குமரகிரிப் பெருமானே மனத்தையும் மாய்த்திடுவீர்
பச்சைமலை முருகா இச்சையைக் களைந்திடப்பா
பவழமலை ஆண்டவனே பாவங்களைப்
போக்கிடப்பா
விராலிமலை ஷண்முகனே விரைவில் நீ வந்திடப்பா
வயலூர் குமரா குரோ ஞானவரமெனக் கருள்வீர்
வெண்ணெய் மலைமுருகா மெய்வீட்டை தந்திடுவீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காம வேலவனே மனமாயை அகற்றிடுவாய்
காந்த மலைக்குமரா கருத்துள் வந்திடுவீர்
மயிலத்து முருகா நீ மனத்துள் வந்திடுவீர்
கஞ்சமலை சித்தகுரோ கண்ணொளியாய் வந்திடுவீர்
குமரமலை குருநாதா கவலை எல்லாம் போக்கிடுவீர்
வள்ளிமலை வேல்முருகா வேல்முருகா
வேல்கொண்டுவந்திடுவீர்
வடபழனி ஆண்டவனே வல்வினைகள் போக்கிடுவீர்
ஏழுமலை யாண்டவனே எத்திக்கும் காத்திடுவீர்
ஏழ்மை யகற்றிகந்தா எமபயம் போக்கிடுவீர்
அசையாத நெஞ்சத்தில் அறிவாக நீ அருள்வாய்
ஆறுபடைக் குமரா மயிலேறி வந்திடுவாய்
பணிவதே பணிஎன்று பணித்தனை நீ எனக்கு
பணிந்தேன் கந்தா உன்பாதம் பணிந்துவப்பேன்
அருட்பெருஞ் ஜோதிர்ய அன்பெனக் கருள்வாய்

**ராகம் : ஆனந்தபைரவி**

படர்ந்த அன்பினை நீ பரப்பிரம்மம் என்றனையே
உலகெங்கு முள்ளது ஒருபொருள் அன்பேதான்
உள்ளுயிராகி இருப்பதும் அன்பென்றாய்
அன்பே குமரன் அன்பே ஸ்கந்தன்
அன்பே ஓமெனும் அருள்மந்திரம் என்றாய்
அன்பை உளத்திலே அசையாது அமர்ந்திடுமோர்
சக்தியைத் தந்து தடுத்தாட் கொண்டிடவும்
வருவாய் அன்பனாய் வந்தருள் ஸ்கந்தகுரோ
யாவர்க்கும் இனியன் நீ யாவர்க்கும் எளியன்நீ
யாவர்க்கும் வலியவன் நீ யாவர்க்கு மானோய் நீ
உனக்கொரு கோயிலை என் அகத்துள்ளே
புனைவேனே
சிவசக்தி குமரா சரணம் சரணமையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபாயம் தவிர்த்து தடுத்தாட் கொண்டருள்வாய்
நிழல் வெயில் நீர்நெருப்பு மண்காற்று வானத்திலும்
பகைமையை அகற்றி அபயமளித் திடுவீர்
உணர்விலே ஒன்றியென்னை நிர்மல மாக்கிடுவாய்
யானென தற்றமெஞ் ஞானம் தருவாய் நீ
முக்திக்கு வித்தான முருகா கந்தா.

**இராகம் : கேதார கெளளம்**

சதுர்மறை போற்றும் ஷண்முக நாதா
ஆகமம் ஏந்தும் அம்பிகை புதல்வா
ஏழையைக் காக்கநீ வேலேந்தி வந்திடுவாய்
தாயாய்த் தந்தையாய் முருகா தக்கணம் நீ வருவாய்
சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில்நீ வருவாய்
பரம்பொருளான பாலனே ஸ்கந்தகுரோ
ஆதிமூலமே அருள்வாய் உருவாய்நீ
அடியனைக் காத்திட அறிவாய்வந் தருள்வாய்
உள்ளொளியாய் முருகா உடனே நீ வா வாவா
தேவாதி தேவா சிவகுரோ வா வா வா
வேலாயுதத்துடன் குமரா விரைவில் நீ வந்திடப்பா
காண்பன யாவுமாய்க் கண்கண்ட தெய்வமாய்
வேதச் சுடரோய் மெய்கண்ட தெய்வமே
மித்தையாம் இவ்வுலகை மித்தையென் றறிந்திடச்செய்
அபயம் அபயம் கந்தா அபயமென் றலறுகிறேன்
அமைதியை வேண்டி அறுமுகவா வாவென்றேன்
உன்துணை வேண்டினேன் உமையவள் குமரா கேள்
அச்சம் அகற்றிடுவாய் அமைதியைத் தந்திடுவாய்
வேண்டிய துன்னருளே அருள்வதுன் கடனேயாம்
உன் அருளாலே உன்தாள் வணங்கிட்டேன்
அட்டமா சித்திகளை அடியனுக் கருளிடப்பா
அஜபை வழியிலே அசையாம லிருந்திவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தர்கள் போற்றிடும் ஞானசித்தியும் தந்துவிடு
சிவானந்தத் தேனில் திளைத்திடவே செய்துவிடு
அருள்ஒளிக் காட்சியை அகத்துளே காட்டிவிடு
அறிவை அறிந்திடும் அவ்வருளையும் நீ தந்துவிடு
அனுக்கிரகித் திடுவாய் ஆதிகுரு நாதாகேள்
ஸ்கந்த குருநாதா ஸ்கந்த குருநாதா
தத்துவம் மறந்து தன்னையும் நான்மறந்து
நல்லதும் கெட்டதும் நானென்பதும் மறந்து
பாவபுண் ணியத்தோடு பரலோகம் மறந்திடச்செய்
அருள்வெளி விட்டிவனை அகலா திருத்திடுவாய்
அடிமையைக் காத்திடுவாய் ஆறுமுகக் கந்தகுரோ
சித்தியிலே பெரிய ஞானசித்தி நீ அருள
சீக்கிரமே வருவாய் சிவானந்தம் தருவாய்
சிவானந்தம் தந்தருளி சிவசித்த ராக்கிடுவாய்
சிவனைப் போலென்னைச் செய்திடுவ துன்கடனே
சிவசத் குருநாதா சிவசத் குருநாதா

**ராகம் : ஷண்முகப்பிரியா**

ஸ்கந்த குருநாதா கதறுகிறேன் கேட்டிடுவாய்
தாளிணைப் பிடித்தேன் தந்திடு வரமெனக்கு
திருவருட் சக்தியைத் தந்தாட் கொண்டிடுவாய்
சத்ரு பகைவர்களை ஷண்முகா ஒழித்திடு
கிழக்குத் திசையிலிருந்து கிருபாகரா காப்பாற்று
தென்கிழக்கு திசையிலிருந்து தீனபந்தோ காப்பாற்றும்
தென்திசை யிலுமென்னை திருவருளால் காப்பாற்றும்
தென்மேற் கிலுமென்னைத் திருவருளாற் காப்பாற்றும்
மேற்குத் திக்கிலென்னை மாலமருகா ரஷிப்பாய்
வடமேற் கிலுமென்னை மால்மருகா ரஷிப்பாய்
வடக்கிலென்னைக் காப்பாற்ற வந்திடுவீர் சற்குருவாய்
வடகிழக்கில் எனக்காக வரவேண்டும் வருவீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராகம் : பீம்ப்ளாஸ்**

பத்துத்திக்குத் தோறுமெனை பறந்துவந்து ரஷிப்பாய்
என்சிகையையும் சிரசினையும் சிவகுரோ ரஷிப்பாய்
நெற்றியும் புருவமும் நினதருள் காக்கட்டும்
புருவங்களுக் கிடையே புருஷோத்தமன் காக்கட்டும்
கண்க ளிரண்டையும் கந்தவேல் காக்கட்டும்
நாசிக ளிரண்டையும் நல்லவேல் காக்கட்டும்
செவிக ளிரண்டையும் சேவற்கொடி காக்கட்டும்
கன்னங்க ளிரண்டையும் காங்கேயன் காக்கட்டும்
உதட்டினையும் தான் உமாசுதன் காக்கட்டும்
நாக்கை நம்முருகன் நயமுடன் காக்கட்டும்
பற்களைக் கந்தன் பலம்கொண்டு காக்கட்டும்
கழுத்தை ஸ்கந்தன் கைகளாற் காக்கட்டும்
தோள்க ளிரண்டையும் தூயவேல் காக்கட்டும்
கைகள் விரல்களைக் கார்த்திகேயன் காக்கட்டும்
மார்பையும் வயிற்றையும் வள்ளிமணாளன்
காக்கட்டும்
மனத்தை முருகன்கை மாத்தடிதான் காக்கட்டும்
இருதயத்தில் ஸ்கந்தன் இனிது நிலைத் திருக்கட்டும்
உதரத்தை எல்லாம் உமை மைந்தன் காக்கட்டும்
நாபிகுஹ்யம் லிங்கம் நவையுடைக் குதத்தோடு
இடுப்பை முழங்காலை இணையான கால்களையும்
புறங்கால் விரல்களையும் பொருந்தும் உகிர்
அனைத்தையுமே
உரோமத் வாரமெல்லாம் உமைபாலா ரஷிப்பாய்
தோல்ரத்தம் மஜ்ஜையையும் மாமிசமென்பு மேதசையும்

**ராகம் : மோகனம்**

ஆறுமுகவா காத்திடுவீர் அமரர் தலைவா காத்திடுவீர்
என் அகங்கார முமகற்றி அறிவொளியா யிருந்தும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா வெனைக்காக்க வேல்கொண்டு வந்திடுவீர்
பாபத்தைப் பொசுக்கிப் பாரெல்லாம் சிறப்புறவே
ஓம் சௌம் சரவணபவ கிரீம்லீம் என்றும்
கலெளம் சௌம் நமஹவென்று சேர்ந்திடடா தாள்
தோறும்
ஓமிருந்து நமஹ வரை ஒன்றாகச் சேர்த்திடடா
ஒன்றாகக் கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி
ஒருமனத் தோடுநீ உருவையும் ஏத்திடடா
முருகனின் மூலமிது முழுமனத்தோ டேத்திட்டால்
மும்மல மகன்றுவிடும் முக்தியுந்தன் கையிலுண்டாம்
முக்தியை வேண்டியுமே எத்திக்கும் செல்லவேண்டாம்
முருகன் இருப்பிடமே முக்தித்தல மாகுமப்பா
இருதயத்தில் முருகனை இருத்திவிடு இக்கணமே
இக்கணமே மூலமந்திரம் ஏத்திவிடு ஏத்திவிடு
மூலமதை ஏத்துவோர்க்கு காலபய மில்லையடா
காலனை நீஜெயிக்க கந்தனைப் பற்றிடடா
சொன்னபடி செய்தால் சுப்ரமண்ய குருநாதன்
தன்னொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே
தானிருப்பான்
ஜகமாயை ஜெயித்திடவே செப்பினேன் மூலமுமே
மூலத்தை நீஜெயித்தே முக்தனு மாகிடடா
அஷர லஷ்சமிதை அன்புடன் ஜபித்துவிடில்
எண்ணிய தெலாம்கிட்டும் எமபய மகன்றோடும்
மூவுலகும் பூஜிக்கும் முருகனருள் முன்னிற்கும்
பூவுலகில் இணையற்ற பூஜ்யனு மாவாய்நீ
கோடித்தரம் ஜெபித்து கோடிகாண வேண்டுமப்பா
கோடிகாணச் சொன்னதைநீ நாடிடுவாய் மனமே
ஜன்மம் கடைத்தேற ஜெபித்திடுவாய் கோடியுமே
வேதாந்த ரகசியமும் வெளியாகு முன்னுள்ளே
வேத சூக்குமேதை விரைவாகப் பற்றிடலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுப்பிர மண்ய குரு சோதியாயுள் தோன்றிடுவான்
அருட்பெருஞ் சோதியான ஆறுமுக சுவாமியுமே
அந்தர் முகமிருந்து ஆட்கொள்வான் சத்தியமாய்
சித்தியையும் முத்தியையும் கந்தகுரு தந்திடுவான்

**ராகம் : அடாணா**

நின்னையே நான்வேண்டி நித்தமும் ஏத்துகிறேன்
மெய்யறிவாகக் கந்தா வந்திடுவாய் இவனுளேநீ
வந்திடுவாய் மருவிடுவாய் பகுத்தறி வாகவேநீ
பகுத்தறி வோடிவனைப் பார்த்திடச் செய்திடப்பா
பகுத்தறி வானகந்தன் பரங்குன்றில் இருக்கின்றான்
பழனியில் நீயும் பழம்ஜோதி யானாய்நீ
பிரமனுக் கருளியவா பிரணவப் பொருளோனே
பிறவா வரமருளியவா பிரம்ம மய மாக்கிடுவாய்
திருச்செந் தூரில்நீ சக்திவேல் தாங்கிவிட்டாய்
பழமுதிர்ச் சோலையில் பரஞ்சோதி மயமானாய்
சுவாமி மலையிலே சிவசுவாமிக் கருளியநீ
குன்றுகள் தோறும் குருவாய் அமர்ந்திட்டாய்
ஸ்கந்த கிரியைநீ சொந்தமாக்கிக் கொண்டனையே
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தாஸ்ரம ஜோதியே
பிறப்பையும் இறப்பையும் பெயர்த்துக் காத்திடுவாய்
பிறவாமை என்கிற பெருவரம் நீ தந்திடுவாய்
தத்துவக் குப்பையை மறந்திடச் செய்திடுவாய்
எந்த நினைப்பையும் எரித்து நீ காத்திடுவாய்
ஸ்கந்தா சரணம் ஸ்கந்தா சரணம்
சரண மடைந்திட்டேன் சடுதியில் வாருமே
சரவண பவனே சரவண பவனே
உன்னரு ளாலேநான் உயிரோ டிருக்கின்றேன்
உயிருக் குயிரான கந்தா உன்னிலென்னைக்
கரைத்திடப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகம் : சிம்மேந்திர மத்திமம்

என்னி லுன்னைக் காண எனக்கு வரமருள்வாய்
சீக்கிரம் வந்து சிவசித்தியும் தந்தருள்வாய்
இடைகலை பிங்கலை ஏதும் அறிந்திலேன் நான்
இந்திரிய மடக்கி இருந்து மறிகிலேன் நான்
ஸ்கந்தாஉன் திருவடியைப் பற்றினேன் சிக்கெனவே
சிக்கெனப் பற்றினேன் செப்பிடுவீர் உபதேசம்
காமக் கசடுகள் யாவையும் களைந்திடுவாய்
சித்த சுத்தியும் ஜபமும் தந்திடுவாய்
நினைப்பெலாம் நின்னையே நினைத்திடச்
செய்திடுவாய்
திருமுருகா உன்னைத் திடமுற நினைத்திடவே
திருவருள் தந்திடுவாய் திருவருள்தான் பொங்கிடவே
திருவருள் ஒன்றிலே நிலைபெறச் செய்திடுவாய்
நிலைபெறச் செய்திடுவாய் நித்யா னந்தமதில்
நித்யானந்தமே நின்னுரு வாகையினால்
அத்வை தானந்தத்தில் இமைப் பொழுது
ஆழ்த்திடுவாய்
ஞான பண்டிதா நான்மறை வித்தகாகேள்
ஸ்கந்த குருநாதா ஸ்கந்தகுரு நாதா கேள்
மெய்ப்பொருள் காட்டி மேன்மை அடைந்திடச்செய்
வினைகள் யாவையுமே வேல்கொண்டு
விரட்டிடுவாய்
தரித் திரியங்களையும் தடிகொண்டு விரட்டிடுவாய்
துக்கங்க ளனைத்தையும் தொலைதூரம்
போக்கிடுவாய்
பாப உடலைப் பரிசுத்த மாக்கிடுவாய்
இன்ப துன்பத்தை இருவிழியால் விரட்டிடுவாய்
ஆசைப் பேய்களை அறவே நசுக்கிடுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகந்தைப் பிசாசை அழித்து ஒழித்திடடா
மெய்யருளால் உன்னருளில் முருகா இருந்திடுவாய்

ராகம் : தன்யாசி

கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
ஆறுமுக மானகுரோ அறிந்திட்டே னுன்மகிமை
இக்கணமே வருவாய் என்ஸ்கந்த குருவேநீ
என்னைக் காத்திடவே எனக்குநீ அருளிடவே
அரைக் கணத்தில் நீயும் ஆடிவரு வாயப்பா
வந்தெனைத் தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ
அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே
சுப்பிர மணியனே சோகம் அகற்றிடுவாய்
ஞான ஸ்கந்தகுரோ ஞானம் அருள்வாய் நீ
ஞான தண்டபாணியே என்னை ஞானபண்டித
னாக்கிடுவாய்
அகந்தையெலா மழித்து அன்பினை ஊட்டிடுவாய்
அன்பு மயமாக்கி ஆட்கொண்டு வையப்பா
அன்பைஎன் உள்ளத்தில் அசைவின்றி நிறுத்திவிடு
அன்பையே கண்ணாக ஆக்கிக் காத்திடுவாய்
உள்ளும் புறமும் உன்னருளால் அன்பையே
உறுதியாக நாலும் பற்றிட உவந்திடுவாய்
எல்லையில்லாத அன்பே இறையொளி என்றாய் நீ
அங்கிங் கெனாதபடி எங்கும் அன்பென்றாய்
அன்பே சிவமும் அன்பே சக்தியும்
அன்பே ஹரியும் அன்பே பிரமனும்
அன்பே தேவரும் அன்பே மனிதரும்
அன்பே நீயும் அன்பே நானும்
அன்பே சத்தியம் அன்பே நித்தியம்
அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம்
அன்பே மௌனம் அன்பே மோட்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே பிரமமும் அன்பே அனைத்து மென்றாய்
அன்பில்லாத இடம் அங்குமிங்கு மில்லையென்றாய்
எங்கும் நிறைந்த அன்பேஎன் குருநாதனப்பா
அன்பில் உறையும் அருட்குரு நாதரேதான்
ஸ்கந்தாஷ் ரமத்தில் கந்தகுரு வானான்காண்
மூவரும் தேவரும் முனிவரும் போற்றிடவே
ஸ்கந்தாஸ் ரமத்தில் ஸ்கந்த ஜோதியுமாம்
ஆத்ம ஜோதியுமாய் அமர்ந்திட்ட ஸ்கந்தகுரு
இருளை அகற்றவே எழுந்திட்ட எங்கள்குரு
எல்லை யில்லாதஉன் இறையொளியைக்
காட்டிடுவாய்
முக்தியைத் தந்திடுவாய் மூவரும் போற்றிடவே
நம்பினேன் உன்னையே நம்பினேன் ஸ்கந்தகுரோ
உன்னையன்றி இவ்வுலகில் ஒன்றுமில்லை
என்றுணர்ந்தேன்

**ராகம் : காம்போதி**

நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால்
விட்டிட மாட்டேன் கந்தா வீட தருள்வீரே
நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்
பிரம மந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்
சுழுமுனை மார்க்கமாய் ஜோதியை காட்டிடுவாய்
சிவயோகி யாகஎனைச் செய்திடும் குருநாதா
ஆசை அறுத்து அரனடியைக் காட்டி விடும்
மெய்யடிய ராக்கி மெய்வீட்டில் இருத்திவிடும்
கொங்கு நாட்டிலே கோயில் கொண்ட ஸ்கந்தகுரோ
கொல்லிமலை மேலே குமரகுரு வானவனே
கஞ்சமலை சித்தர் போற்றும் ஸ்கந்தகிரிகுருநாதா
கருவூரார் போற்றும் காங்கேயா கந்தகுரோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதமலைச் சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ
சென்னிமலைக் குமரா சித்தர்க் கருள்வோனே
சிவவாக்கிய சித்தருனைச் சிவன்மலையில்
போற்றுவரே
பழனியில் போகருமே பாரோர்வாழப்
பிரதிஷ்டித்தான்
புலிப்பாணி சித்தர்களால் புடைசூழ்ந்த குமரகுரோ
கொங்கில் மலிந்திட்ட ஸ்கந்த குருநாதா
கள்ளம் கபடமற்ற வெள்ளையுள்ளம் அருள்வீரே
கற்றவர்க ளோடென்னைக் களிப்புறச் செய்திடுமே
உலகெங்கும் நிறைந்திருந்தும் கந்தகுரு உள்ள இடம்
கந்தகிரி என்பதைநான் கண்டு கொண்டேன் கண்டு
கொண்டேன்.

**ராகம் : ஹம்ஸானந்தி**

நால்வர் அருணகிரி நவமிரண்டு சித்தர்களும்
பக்தர்களும் போற்றும் பழனிமலை முருகாகேள்
கொங்குதேசத்தில் குன்றுதோறும் குடிகொண்டாய்
சீலம் நிறைந்த சேலம்மா நகரத்தில்
கன்னிமார் ஓடையின் மேல் ஸ்கந்தகிரி அதனில்
ஸ்கந்தாஸ் ரமத்தினிலே ஞானஸ்கந்த சத்குருவாய்
அமர்ந்திருக்கும் ஜோதியே ஆதிமூல மானகுரோ
அயர்ச்சியை நீக்கிடுவாய்என் தளர்ச்சியை
அகற்றிடுவாய்
சுகவனேசன் மகனே சுப்ரமண்யே ஜோதியே
பேரின்ப மகிழ்ச்சியையும் பெருகிடச் செய்திடப்பா
பரமா னந்தமதில் எனைமறக்கப் பாலிப்பாய்
மால் மருகா வள்ளிமணவாளா ஸ்கந்தகுரோ
சிவகுமாரா உன்கோயில் ஸ்கந்தகிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுணர்ந்தேன்
ஜோதிப் பிழம்பான சுந்தரனே பழனியப்பா
சிவஞானப் பழமான ஸ்கந்தகுரு நாதா
பழம்நீ என்றதினால் பழனிமலை யிருந்தாயோ
திருவா வினன்குடியில் திருமுருகனானாயோ
குமரா முருகா குருகுகா வேலவனே
அகத்தியர்க் குத்தந்து ஆட்கொண்டாய் தமிழகத்தை
கலியுக வரதனென்று கலசமுனி உனைப்புகழ்ந்தான்
ஔவைக்கு அருள்செய்த அறுமுகா ஸ்கந்தகுரோ
ஒழுக்கமொடு கருணையையும் தவத்தையும்
தந்தருள்வாய்
போகருக் கருள்செய்த புவன சுந்தரனே
தண்டபாணித் தெய்வமே தடுத்தாட் கொண்டிடப்பா
ஆண்டிக் கோலத்தில் அணைத்திடுவாய் தண்டுடனே
தெய்வங்கள் போற்றிடும் தண்டாயுத ஜோதியே
ஸ்கந்தகிரி மேலே ஸ்கந்தஜோதி யானவனே
கடைக்கண்ணால் பார்த்திடப்பா கருணையுள்ள
ஸ்கந்தகுரோ

**ராகம் : பிலஹரி**

ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன்நாமம்
உன்னையன்றி வேறொன்றை ஒருபோதும்
நம்புகிலேன்
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
கந்தனென்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்
புவனேஸ்வரி மைந்தா போற்றினேன் திருவடியை
திருவடியை நம்பினேன் நம்பினேன் திருவடி
சாட்சியாக
புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியே கேள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின் நாமம் ஏத்துவதே நான் செய்யும் தவமாகும்
நாத்தழும் பேறவே ஏத்திடுவேன் நின்நாமம்
முருகா முருகாவென்றே மூச்செல்லாம் விட்டிடுவேன்
உள்ளும் புறமும் ஒரு முருகனையே காண்பேன்
அங்கிங் கெனாதபடி எங்குமே முருகனப்பா
முருகன் இலாவிட்டால் மூவுலக மேதப்பா
அப்பப்பா முருகாநின் அருளே உலகமப்பா
அருளெலாம் முருகன் அன்பெலாம் முருகன்
ஸ்தாவர ஜங்கமாய் ஸ்கந்தனாய் அருவுருவாய்
முருகனாய் முதல்வனாய் ஆனவன் ஸ்கந்தகுரு
கந்தாஸ் ரமமிருக்கும் கந்தகுரு அடிபற்றிச்
சரணம் அடைந்தவர்கள் சாயுச்சியம் பெற்றிடுவர்
சத்தியம் சொல்கின்றேன் சந்தேக மில்லையப்பா
வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ
சந்தேக மில்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்
சத்திய மானதெய்வம் ஸ்கந்த குருநாதன்
சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா

**ராகம் : சுப பந்து வராளி**

சத்தியம் வேறல்ல ஸ்கந்தகுரு வேறல்ல
ஸ்கந்தகுரு வேசத்தியம் சத்தியமே ஸ்கந்தகுரு
சத்தியமாய்ச் சொன்னதை சத்தியமாய் நம்பியே
சத்தியமாய் ஞானமாய் சதானந்த மாகிவிடு
அழிவற்ற பிரம்மமாய் ஆக்கிடுவான் முருகன்
திருமறைகள் திருமுறைகள் செப்புவதும் இதுவேதான்
ஸ்கந்தகுரு கவசமிதை சொந்தமாக்கிக் கொண்டுநீ
பொருளுணர்ந்து ஏத்திடப்பா பொல்லாப்பு
விணையகலும்
பிறவிப் பிணியாலும் பிரம்மானந்த முண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மையிலும் மறுமையிலும் இமையோருன்னைப்
போற்றிடுவர்
மூவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்
அனுதினமும் கவசத்தை அன்புடன் ஏத்திடப்பா
சிரத்தா பக்தியுடன் சிந்தை யொன்றிச் செப்பிடப்பா
கவலைய கன்றிடுமே கந்தனருள் பொங்கிடுமே
பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே
கந்தன் கவசமே கவசமென்று உணர்ந்திடுவாய்
கவசம் ஏத்துவீரேல் கலியை ஜயித்திடலாம்
கலியென்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே
சொன்னபடி செய்து சுகமடைவாய் மனமே நீ
ஸ்கந்தகுரு கவசத்தைக் கருத்தொன்றி ஏத்துவோர்க்கு
அஷ்டைஸ் வர்யந்தரும் அந்தமில்லா இன்பந்தரும்
ஆல்போல் தழைத்திடுவான் அறுகு போல்
வேரோடிடுவான்
வாழையடி வாழையைப் போல் வம்சமதைப்
பெற்றிடுவன்.
பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்த்திடுவேன்
சாந்தியும் சௌக்கியமும் சர்வமங்களமும் பெருகிடுமே.

**ராகம் : கானடா**

ஸ்கந்தகுரு கவசமிதை கருத்திறுத்தி ஏற்றுவீரேல்
கர்வம் காமக்குரோதம் கலிதோஷ மகற்றுவிக்கும்
முன்செய்த வினையகன்று முருகனருள் கிட்டிவிடும்
அறம்பொருள் இன்பம் வீடு அதிக சுலப
மாய்க்கிட்டும்
ஆசாரம் சீலமுடன் ஆதிநேம நிஷ்டையுடன்
கள்ளமிலா வுளத்தோடு கந்தகுரு கவசந்தன்னை
சிரத்தா பக்தியுடன் சிவகுமர னைநினைத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராயணம் செய்வீரேல் பார்க்கலாம் கந்தனையும்
கந்தகுரு கவசமிதை மண்டலம் நிஷ்டையுடன்
பகலிரவு பாராமல் ஒரு மனதாய் பகருவீரேல்
திருமுருகன் வேல்கொண்டு திக்குகள் தோறும்நின்று
காத்திடுவான் கந்தகுரு கவலையில்லை நிச்சயமாய்
ஞான ஸ்கந்தனின் திருவடியை நம்பியே நீ
கந்தகுரு கவசந்தனை ஓதுவதேத மெனவே
உணர்ந்து கொண்டு ஓதுவையேல் உனக்குப்
பெரிதான
இகபர சுகமுண்டாம் என்னுளும் துன்பமில்லை
துன்பம் அகன்று விடும் தொந்தரவு நீங்கிவிடும்
இன்பம் பெருகிவிடும் இஷ்ட சித்தி கூடிவிடும்
பிறவிப் பிணியகற்றி பிரம்ம நிஷ்டை யும்தந்து
காத்து ரஷிக்கும் கந்தகுரு கவசமே.

**ராகம் : காபி**

கவலையை விட்டு நீ கந்தகுரு கவசமிதை
இருந்த படியிருந்து ஏத்திவிடு ஏத்தினால்
தெய்வங்கள் தேவர்கள் சித்தர்கள் பக்தர்கள்
போற்றிடுவர் ஏவலுமே புரிந்திடுவர் நிச்சயமாய்
ஸ்கந்தகுரு கவசம் சம்சயப் பேயோடும்
அஞ்ஞானமும் அகற்றி அருள் ஒளியும் காட்டும்
ஞான ஸ்கந்தகுரு நானென்று முன்நிற்பன்
உள்ளொளி யாயிருந்து உன்னிலவ னாகிடுவன்

**ராகம் : மத்யமாவதி**

தன்னில் உனைக்காட்டி உன்னில் தனைக்காட்டி
எங்கும் தனைக்காட்டி எங்குமுனைக் காட்டிடுவான்
ஸ்கந்தஜோதி யானகந்தன் கந்தகிரி யிருந்து
தண்டாயுதம் தாங்கித் தந்திடுவன் காட்சியுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தன் புகழ்பாடக் கந்தகிரி வாருமினே
கந்தகிரி வந்துநிதம் கண்டுய்மின் ஜகத்தீரே
கலிதோஷ மகற்றுவிக்கும் கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்து பாரில் புகழ்பெறுமின்

**ராகம் : மத்தியமாவதி**

ஸ்கந்தகுரு கவசபலன் பற்றறுத்துப் பரம்கொடுக்கும்
ஒருதரம் கவசமோதின் உள்ளழுக்குப் போகும்
இருதரம் ஏத்துவீரேல் எண்ணிய தெல்லாம் கிட்டும்
மூன்றுதர மோதின் முன்னிற்பவன் ஸ்கந்தகுரு
நான்முறை யோதி தினம் நல்லவரம் பெறுவீர்
ஐந்துமுறை தினமோதி பஞ்சாஷரம் பெறுவீர்
ஆறுமுறை யோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்
ஏழுமுறை தினமேத்தின் எல்லாம் வசமாகும்
ஒன்பது தரமோதின் மரண பயமொழியும்
பத்துதர மேத்தி நித்தம் பற்றறுத்து வாழ்வீரே
கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசிக்
கந்தகுரு கவசமோதி மந்தகிரி ஏறிவிட்டால்
முந்தை வினையெல்லாம் கந்தன் அகற்றிடுவான்
நிந்தைகள் நீங்கிவிடும் நிஷ்டையுமே கைகூடும்
கன்னிமார் ஓடைநீரை கைகளிலே நீ எடுத்துக்
கந்தனென்ற மந்திரத்தைக் கண்மூடி யுருவேற்றி
உச்சியிலும் தெளித்து உட்கொண்டு விட்டால்
சித்த மலம் ஒடுக்கும் சித்தசுத்தியும் கொடுக்கும்
கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே
கண்டு வழிபட்டு கந்தகிரி யேறிடுவீர்
கந்தகிரி யேறிஞான ஸ்கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்துலகில் பாக்கிய மெல்லாம்
பெற்றிடுவீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுப்ரமண்ய சப்தகம்

கந்தனே! கடம்பனே! கருத்தினில் உறைந்திடும்
    கருணை வடிவான குகனே!
கண்களோ பன்னிரண் டிருந்திடினும் ஏழையைக்
    காக்க ஒரு கண்ணு மிலையோ!
சிந்தனை முழுவதும் சிதறிடா வண்ணமுன்
    செம்மலர் பாதங்களே!
சரண் என்று கொண்டுனை சந்ததம் பாடினேன்
    செவிகளில் விழவில்லையோ!
வந்தனை செய்துன்னை வாழ்த்தியே நாளெல்லாம்
    வணங்கிடும் சிறுவன் என்னை
வாழவே வைப்பதும் வேலனே! உனக்கு ஒரு
    விளையாட்டுச் செய்கை யன்றோ!
வந்தெனை இக்கணம் வலியவந்தே
    அருள வேண்டியே பணிந்து நின்றேன்
வளமான திருத்தணியில் வந்து நிதம்
    வாழ்கின்ற வேலனே! சக்தி மகனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை விதங்களில் என் அப்பனே!
உன்னையான் எப்படிப் பாடினாலும்
எத்தனை இடங்களில் என் ஐயனே!
உன்னையான் எப்படி நோக்கினாலும்
எத்தனைபேர் என் குறைகள் யாவுமே
எடுத்து நான் கதறினாலும்
ஏலாமல் இன்னுமேன் என்னையே சோதித்து
எள்ளி நகையாடு கின்றாய்
உத்தமன் உன்னையே ஓர்துணை என்றுதான்
உறுதியாய் பற்றி நின்றேன்
உடனே உன்மயில் மீது ஓடோடி வந்தெனது
உறுவினைகள் யாவும் களைவாய்
பித்தனின் மைந்தனே! பக்தியாற் பிதற்றுமிப்
பித்தனையும் ஆண்டருள்வாய்!
பெருமை பொலி செந்தூரில் புகழ்சேர ஒளிர்கின்ற
பாலனே சக்தி மகனே!

கதியாக உன்பதங் கருத்தினில் கொண்டு நான்
கதறியே அழுகின்றதும்
கொடுமையாம் வறுமையிற் குமைந்து நான்
உன்னருளைக் கூவியே தொழுகின்றதும்
பதியான உன் செவிகள் பன்னிரண்டி
லொன்றிலுமே
பதியாமல் இருப்பதேனோ
படுதுயரம் இனிமேலும் படமுடியா தப்பனே
பார்த்தருள் புரிகுவாயே!
விதியான தென்னைமிக வாட்டியே வதைத்திடவும்
வேறென்றும் செய்வதறியேன்
விழிகளில் நீர்பெருக வீழ்ந்து நான் கதறுவதை
வேடிக்கை பார்ப்பதழகோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துதிபாடி உன்னையே தொழுகின்ற என்துயர்
துடைப்பதுன் கடமையன்றோ
தூய்மைசேர் பழநிதனில் தனியாகத் தவங்கொண்ட
தூயனே! சக்தி மகனே!

மாயவன் மருகனே! மாகாளி மைந்தனே!
மனத்தினில் என்றும் வதியும்
மாயா சொரூபிணியும் மலையரசன் மகளுமாம்
மாசக்தி வேல் கொண்டவா
தூயவன் உன்னையான் தினமுமே பாடியும்
திருவுளம் இரங்க விலையோ
துதிப்பதில் பிழையேது மிருப்பினும் தயவாகப்
பொறுத்தருள் தள்ளிடாதே
நீயெனைத் தள்ளிடினும் நானும் நானுனது பாதமே
நம்பினேன் நாளும் ஐயா!
நெஞ்சமும் உருகியே நீராக விழிகளில்
நாளெல்லாம் ஓட நானும்
ஐயனே! உன்னடிகள் அடைக்கல
மென்றடைந்திட்டேன்
ஆண்டருள் செய்குவாயே!
அழகான ஏரகத் தமருமொரு குருவே!
அன்னையாம் சக்தி மகனே!

பாரதனில் பிறந்திட்டுப் பல கஷ்டம் தான்பட்டு
பாவியேன் மிகவும் நொந்தேன்
பார்த்தருள் புரிகுவாய்! பார்வதியின் மைந்தனே!
பாலகனே! கருணை செய்வாய்!
பேறெதுவும் வேண்டிலேன்! புகழ் வேண்டேன்
உன்பாதப் புகலொன்றே போதுமப்பா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதை நான் படுந்துயரைப் புரிந்து நீ
அருள் புரிந்து பாரெல்லாம் வாழவைப்பாய்
ஆரெதும் சொல்லிடினும் அத்தனையும்
உன்னடியில்
அர்ப்பணித் தமைதி கொள்வேன்
ஆதரவு நீயன்றி ஆருமெனக் கில்லையென
அன்றே நான் கண்டு கொண்டேன்
ஊரெதனில் உறைந்தாலும் உள்ளத்தில் என்றுமே
உன்னை நான் சிக்கவைத்தேன்
உயர்வான பழமுதிர் சோலைதனில் உறைகின்ற
ஒருவனே சக்தி மகனே!

அஷ்டமா சித்திகளும் அண்டியுன் பாதமே
அடைபவர்க் கருள விலையோ?
அற்புதங்கள் பலவாக அனுதினமும் உன்னருளால்
அகிலத்தில் அமைவ தில்லையே?
கஷ்டமே நிறைந்திட்ட கர்மவினை மென்னும்
கடலிலே தள்ளிவிட்டாய்
கடக்குமொரு தோணியாய்க் காட்சியும் தந்தெனைக்
காப்பதுன் கடமை ஐயா!
துஷ்டனாம் சூரனைத் துண்டாக்கியே
தேவர்கள் துயர் தீர்த்தவா!
தொல்வினைகள் சூழ்ந்தெனைத் தொல்லை
செய்யாமலே
தடுத்தெனைத் தாங்கி நிற்பாய்!
இஷ்டமாய் உன்னை என் இதயத்தில் என்றுமே
ஏற்றன்ன என்னை ஏற்பாய்
இலகு புகழ் பரங்குன்றில் இருமாதர்
இணைந்துறையும்
இன்பமே சக்தி மகனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை ஜென்மங்கள் எடுத்தேனோ தெரியாது
இப்பூமி தன்னில் ஐயா!
இனியேது ஜென்மமும் இவ்வேழைக் கில்லையென்
இரங்கி நீ அருள வேண்டும்
முத்தி நீ தரவேண்டி முழுவதுமே உன்னை நான்
முக்காலும் நம்பி வாழ்வேன்
முன்பின்னும் தெரியாது! மூவரசை ஒழித்து நான்
முடிவினில் உன்னைச் சேரவே
அத்தனே! அருட்பதம் அண்டினேன்! அடியனை
ஆண்டருள் செய்கு வாயே!
அன்புடன் என்னை நீ அரவணைத் திகபரம்
இரண்டிலும் வாழ வைப்பாய்
பித்தனாம் எளியேனின் பிதற்றலாமிப் பனுவல்
பாடும் உன் பக்தர் எல்லாம்
பாரிலே சீர்பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடவே
போற்றினேன்! சக்தி மகனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

## நூல்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக் கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட் பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்து முவர்க்கத் தமரரு மடி பேணப்
பத்துத்தலை தத்தக் கணை தொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப் பகல் வட்டத் திகிரியில் இரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பஷ்சத்தொடு ரஷித் தருள்வது மொருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப் பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுகாடத்
திக்குப்பலி அட்டப் பயிரவர்
தொக்குத் தொகு தொக்குத்தொகு தொகு
சித்ரப்பவு ரிக்குத் திரிகட எனவோதக்
கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதற் படைவீடு

## திருப்பரங்குன்றம்

மன்றலங் கொந்துமிசை தெந்தனத் தெந்தனென
வண்டினங் கண்டு தொடர் குழல்மாதர்
மண்டிடும் தொண்டையமு துண்டு
கொண்டன்புமிக
வம்பிடுங் கும்பகன தன்மார்பில்
ஒன்ற அம் பொன்றுவிழி கன்றஅங் கங்குழைய
உந்தியென் கின்றமடு விழுவேனை
உன்சிலம் புங்கனக தண்டையுங் கிண்கிணியும்
ஒண்கடம் பும்புனையும் அடிசேராய்
பன்றியங் கொம்புகம டம்புயங் கஞ்சுரர்கள்
பண்டையென் பங்கமணி பவர்சேயே
பஞ்சரங் கொஞ்சுகிளி வந்துவந் தைந்துகர
பண்டிதன் தம்பியெனும் வயலூரா
சென்றுமுன் குன்றவர்கள் தந்தபெண்
கொண்டுவளர்
செண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை
திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர்
தென்பரங்கு ன்றிலுறை பெருமாளே.

# இரண்டாம் படைவீடு

## திருச்செந்தூர்

தண்டே னுண்டே வண்டார் வஞ்சேர்
தண்டார் மஞ்சுக் குழல்மானார்
தம்பா லன்பார் நெஞ்சே கொண்டே
சம்பா வஞ்சொற் றடிநாயேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டோ யந்தீ மென்கால் விண்டோய்
வண்கா யம்பொய்க் குடில்வேறாய்
வண்கா னம்போ யண்டா முன்பே
வந்தே நின்பொற் கழல்தாராய்
கொண்டாடும் பேர் கொண்டா டுஞ்சூர்
கொன்றாய் வென்றிக் குமரேசா
கொங்கார் வண்டார் பண்பா டுஞ்சீர்
குன்றா மன்றற் கிரியோனே
கண்டா கும்பா லுண்டா யண்டார்
கண்டா கந்தப் புயவேளே
கந்தா மைந்தா ரந்தோள் மைந்தா
கந்தா செந்திற் பெருமாளே.

## மூன்றாம் படைவீடு

### பழநி (திருவாவினன் குடி)

அவனிதனி லேபிறந்து மதலை யெனவேத வழ்ந்து
அழகுபெற வேநடந்து இளைஞோனாய்
அருமழலை யேமிகுந்து குதலைமொழியேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து பதினாறாய்
சிலகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை
யாயுழன்று
திரியுமடி யேனை யுன்ற னடிசேராய்
மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடி யின் மீத ணிந்த மகதேவர்
மனமகிழ வேயணைந்து ஒருபுறம தாகவந்த
மலைமகள்கு மார துங்க வடிவேலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதிகழ்ந்து
படியதிர வேந டந்த கழல் வீரா
பரமபத மேசெ றிந்த முருகனென வேயு கந்து
பழநிமலை மேல மர்ந்த பெருமாளே.

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது
ஈசஎன மானமுன தென்றுமோதும்
ஏழைகள் வியாகுலமி தேதெனவி னாவிலுனை
யேவர்புகழ் வார்மறையு மென்சொலாதோ
நீறுபடு மாழைபொரு மேனியவ வேல அணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல் வேலா
சீறிவரு மாறவுணனாவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடஞ்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே.

## நான்காவது படைவீடு
## திருவேரகம் (சுவாமி மலை)

சரணகம லால யத்தை அரைநிமிஷ நேர மட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பலவினையி லேசனித்த
தமியன்மிடி யால் மயக்க முறுவேனோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளை
செப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்ப மணிவோனே
தருணமிதை யாமி குத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞான முத்தி பரகதியு நீகொ டுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா
அருணதள பாத பத்ம மதுநிதமு மேது தித்த
அழகு திரு வேர கத்தின் முருகோனே

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறவருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வலம்வரும் இளையோனே
சூத மிக வளர் சோலை மருவுசு
வாமி மலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் படைவீடு

## குன்றுதோறாடல் (திருத்தணிகை)

எனக்கென யாவும் படைத்திட நாளும்
இளைப்பொடு காலந் தனிலேயா
எடுத்திடு காயம் தனைக்கொடு மாயும்
இலச்சையி லாதென் பவமாற
உனைப்பல நாளுந் திருப்புக ழாலும்
உரைத்திடு வார்தங் குளிமேவி
உணர்த்திய போதந் தனைப்பிரி யாதொண்
பொலச்சர ணானுந் தொழுவேனா
வினைத்திற மோடன் றெதிர்த்திடும் வீரன்
விழக்கொடு வேள்கொண் றவனீயே
விளப்பென மேலென் றிடக்கய னாரும்
விருப்புற வேதம் புகல்வோனே
சினத்தொடு சூரன் தனைக்கொடு வேலின்
சிரத்தினை மாறும் முருகோனே
தினைப்புன மேவுங் குறக்கொடி யோடுந்
திருத்தணி மேவும் பெருமாளே

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தல ருயிர்க்கும் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம் யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புகழ் உரைக்கும் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தனத்துட னடக்குங் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் பெருமாளே.

## ஆறாவது படைவீடு

### பழமுதிர் சோலை

அகரமுமாகி யதிபனு மாகி யதிகமுமாகி அகமாகி
அயனென வாகி அரியெனவாகி அரனெனவாகி
அவர் மேலாய்
இகரமு மாகி யெவைகளுமாகி யினிமையுமாகி
வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி
வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும்
வடிவோனே
வனமுறைவேட னருளிய பூஜை மகிழ் கதிர்காம
முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு
மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசைமேவு
பெருமாளே

சீர்சிறக்கு மேனி பசேல் பசேல்என
நூபு ரத்தி னோசை கலீர் கலீரென
சேர விட்ட தாள்கள் சிவேல் சிவேலென
வருமானார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக ரத்தின் வாலை சிலோர் சிலோர்களு
நூறு லஷகோடி மயால் மயால்கொடு
தேடி யொக்க வாடி பையோ வையோவென
மடமாதர்

மார்ப டைத்த கோடு பளீர் பளீரென
ஏம லித்தெ னாவி பகீர் பகீரென
மாம சக்கிலாசை யுளோ முளோமென
நினைவோடி

வாடை பற்று வேளை அடா அடாவென
நீம யக்க மேது சொலாய் சொலாயென
வாரம் வைத்த பாத மிதோ இதோஎன
அருள்வாயே

பார தத்தை மேரு வெளீ வெளீ திகழ்
கோடொ டித்த நாளில் வரைஇ வரைஇ பவர்
பானி றக்க ணேசர் குவா குவாகனர்
இளையோனே

பாடன் முக்ய மாது தமிழ் தமிழ்றை
மாமு னிக்கு காதி லுணார் வுணார்விடு
பாசமற்ற வேதகுரு குரு பர குமரேசா
போர்மி குத்த சூரன் விடோம் விடோமென

நேரெ திர்க்க வேலை படீர் படீரென
போய றுத்த போது குபீர் குபீரென
வெகுசோரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமி யுக்க வீசு குகா குகா திகழ்
சோலை வெற்பின் மேவு தெய்வா
தெய்வானை தோள்
பூணி யிச்சை யாறு புயா புயாறுள பெருமாளே.

## கதிர்காமம்

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
ஜெகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவு கதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர் பொருத வீரப் பெருமாள்காண்
அரவு பிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி னோதப் பெருமாளே.

வருபவர்க ளோலை கொண்டு நமனுடைய
தூதரென்று
மடிபிடிய தாக நின்று தொடர்போது
மயலதுபொ லாதவம்பன் விரகுடைய னாகுமென்று
வசைகளுட னேதொ டர்ந்து அடைவார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவியத னாலெ றிந்து சதைகள் தனை யேய ரிந்து
கரியபுன லேசொ ரிந்து விடவேதான்
கழுமுனையி லேயி ரென்று விடுமெனும வேளை
கண்டு
கடுகிவர வேணு மெந்தன் முனமேதான்
பரகிரியு லாவு செந்தி மலையினுட னேயி டும்பன்
பழநிதனி லேயி ருந்த குமரேசா
பதிகள் பல வாயிரங்கள் மலைகள் வெகு கோடி
நின்ற
பதமடியர் காண வந்த கதிர்காமா
அரவுபிறைபூனை தும்பை விலுவமொடு தூர்வை
கொன்றை
யணிவர் சடையாளர் தந்த முருகோனே
அரகரசி வாய சம்பு குருபரகு மார நம்பு
மடியர் தமை யாள வந்த பெருமாளே

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போ லுலாவியே
சரியை கிரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தா
தமையுணர ராகத்தின் வசமாக மேவியே
உமதடியு ளாருக்கு மனுமரண மாயைக்கு
முரியவர் மகாதத்தை யெனுமாய மாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்கிரு பாசித்த மருள்கூர வேணுமே
இமகிரிகு மாரத்தி யநுபவைப ராசக்தி
யெழுதரிய காயத்ரி யுமையாள்கு மாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகாவி சாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய்துபிர தாபிக்கு
மதிகவித சாமர்த்திய கவிராஜ ராஜனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த
அரிய கதிர் காமத்தி லுரியாபி ராமனே.

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா
மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே

## ஆறு திருப்பதி

ஈனமிகுத் துளபிறவி யணுகாதே
யானுமுனக் கடிமையென வகையாக
ஞான அருட் டனையருளி வினைதீர
நாணமகற் றியகருணை புரிவாயே
தானதவத்தினின் மிகுதி பெறுவோனே
சாரதியுத் தமிதுணைவ முருகோனே
ஆனதிருப் பதிகமரு ளிளையோனே
ஆறுதிருப் பதியில் வளர் பெருமாளே

### பொது

அதல சேடனாராட அகிலமேரு மீதாட
அபின காளி தானாட அவளோடன்
றதிர வீசிவாதாடும் விடையிலேறு வாராட
அருகுபூத வேதாள மவையாட
மதுர வாணி தானாட மலரில் வேத னாராட
மருவுவானு ளோராட மதியாட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனச மாமி யாராட நெடியமாம னாராட
மயிலுமாடி நீயாடி வரவேணும்
கதைவிடாததோள் வீமனெதிர் கொள் வாளியால் நீடு
கருதலார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜயனேறு தேர்மீது
கனகவேத கோடுதீ அலைமோதும்
உததிமீதி லேசாயு முலகமூடு சீர்பாத
உவணமூர்த்தி மாமாயன் மருகோனே
உதயதாம மார்பான பிரபுட தேவ மாராஜ
னுளமுமாட வாழ்தேவர் பெருமாளே

எழுகடல் மணலை அளவிடி னதிக
மென திடர் பிறவி அவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறவி
கமலனு மிகவு மயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கிடுகியு னடிகள் தருவாயே
விழுதிக ழழகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசை பெறு மயிலில் வருவோனே
எழுகடல் குமுற அவுணர்களுயிரை
யிரை கொளும் அயிலை யுடையோனே
இமையவர் முனிவர் பரவிய புலியு
ரினில் நட மருவு பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகசபை மேவு மெனது குருநாதர்
கருணைமுரு கேசப் பெருமாள்காண்
கனகநிற வேத னபயமிட மோது
கரகமல சோதிப் பெருமாள்காண்
வினவுமடி யாரை மருவிவிளையாடு
விரகுரச மோகப் பெருமாள்காண்
விதிமுனிவர் தேவ ரருணகிரி நாதர்
விமலசர சோதிப் பெருமாள்காண்
சனகிமண வாளன் மருகனென வேத
சதமகிழ்கு மாரப் பெருமாள்காண்
சரணசிவ காமி யிரணகுல காரி
தருமுருக நாமப் பெருமாள்காண்
இனிதுவன மேவுமயிர் தகுற மாதொ
டியல் பரவு காதற் பெருமாள்காண்
இணையிலிப தோகை மதியின் மகளோடு
மயில் புலியுர் வாழ்பொற் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சிவாய நம நமச்சிவாய



நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத
என்னடியான் உயிரைவவ் வேன் என்றடற்
கூற்றுதைத்த
பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.

## சிவ புராணம்

தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்கா தான்
தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள்
வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமல னடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணைக் கண் காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய்
எண்ணிறைந் தெல்லை யிலாதானே! நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகிமுனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என்னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா வேதங்கள்
ஐயா! என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தனியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!
ஆக்கம் அளவிறுதி, இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய். நின்
தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே!
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போல
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்! வல்வினையேன்
றன்னை
மறைந்திட மூடிய மாயஇருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா! உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல்வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற ஜோதி மலர்ந்த மலர்ச் சுடரே
தேசனே! தேனார் அமுதே! சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே!
ஆரா அமுதே! அளவிலாப் பெம்மானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார்
தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்ணுணர்வே!
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே!
காக்குமெங் காவலனே! காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே! அத்தா! மிக்காய் நின்ற
தோற்றச் சுட ரொளியாய் சொல்லாத
நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே! ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணிக்க வாசக சுவாமிகள்

## திருப்பெருந்துறையில் அருளிய

## திருப்பள்ளி எழுச்சி

போற்றி! என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூங்கழற் கிணை துணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்;
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப் பெருந் துறையுறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடியுடையாய்! எமை உடையாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தரு ளாயே! 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணன் இந்திரன் திசை அணுகினன்; இருள்போய்
அகன்றது; உதயம்நின் மலர்த்திரு முகத்தின்!
கருணையின் சூரியன் எழஎழ, நயனக்
கடி மலர் மல, மற்றண்ணல் அங் கண்ணாம்
திரள் நிரை அறுபதம் முரல்வன; இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகடலே பள்ளி எழுந்தரு ளாயே! 2

கூவின பூங்குயில்; கூவின கோழி;
குருகுகள் இயம்பின; இயம்பின சங்கம்;
ஓவின தாரகை ஒளி; ஒளி உதயத்து
ஒருப்படு கின்றது; விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழற் றாளிணை காட்டாய்;
திருப் பெருந் துறையுறை சிவ பெருமானே!
யாவரும் அறிவரி யாய்; எமக் கெளியாய்;
எம்பெரு மான் பள்ளி எழுந்தரு ளாயே! 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்;
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்;
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்;
திருப் பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான்; பள்ளி எழுந்தரு ளாயே! 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கள் தோறு நின்றாய் எனின் அல்லால்
"போக்கிலன் வரவிலன்" எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி யாய் எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்; பள்ளி எழுந்தருளாயே 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின்றார், அணங்கின் மணவாளா!
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம் பெரு மான் பள்ளி எழுந்தருளாயே! 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டு கொண்டு இங்கெழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தரகோச
மங்கையுள் ளாய்! திருப் பெருந்துறை மன்னா!
எதுஎமைப் ப ணிகொளும் ஆறு? அது கேட்போம்!
எம் பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்?
பந்தணை விரலியும் நீயும் நின் அடி யார்
பழங் குடில் தொறும் எழுந் தருளியபரனே!
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டி
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்!
ஆரமுதே! பள்ளி எழுந்தரு ளாயே! 8

விண்ணகத் தேவரும் நண்ணவு மாட்டா
விழுப்பொ ருளே! உன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச் செய்தானே
வண் திருப் பெருந்துறை யாய்வழி அடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடலமு தே! கரும்பே! விரும் படியார்!
எண்ணகத் தாய்உ லகுக்குயி ரானாய்
எம் பெருமான்! பள்ளி எழுந்தரு ளாயே! 9

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம் அவமே இந்தப்பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்! திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தே! பள்ளி எழுந்தரு ளாயே! 10

⌘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடம் உண்டகண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 1

என்பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடு ஏழு பதினெட்டொ டாறும்
உடனாய நாட்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபாலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 3

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செய மாதுபூமி
திசை தெய்வமான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 4

நஞ்சணி கண்டன் எந்தை மட வாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமுடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளரி யதள தாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமோடு கரடி
ஆளரிநல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 6

செப்பிள முலை நன்மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வன் அடைவான்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 7

வேள்பட விழிசெய் தன்று விடைமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ் கடல் சூழ் இலங்கை அரையன் தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர் மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 9

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியு நாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்த ரொடு அமணை வாதில் அழிவிற்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே 10

தேனமர் பொழில்கொள் ஆலை விளை செந்நெல்
துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான் முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆன சொன்மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே 11

⌘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய
வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே!
ஈதே என் தோழி பரிசேலோர் எம்பாவாய்!

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்? நேரிழையீர்!
சீசி இவையும் சிலவோ? விளையாடி
ஏசுமி டம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர்! ஈசன் பழ அடியீர்! பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த்தாட் கொண்டாற்
பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒள்நித் திலநகையாய் இன்னம் புலர்ந் தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளை
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலை அளித்தாட் கொண்டருளும்
வான் வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனை பாடேலோர் எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என் அரையன் இன்னமுதென்
றெல்லோரும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னந்
துயிலுதியோ
வன்நெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயல்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம்
கேட்டிலையோ
வாழி ஈதென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன் அடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
பாங்காவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்னகுறையும் இலோமேலோர் எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயில்
பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம் காண்ஆரழல்போல்
செய்யா வெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல்
வண்டார்ப்பப்
பூத்திகளும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீர் ஆடேலோர் எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

காதார் குழை ஆடப்பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதப்புனல் ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி
சோதி திறம்பாடி சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்
பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம் ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம் பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்

செங்கண் அவன்பால் திசைமுகன்மால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயம் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

அண்ணாமலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ
றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல் பாய்ந் தாடேலோ
ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற் சுண்ணம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரி கொண்மின்
அத்தன்ஐ யாறன்அம் மானைப்பாடி
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே 1

பூவியல் வார்சடை எம்பிரார்க்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன் எங்கூத்தன்
தேவியும் தானும்வந் தெம்மை யாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே 2

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி யெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன் தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்(கு)
ஏய்த்தபொற் சுண்ணம் இடித்துநாமே 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கை யெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்று வாழ்த்தித்
சேதமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்து நின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 4

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்க ளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 5

உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்(கு)
ஆடக மாமலை அன்னகோவுக்(கு)
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 7

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கை பொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந் திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச் சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மை யிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆடஆட
    மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தம் சிவனொடும் ஆடஆடச்
    செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
    பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
    ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
    வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
    பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத் தேடிச்
    சித்தங் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத் தாடி னானுக்(கு)
    ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே 11

மையமர் கண்டனை வானநாடர்
    மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
    அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
    போதரிக் கண்ணிணைப் பொற்றொடித் தோள்
பையர வல்குல் மடந்தை நல்லீர்
    பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமு(து) எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இத ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 14

ஞானக் கரும்பின் தெளிவைப் பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தை நல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும்வந் தன்பர் தம்மோ(டு)
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர்க னாவினுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப் பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே 16


தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கை யேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல் பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே 17

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடி
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியுமாய் இருளா யினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியுமாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்(கு)
ஆதியும் அந்தமும் ஆயினாருக்(கு)
ஆடற்பொற் சுண்ணம் இடித்துநாமே 20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருப்பொன்னூசல்

அருட்சுத்தி

சீரார் பவளங்கால் முத்தம் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறியினி தமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தரகோச மங்கை
ஆரா அமுதின் அருட்டாளிணை பாடிப்
பேரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ 1

மூன்றங் கிலங்கு நயத்தின் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணா மலரடிகள்
தேன்தங்கித் தித்தித் தமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தரகோச மங்கைக்
கோன்தங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னீறு மாதியும் இல்லான் முனிவர் குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்னீ றெனக்கருளி தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தர கோசமங்கை
மின்னேறு மாடவியன் மாளிகை பாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ 3

நஞ்சமர் கண்டத்தன் அண்டத்தவர் நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தரகோச மங்கை
அஞ்சொலாள் தன்னோடும் கூடி யடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுதம் ஊறிக் கருணை செய்து
அஞ்சல் பிறப்பறுப்பான் தூயபுகழ் பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ 4

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர் குழாம்
நாணாமே உய்ய ஆட்கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச் சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணா வனமுலையீர் பொன்னூச லாடாமோ 5

மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையா னடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டென் தொல்பிறவித்
தீதோடா வண்ணம் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னற் கரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன்தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடுமணி மயில்போல்
என்னத்தன் என்னையுமாட் கொண்டான் எழில்பாடி
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூச லாடாமோ 7

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால வமுதுண்டு தாழ்கடனின் மீதெழுந்து
ஞாலமிகப் பரிமேற் கொண்டு நமை யாண்டான்
சீலம் திகழும் திருவுத்தர கோச மங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித்தாங் குழைந்து பொன்னூச லாடாமோ 8

தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தமையு மாட்கொள்வான்
பங்குலவு கோதையும் தானும் பணி கொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடராஜ பத்து

1. மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறை நான்கின் அடிமுடியும் நீ
மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ
மண்டல மிரண்டெழும்நீ
பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிர்க் குயிரும்நீ
பிறவும்நீ ஒருவன் நீயே
பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ
பெற்ற தாய் தந்தை நீயே
பொன்னும்நீ பொருளும்நீ இருளும்நீ ஒளியும்நீ
போதிக்க வந்தகுருவும்நீ
புகழொணா கிரகங்கள் ஒன்பதும்நீ யிந்த
புவனங்கள் பெற்றவனும் நீ
எண்ணரிய ஜீவகோடி களீன்ற அப்பனே
என் குறைகள் யார்க் குரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கை சிவகாமியாட
மாலாட நூலாட மறையாட திரையாட
மறை தந்த பிரம்மனாட
கோனாட வானுலக கூட்ட மெல்லா மாட
குஞ்சர முகத்தனாட
குண்டல மிரண்டாட தண்டை புலியுடையாட
குழந்தை முருகேசனாட
ஞான சம்பந்தரோடு இந்திரப் பதினெட்டு முனி
அஷ்ட பாலகருமாட
நரை தும்பை யருகாட நந்தி வாகனமாட
நாட்டியப் பெண்களாட
வினையோட யுனைப்பாட யெனைநாடி யிதுவேளை
விருதோடு ஆடி வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே

3. கடலென்ற புவிமீதில் அலையென்ற வுருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கட்டுண்டு நித்த நித்தம்
உடலென்ற கும்பிக்கு உணவென்ற யிரைதேடி
ஓயாம லிரவு பகலும்
உண்டுண் டுறங்குவதைக் கண்ட தேயல்லாது
ஒருபய னடைந் திலேனே
தடமென்ற யிடைகரையில் பந்த பாசங்களெனுந்
தாபாரம் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்றுந்
தமியேனை யிவ் வண்ணமாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையென்று கடைநின்று யேனென்று கேளா
திருப்பதுன் அழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே.

4. பம்புசூ னியமல்ல வைப்பல்ல மாரணந்
தம்பனம் வசியமல்ல
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேச
மதுவல்ல சால மல்ல
அம்பு குண்டுகள் விலக மொழியும் மந்திரமல்ல
ஆகாய குளிகை யல்ல
அன்போடு செய்கின்ற வாத மோடிகளல்ல
அரிய மோகனமு மல்ல
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்ம ரிஷி
கொங்கணர் புலிப் பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனி யிவரெலாங்
கூறிடும் வைத்ய மல்ல
என் மனதுன் னடிவிட்டு நீங்காது நிலைநிற்க
ஏதுனது புகல வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே.

5. நொந்துவந்தே னென்று ஆயிரஞ் சொல்லியும்
செவியென்ன மந்த முண்டோ
நுட்ப நெறியறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தை யுண்டோ
சந்ததமுந் தஞ்சமென் றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்ச முண்டோ
தந்திமுக னறுமுகன் இருபிள்ளை யில்லையோ
தந்தை நீ மலடுதானோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்தையும் ஜாலமும் உன்னிட மிருக்குதே
வினை யொன்று மறிகிலேனே
வேதமும் சாஸ்திரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை யிது வல்லவோ
இந்தவுல கீரேழு மேனளித்தாய் சொல்லு
யினி யுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே.

6. வழிகண்டு உன்னடியைத் துதியாத போதிலும்
வாஞ்சை யில்லாத போதிலும்
வாலாய மாய்க் கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சகமே செய்த போதிலும்
மொழியகனை மொகனை யில்லாமலே பாடினும்
மூர்க்கனே முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமே கவரினும்
முழுகாமியே யாயினும்
பழியெனக் கல்லவோ தாய்தந்தைக் கல்லவோ
பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைவிக்குப் பாதியுட லீந்த நீ
பாலனைக் காக்கொணாதோ
எழில் பெரிய அண்டங்க ளடுக்கா யமைத்தநீ
என்குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே.

7. அன்னை தந்தைகளென்னை ஈன்றதற் கழுவனோ
அறிவிலா ததற் கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக் கழுவனோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பிறப் பென்னவினை செய்தனென் றழுவனோ
என்மூட அறிவுக் கழுவனோ
முன்னிலன் வினைவந்து மூளுமென் றழுவனோ
முக்தி வருமென் றுணர்வனோ
தன்னை நொந்தழுவனோ உன்னை நொந்தழுவனோ
தவமென்ன வென் றழுவனோ
தையலர்க் கழுவனோ மெய்வளர்க் கழுவனோ
தரித்திர திசைக் கழுவனோ
இன்னு மென்னப் பிறவி வருமோவென் றழுவனோ
எல்லா முரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே

8. காயாமுன் மரமீது பூபிஞ் சறுத்தனோ
கன்னியர்கள் பழி கொண்டேனோ
கடனென்று பொருள் பறித்து வயிறெரிந்தனோ
கிளை வழியில் முள்ளிட்டனோ
தாயாருடன் பிறவிக் கென்னவினை செய்தனோ
தந்த பொருளிலை என்றனோ
தானென்று கர்வித்து கொலை களவு செய்தனோ
தவசிகளை யேசினேனோ
வாயாரப் பொய் சொல்லி வீண்பொருள்பறித்தனோ
வானவரைப் பழித்திட்டனோ
வடிவு போல பிறரை சேர்க்கா தடித்தனோ
வந்தபின் யென் செய்தனோ
ஈயாதலோபி யென்றே பெய ரெடுத்தனோ
எல்லாம் பொறுத் தருள்வாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தாயா ரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன
தன்பிறவி யுறவு கோடி
தனமலை குவித்தென்ன கனபெய ரெடுத்தென்ன
தரணியை யாண்டு மென்ன
சேயர்க ளிருந்தென்ன குருவா யிருந்தென்ன
சீடர்க ளிருந்து மென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிக ளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்ன பலன் யெமனோலை
ஒன்றை கண்டு தடுக்க
உதவுமோ யிதுவெலாம் சந்தையுர வென்றுதான்
உன்னிரு பாதம் பிடித்தேன்
யார்மீது உன்மன மிருந்தாலு முன் கடைக்கண்
பார்வை யது போதுமே
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே.

10. இன்னமுஞ் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இரு செவியு மந்தமோ கேளாது அந்தமோ
இதுவுனக் கழகு தானோ
என் அன்னை மோகமோயிது வென்ன சோபமோ
இதுவு முன் செய்கை தானோ
இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
யானாலும் நான் விடுவேனோ
உன்னை விட்டெங்கு சென்றாலும் விழலாவனோ
நான் உனையடுத்துங் கெடுவனோ
ஒகோவி துன்குற்ற மென்குற்ற மொன்றுமில்லை
யுற்றுப்பார் பெற்ற வையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் குற்றமாயினும் உன் குற்றமாயினும்
இனியருளளிக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே.

11. சனி ராகு கேது புதன் சுக்கிரன் செவ்வாய்
குரு சந்திரன் சூரிய னிவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசிபனி ரெண்டையும்
சமமாய் நிறுத்தி யுடனே
பனியொத்த நஷ்சத்திரங்க ளிருபத்தேழும்
பக்குவப் படுத்திப் பின்னால்
பகர்கின்ற கிரணங்கள் பதினொன்றையும்வெட்டிப்
பலரையும் அதட்டி என்முன்
கனிபோலவே பேசியெடு நினைவு நினைக்கின்ற
கசடர் களையுங் கசக்கி
கர்த்தநின் தொண்டராம் தொண்டர்க்குத்
தொண்டர்கள் தொழுத னாக்கி
இனியவள மருவுசிறு மணவைமுனி சாமியெனை
யாள்வதினி யுன்கடன் காண்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லை வாழ் நடராஜனே.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ நாமா வளி

என்னப்ப னல்லவா என் தாயுமல்லவா
பொன்னப்ப னல்லவா பொன்னம் பலத்தவா
ஆடிய பாதமே அம்பல வாணரே
சிதம் பரத்தில் வாழும் சிவகாமி நேசனே
ஆலால சுந்தரம் அற்புத சுந்தரம்
கல்யாண சுந்தரம் கடம்பவன சுந்தரம்
காமாஷி சுந்தரம் மீனாஷி சுந்தரம்
(என்னப்ப னல்லவா)

அம்பலத் தரசே அருமருந்தே
ஆனந்தத் தேனே அருள் விருந்தே
பொது நடத்தரசே புண்ணியனே
புலவ ரெல்லாம் புகழ் கண்ணியனே
சிவ சிவ சிவ சிவ சின்மய தேஜா
சிவ சுந்தர குஞ்சித நடராஜா
மலை தரு மகளே மட மயிலே
மதிமுக அமுதே இளங் குயிலே
ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே
படன விவேக பாம்பர வேதா
நடன சபேச சிதம்பர நாதா
அரிபிர மாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடிய பாதா
கருணா நிதியே சபா பதியே
கதிமா நிதியே பசுபதியே
இக்கரை கடந்திடில் அக்கரையே
இருப்பது சிதம்பர சர்க்கரையே
என்னுயிர் உடம்பொடு சித்தமதே
இனிப்பது நடராசப் புத்தமுதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயர் திருச்சபை யாடகமே
ஆடுதல் ஆனந்த நாடகமே
அம்பலவா சிவா மாதேவா
அம்பலவா இங்கு வா வா வா
நடராஜன் எல்லோர்க்கும் நல்லவனே
நல்ல தெலாஞ்செய வல்லவனே
ஆனந்த நாடகங் கண்டோமே பர
மானந்த போனகங் கொண்டோமே
சங்கர சிவ சிவ மாதேவா
எங்களை ஆட்கொள வா வா வா
நடன சிகாமணி நவ மணியே
திடன கமாமணி சிவமணியே
நடமிடும் அம்பல நன் மணியே
புடமிடு செம்பல பொன் மணியே
உவட்டாது சித்திக்கும் உள்ளமுதே
தெவிட்டாது தித்திக்கும் தெள்ளமுதே
நடராச வள்ளலை நாடுதலே
நந் தொழிலாம் விளையாடுதலே
அருட்பொது நடமிடு தாண்டவனே
அருட் பெருஞ் சோதி என் ஆண்டவனே
சிதம்பரப் பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள் பாட்டெல்லாம் தெருப்பாட்டு
அம்பலப் பாட்டே அருட்பாட்டு
அல்லாத பாட்டெல்லாம் மருட்பாட்டு
அம்பல வாணனை நாடினனே
அவனடியாரொடும் கூடினனே
தம்பத மாபுகழ் பாடினனே
தந்தன வென்று கூத்தாடினனே
நாதாந்த நாட்டுக்கு நாயகரே
நடராஜரே சபா நாயகரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜர் தம் நட நன்னடமே
நடம் புரிகின்றதும் என்னிடமே
சிவகாம வல்லிக்கு மாப்பிளையே
திருவாளன் ஆனவன் சீர்ப்பிள்ளையே
சிவகாம வல்லியைச் சேர்ந்தவனே
சித்தெலாஞ் செய்திடத் தேர்ந்தவனே
இறைவா வரம்தரும் நற்சபையே
எனமறை புகழ்வது சிற்சபையே
என்னிரு கண்ணுள் இருந்தவனே
இறவா தருளும் மருந்தவனே
சிற்சபை அப்பனை உற்றேனே
சித்தி எலாஞ் செயப்பெற்றேனே
அம்பல வாணர் தம் அடியவரே
அருள் அரசாள் மணி முடியவரே
அருட் பெருஞ் ஜோதியைக் கண்டேனே
ஆனந்தத் தெள்ளமுது உண்டேனே
இருட்பெரு மாயையை விண்டேனே
எல்லாம் செய் சித்தியைக் கொண்டேனே

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ வாக்கியர் பாடல்

ஓம் நம: சிவாய ஓம் ஓம் நம: சிவாய
ஓம் நம: சிவாய ஓம் ஓம் நம: சிவாய

### சரியை விலக்கல்

ஓடி ஓடி ஓடி ஓடி உட்கலந்த ஜோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்களும் கழிந்து போய்
வாடி வாடி வாடி வாடி மாண்டுபோன மாந்தர்காள்
கோடி கோடி கோடி கோடி எண்ணிறந்த
கோடியே(ஓம்) 1

### ஞான நிலை

என்னிலே இருந்த ஒன்றையான் அறிந்த தில்லையே
என்னிலே இருந்த ஒன்றையான் அறிந்து
கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றையாவர் காணவல்லரோ
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டனே
(ஓம்) 2

### இதுவு மது

நானதேது நீயதேது நடுவில் நின்ற தேனடா
கோனதேது குருவதேது கூறிடுங் குலாமரே
ஆனதேது அழிவதேது அப்புறத்தில் அப்புறம்
ஈனதேது ராம ராம ராம வென்ற, நாமமே 3

### யோக நிலை

அஞ்செழுத்திலே பிறந்து அஞ்செழுத்திலே வளர்ந்து
அஞ்செழுத்தை ஓதுகின்ற பஞ்சபூத பாவிகாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்செழுத்திலோர் எழுத்து அறிந்து கூற வல்லிரேல்
அஞ்சல் அஞ்சல் என்று நாதன் அம்பலத்தில் ஆடுமே4

**விராட சொரூபம்**

இடது கண்கள் சந்திரன் வலது கண்கள் சூரியன்
இடக்கை சங்கு சக்கரம் வலக்கை சூல மான் மழு
எடுத்த பாதம் நீண்முடி எண்திசைக்கும் அப்புறம்
உடல் கலந்து நின்றமாயம் யாவர் காண வல்லரோ 5

**தெய்வ சொரூபம்**

உருவமல்ல வெளியுமல்ல வொன்றைமேவி நின்றதல்ல
மருவுமல்ல காதமல்ல மற்றதல்ல அற்றதல்ல
பெரியதல்ல சிறியதல்ல பேசுமாவி தானு மல்ல
அரியதாகி நின்ற நேர்மை யாவர்காணவல்லரோ (ஓம்)6

**தேக நிலை கூறல்**

மண் கலங் கவிழ்ந்த போது வைத்து வைத்து
அடுக்குவார்
வெங்கலங் கவிழ்ந்த போது வேணுமென்று
பேணுவார்
நம்கலங் கவிழ்ந்த போது நாறுமென்று போடுவார்
எண் கலந்து நின்ற மாயமென்ன மாயமீசனே 7

**அஷர நிலை**

ஆனவ ஞ்செழுத்துளே அண்டமும் அகண்டமும்
ஆனவ ஞ்செழுத்துளே ஆதியான மூவரும்
ஆனவ ஞ்செழுத்துளே அகாரமும் மகாரமும்
ஆனவ ஞ்செழுத்துளே அடங்கலாவ லுற்றதே (ஓம்) 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதுவு மது**

நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை
நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாய்கை மாய்கையை
அனைத்துமாய் அகண்டமாய் அனாதிமுன்
அனாதியாய்
எனக்குள் நீ உனக்குள் நான் இருக்குமாறு எங்ஙனே
(ஓம்) 9

**ஞான நிலை**

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்கள் எத்தனை
பாழிலே செபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனை
மிண்டராய்த் திரிந்தபோது இரைத்த நீர்கள் எத்தனை
மீளவுஞ் சிவாலயங்கள் சூழவந்தது எத்தனை (ஓம்) 10

**ஞானம்**

அம்பலத்தை அம்புகொண்டு அசங்கென்றால்
அசங்குமோ
கம்பமற்ற பாற்கடல் கலங்கு என்றால் கலங்குமோ
இன்பமற்ற யோகியை இருளும் வந்து அணுகுமோ
செம் பொன்னம் பலத்துளே தெளிந்ததே சிவாயமே
(ஓம்) 11

**அஷர நிலை**

அவ்வென்னும் எழுத்தினால் அகண்டம் ஏழும்
ஆகினாய்
உவ்வென்னும் எழுத்தினால் உருத்தரித்து நின்றனை
மவ்வென்னும் எழுத்தினால் மயங்கினார்கள் வையகம்
அவ்வும் உவ்வும் மவ்வுமாய் அமர்ந்ததே சிவாயமே 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிரணவம்

மூன்று மண்டலத்திலும் முட்டி நின்ற தூணிலும்
நான்ற பாம்பின் வாயினும் நவின்றெழுந்த அஷரம்
ஈன்ற தாயும் அப்பரும் எடுத்துரைத்த மந்திரம்
தோன்றுமோர் எழுத்துளே சொல்ல வெங்குதில்லையே
(ஓம்) 13

### பஞ்சாட்சர மகிமை

நமச்சிவாய அஞ்செழுத்தும் நிற்குமே நிலைகளும்
நமச்சிவாய மஞ்சுதஞ்சும் புராணமான மாய்கையை
நமச்சிவாய அஞ்செழுத்தும் நம்முள்ளே இருக்கவே
நமச்சிவாய உண்மையை நன்குரைசெய் நாதனே(ஓம்)14

### கடவுளின் உண்மை கூறல்

இல்லை இல்லை இல்லை என்று இயம்புகின்ற
ஏழைகாள்
இல்லை என்று நின்ற ஒன்றை இல்லை என்ன
லாகுமோ
இல்லை யல்ல என்று மல்ல இரண்டும் ஒன்றி
நின்றதை
எல்லை கண்டு கொண்டோ ரினிப் பிறப்ப
தில்லையே(ஓம்) 15

### இராம நாம மகிமை

கார கார கார கார காவல் ஊழி காவலன்
போர போர போர போர போரில் நின்ற
புண்ணியன்
மார மார மார மார மரங்கள் ஏழும் எய்த சிறீ
ராம ராம ராம ராம ராம என்னும் நாமமே (ஓம்)16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அத்து விதம்

விண்ணிலுள்ள தேவர்கள் அறியொணாத
மெய்ப்பொருள்
கண்ணில் ஆணியாகவே கலந்து நின்ற எம்பிரான்
மண்ணிலாம் பிறப்பறுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ணலாரும் எம்முளே அமர்ந்து வாழ்வது
உண்மையோ (ஓம்) 17

### அம்பலம்

அகாரமான தம்பலம் அனாதியான தம்பலம்
உகாரமான தம்பலம் உண்மையான தம்பலம்
மகாரமான தம்பலம் வடிவமான தம்பலம்
சிகாரமான தம்பலம் தெளிந்ததே சிவாயமே (ஓம்) 18

### பஞ்சாட்சரம்

உண்மையான மந்திரம் ஒளியிலே இருந்திடும்
தண்மையான மந்திரம் சமைந்த ரூபமாகியே
வெண்மையான மந்திரம் விளைந்து நீறதானதே
உண்மையான மந்திரம் தோன்றுமே சிவாயமே (ஓம்)19

### பஞ்சாட்சர மகிமை

ஓம் நம சிவாயமே உணர்ந்துமெய் உணர்ந்தபின்
ஓம் நம சிவாயமே உணர்ந்துமெய் தெளிந்தபின்
ஓம் நம சிவாயமே உணர்ந்துமெய் உணர்ந்தபின்
ஓம் நம சிவாயமே உட்கலந்து நிற்குமே 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ்

**(குமர குருபர சுவாமிகள் அருளியது)**



குருமணி வெயில்விட மரகத நிழல்விரி குன்றே நின்றதும்
குழலிசை பழகிய மழைமுகில் எழவெழ கொம்பே வெம்பாச
மருவிய பிணிகெட மலைதரும் அருமைம ருந்தே சந்தானம்
வளர்ப்புவ னமுமுணர் வருமரு மறையின்வ ரம்பே செம்
போதில்
கருணையின் முழுகிய கயறிரி பசியக ரும்பே வெண்சோதிக்
கலைமதி மரபிலொ ரிளமதி யெனவளர்கன்றே
யென்றோதும்
திருமகள் கலைமக டலைமகண் மலைமகள் செங்கோ
செங்கீரை
தெளிதமிழ் மதுரையில் வளருமொ ரிளமயில் செங்கோ
செங்கீரை 1

முது சொற் புலவர்தெ ளித்தப சுந்தமிழ்
நூல் பாழ் போகமே
முளரிக் கடவுள்ப டைத்தவ சுந்தரை
கீழ்மே லாகாமே
அதிரப் பொருதுக லிப்பகை ஞன்றமிழ்
நீர்நா டாளாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிலத் துயிர்கள யர்த்தும றங்கடை
நீணீர் தோயாமே
சிதைவுற் றரசிய னற்றரு மங்குடி
போய்மாய் வாகாமே
செழியர்க் கபயரு மொப்பென நின்றுண
ராதா ரோதாமே
மதுரைப் பதிதழை யத்தழை யுங்கொடி
தாலோ தாலேலோ 2

சென்றிடு வாளிகள் கூளிகள் காளிகள்
ஞாளியி லாளியெனச்
செருமலை செம்மலை முதலியர் சிந்தச்
சிந்திட நந்தி பிரான்
நின்றில னோடலு முன்னழ கும்மவள்
பின்னழ குங்காணா
நிலவுவி ரிந்திடு குறுநகை கொண்டு
நெடுங்கயி லைக்கிரியின்
முன்றிலி னாடன் மறந்தம ராடியொர்
மூரிச் சிலை குனியா
முரிபுரு வச்சிலை கடைகுனி யச்சில
முளரிக் கணை தொட்டுக்
குன்றவி லாளியை வென்ற தடாதகை
கொட்டுக சப்பாணி
குடை நிழ லிற்புவி மகளை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி 3

உருகி யுருகி நெக்கு நெக்குள்
உடைந்து கசிந்திட டகும்பூறும்
உழுவ லன்பற் பழவடியார்
உள்ளத் தடத்தி லூற்றெடுத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருகு பரமா னந்த வெள்ளப்
பெருக்கே சிறியேம் பெற்றபெரும்
பேறே யூறு நறை கூந்தற்
பிடியே கொடி நுண் ணுசுப் பொசிய
வருகுங் குமக்குன் றிரண் டேந்தும்
மலர்ப்பூங் கொம்பே தீங்குழலின்
மதுரங் கனிந்த பசுங்குதலை
மழலை யரும்பச் சேதாம்பல்
முருகு விரியுஞ் செங்கனி வாய்
முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முந்தந் தருகவே 4

கோடுங் குவடும் பொரு தரங்கக்
குமரித் துறையிற் படுமுத்தும்
கொற்கைத் துறையிற் றுறைவாணர்
குளிக்குஞ் சலாபக் குவான்முத்தும்
ஆடும் பெருந்தண் டுறைப் பொருதை
ஆற்றிற் படுதெண் ணிலா முத்தும்
அந்தண் பொதியத் தடஞ்சாரல்
அருவி சொரியும் குளிர் முத்தும்
வாடுங் கொடி நுண் ணுசுப் பொசிய
மடவ மகளி ருடனாடும்
வண்டற் றுறைக்கு வைத்து நெய்த்து
மணந்தாழ் நறுமென் புகைப்படலம்
மூடுங் குழலாய் நின் கனிவாய்
முத்தந் தருக முத்தமே
முக்கட் சுடர்க்கு விருந்திடும்
முலையாய் முத்தந் தருகவே 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறை பழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகு நறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கை யகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம் வாய்
மடுக்குங் குழற்கோ டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே 6

பெருந்தே னிறைக்கு நறைக் கூந்தற்
பிடியே வருக முழுஞானப்
பெருக்கே வருக பிறை மௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடு நல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமா னந்தத்தின்
விளைவே வருக பழமறையின்
குருந்தே வருக வருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக் கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே 7

எண்ணில் பல புவனப் பெருந்தட்டை யூடுருவி
இவள்பெரும் புகழ் நெடு நிலா
எங்கணு நிறைந்திடுவ தங்கதனின் மெள்ளநீ
எள்ளவு மொண்டு கொண்டு
வெண்ணிலவு பொழிவது கிடைத்தனை மடுத்திவள்
விழிக்கடை கொழித்த கருணை
வெள்ளத் திளைத்தாடு பெற்றியாற் றண்ணளி
விளைப்பதும் பெற்றனை கொலாம்
மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பது னிடத்தம் மை
வைத்திடுஞ் சக்தியே காண்
மற்றொரு சுதந்திரம் நினக்கென இலைக்கலை
மதிக்கடவு ணீயு முணர்வாய்
அண்ணலங் களியானை யரசர்கோ மகளுடன்
அம்புலி யாடவாவே
ஆணிப்பொன் வில்லிபுணர் மாணிக்க வல்லியுடன்
அம்புலி யாட வாவே 8

ஒள்ளொளி மரகத மும்முழு நீலமும்
ஒண்டர ளத்திரளும்
ஒழு கொளி பொங்க விழைத்திடு மம்மனை
ஒரு மூன் றடைவி லெடாக்
கள்ளவிழ் கோதை விசும்புற வீசுவ
கண்ணுதல் பாற் செலநின்
கையில் வளர்த்த பசுங்கிளி யும்வளர்
காமர் கருங் குயிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை வெள்ளோதிம் மும்முறை முறையாற்
பெருகிய காதலை மேற்
பேச விடுப்ப கடுப்ப வணைத்தொரு
பெடையோ டரச அனம்
அன்னல் வயற்றுயின் மதுரைத் துரைமகள்
ஆடுக வம்மனையே
அழகு தழைந்தகல் யாண சவுந்தரி
ஆடுக வம்மனையே 9

பண்ணாறு கிளிமொழிப் பாவைநின் றிருமேனி
பகரொளி விரிப்ப வந்தண்
பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடிதாய்ப்
பருமுத்த மரகதமதாய்
தண்ணாறு மல்லல் துறைச் சிறை அனங்கிளி
தழைக்கும் கலாமஞ்ஞையாய்ச்
சகலமு நின்றிருச் சொரூபமென் றோலிடும்
சதுர் மறைப் பொருள் வெளியிடக்
கண்ணாறு குழலியர் குடக்கொங்கை பொங்குசெங்
களபமுங் கத்தூரியும்
கப்புரமும் ஒக்கக் கரைத்தோடி வாணியும்
காளிந்தி யுங்கங்கையாம்
விண்ணாறும் அள்வளாய் விளையாடு புதுவகை
வெள்ள நீ ராடி யருளே
விடைக்கொடி யவர்க்கொரு கயற்கொடி கொடுத்த
கொடி
வெள்ளநீ ராடி யருளே 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்குஞ் சுவைப்பாட லமுதொழுக வொழுகுபொன்
திருவூசல் பாடி யாடச்
சிவபிரான் திருமுடி அசைப்பமுடி மேற் பொங்கு
செங்கணா வரசகிலம் வைத்
தார்க்கும் பணாடவி யசைப்பச் சராசரமும்
அசைகின்ற தம்மனை யசைந்
தாடலா லண்டமும் அகண்டபரி ரண்டமும்
அசைந்தாடு கின்ற தேய்ப்பக்
கார்க்கொந் தனக்கோதை மடவியர் குழற்கூட்டு
கமழ் நறும் புகை விண் மிசைக்
கைபரந் தெழுவதுரு மாறிரவி மண்டலம்
கைக்கொள இருட்படலம் வான்
போர்க்கின்ற தொக்குமது ராபுரி மடக்கிள்ளை
பொன்னூச லாடியருளே
புழுகு நெய்ச் சொக்கர்திரு அழகினுக் கொத்தகொடி
பொன்னூசல் ஆடியருளே.



# மதுரை மீனாட்சி ஸ்தோத்திரம்

அம்ப கதம்ப வனஸ்த்திர வாசினி
அம்புஜ லோசனி அமர நுதே
அதி மிருத பாஷிணி அம்ருத கடாஷிணி
ஆச்ருத ரஷணி ஹரஸ ஹிதே
சம்பர வைரி சதார்ச்சித சரண
சரோ ருஹ நூபுர சருதி விநு தே
ஜெய ஜெய ஹே ஜகதீஸ்வரி சங்கரி
மதுரா நாயகி பாலய மாம் 1

சுந்தர வாம சரீரணி சுலலித
வேஷிணி லம்போதர ஜனனீ
சுரபதி பூஜித பதகமலே கல
ஹம்ச சமான மருது தமனீ
சந்தன சர்ச்சித குச மண்டல மணி
பூஷணி மன்மத பய சமனீ
ஜெய ஜெய ஹே ஜகதீச்வரி சங்கரி
மதுரா நாயகி பாலய மாம் 2

இஷ்ஷ கோதண்ட பாசாங்குச பஞ்ச
குசுமாசர சோபித கரகமலே
லஷ்ஸ்தல அலங்கிருத பீதாம்பர
கஞ்சுக தாரிணி அதி விமலே
அஷ்ஷர ரூபிணி ஆத்ம பிர காசினி
அபார கருணாமய லீலே
ஜெய ஜெய ஹோ ஜெகதீச்வரி சங்கரி
மதுரா நாயகி பாலய மாம் 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிந்து திரிகோண சிறீசக்ர நிவாசினி
பிரம விஷ்ணு பூஜித சரணே
பில்வார்ச்சன பிரய சிவ ஹ்ருதயேச்வரி
பிருகன் நாயகி பவ பய ஹரணே
மந்த கமனி மதுசுதன் சோதரி
மாதங்கி மரகத வர்ணே
ஜெய ஜெய ஹோ ஜெகதீச்வரி சங்கரி
மதுரா நாயகி பாலய மாம் 4

கேசா அலங்கிருத கிரீட சோபித
பாசமான லாவண்ய முகே
கேயூர குண்டல கடக கங்கணமணி
ஹார சுசோபித கண்டயுகே
வாசாம கோசர வைபவ சுசரிதே
வாசவ பூஜித சரணயுகே
ஜெய ஜெய ஹே ஜெகதீச்வரி சங்கரி
மதுரா நாயகி பாலய மாம் 5

பரிமள பஷ்ப விராஜித பன்னக
வேணி ரலங்கிருத சந்த்ர தரே
பாக்கிய பிரதான சீமந்த சிந்தூர
அருணோதய பாஸ்கர ரூபதரே
ஸரிகம பதநீ ஸப்த ஸ்வர
ஸங்கீத நந்த வினோத கரே
ஜெய ஜெய ஹே ஜெகதீச்வரி சங்கரி
மதுரா நாயகி பாலய மாம் 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டமி சந்த்ர சமான லலாட
அலங்கிருத குங்கும திலக தரே
அதி சுகுமார - சரீர மனோஹர
சுந்தர ஹ்ருதயா-னந்த-கரே
இஷ்ட வரப்பிரத சரண-சரோருஹ
த்ராஷா ரச ச்ருங்கார-கரே
ஜெய்-ஜெய்-ஹே ஜகதீச்வரி சங்கரி
மதுரா-நாயகி பாலய மாம் 7

மானச பங்கஜ விகிசித பாஸ்கர
ரூபிணி மஹமாத்புத-லீலே
மன்மத-வைரி-மனோஹரி மதுரிபு
சோதரி-மங்கள குண-ஜாலே
கான-சுதாரச-மஞ்ஜுள-பாஷிணி
காஞ்சன மாலா வர-பாலே
ஜெய-ஜெய-ஹே-ஜெகதீச்வரி-சங்கரி
மதுரா-நாயகி-பாலய மாம் 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மீனாட்சியம்மை கலிவெண்பா

திருப் போரூர் சிதம்பர சுவாமிகள் அருளியது

அங்கயற்கு மாற்கும் அரியபெரு மானிடஞ்சேர்
அங்கயற்கணம்மைக் கணியவே - அங்கயத்தின்
மாமுகங்கொள் கோமானை வாழ்த்திக் கலிவெண்பா
நாமுகந்து பாடுவோ நன்கு

## கலி வெண்பா

1. சீராரும் பூங்கமலத் தெள்ளமுதே சேயிழையே
காராரு மேனிக் கருங்குயிலே- ஆராயும்

2. வேத முதலாகி நின்ற மெய்ப்பொருளே
மிண்ணொளியே
ஆதி பராபரையே அம்பிகையே-சோதியே

3. அண்டமெல்லாம் போற்றும் அரும் பொருளே
யாரணங்கே
எண்டிசைக்குந் தாயான ஈஸ்வரியே
தெண்டிரையில்

4. வந்தவமு தேயென்று மாறாமலே நினைப்பார்
சிந்தைதனி லேயுறையுஞ் செல்வியே-அந்தமிலா

5. மாயோன் தனக்கிளைய வல்லியே மாமயிலோன்
தாயே பராபரையே சங்கரியே-தூய வெளி

6. மன்னுங் கயிலாச மாமயிலே மேருவெனும்
பொன்னங் கிரியுடைய பூங்கொடியே-அன்னமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அட்டகுல வெற்பாய் அமர்ந்தவளே ஆதியற்ற
எட்டெட்டுத் தானா யிருந்தவளே-முட்டவெங்கும்

8. அவ் வெழுத்தாய் நின்ற அறம்பொருளே
யாரணங்கே
உவ் வெழுத்தாய் நின்றதொரு உமையே-
எவ்வெழுத்தும்

9. தானாகி நின்ற தொரு தற்பரையே யெவ்வுயிர்க்கும்
ஊனாகி நின்றதோர் உத்தமியே-கோனாய்ப்

10. படியளக்க மால்பார் பதினான்கு மொக்க
அடியவரை யீடேற்றும் அன்னாய்-முடிவிலா

11. ஓங்காரத் துட்பொருளே யுற்ற நவ கோணத்தில்
ரீங்காரந் தன்னி லிருப்பவளே-பாங்கான

12. முக்கோணத் துள்ளிருக்கு மூர்த்தியே மூவிரண்டாஞ்
சட்கோணத் துள்ளிருக்குஞ் சக்தியே-மிக்க-புகழ்

13. எண்ணிரண்டாங் கோட்டில் இருப்பவளே-
யெவ்வுயிர்க்கும்
பண்ணிசைந்த பாட்டின் பழம் பொருளே-
விண்ணுலகின்

14. மேற்பட்டங் கூடுருவி மேலாகி நின்ற தொரு
நாற்பத்து முக்கோண நாயகியே-சீர்ப்பெற்ற

15. பஞ்சகோ ணத்திருந்த பைங்கிளியே பார் முழுதுந்
தஞ்சமது வாகிநின்ற தையலே-செஞ்சொன் மறைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. சொல்லே பொருளே சுவையே அறுசுவையே
எல்லாப் புவிக்கும் இறைவியே-தொல்லை

17. எறும்பு கடை யானைதலை யெண்ணி லுயிர்க்கும்
உறும் பொருளா யங்கங் குணர்வாய்-
பெறும்பயனாய்

18. ஆறாது தத்துவமாய் ஐயிரண்டும் வாயுவாய்க்
கூறாய்த் திசைபத்தின் கூட்டமாய்ப்-பேறான

19. அஞ்செழுத்தா யெட்டெழுத்தா யைம்பத்தோ
ரக்கரமாய்
பஞ்சவர்ண மாய்ப்பஞ்ச தேவதையாய் வஞ்சமற்ற

20. ஆறாதாரப் பொருளாய் யையைந்தா யைம்மூன்றாய்
வீறான சக்கரத்தின் மின்னொளியாய்க்-கூறாங்

21. கருவிகர ணாதிகளாய்க் கைகலந்து நின்ற
பெரியதொரு மாயைப் பிரிவா-யுரியதொரு

22. தோத்திரத்திற் சத்தமாய்த் தொக்கிற் பரிசமாய்
நேத்திரத்திற் பேருருவாய் நீக்கமிலா-நாத்தலனின்

23. மெத்திரத மாய் மூக்கின் மேவுகந்த மாய்ப்பிறவாய்
மத்தபிர மத்த வயிரவியாய்ச்-சுத்த

24. துரியமதாய்ப் பின்னுந் துரியாதீ தத்தின்
அரிய சிலம்பொலியும் ஆர்ப்பத்-தெரிவரிதாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. நாடுதனிற் சென்றிரந்து நற்புவரி கொண்டு
தொந்தம்
ஆடுகின்ற பார்ப்பதியே அம்பிகையே-நாடிக்

26. களங்கமற வேதான் கரும்புருவந் தன்னிற்
பளிங் கொளியாய் நின்ற பரமே-வளம் பெறவே

27. கண்ணிரண்டி னுள்ளே கருணைத் திருவடிவாய்ப்
புண்ணியமாய் நின்றருளும் பூவையே-
பண்ணமைந்த

28. நாசி நுனிமேல் நடு வெழுந்த தீபமாய்
ஓசை விந்து நாதாந்தத் துட் பொருளாய்-நேசமுடன்

29. அஞ்சு முகமாய் அகண்டபரி பூரணமாய்
பஞ்சபூத தம்மான பைங்கிளியே-கஞ்சமலர்ப்

30. பாத மிரண்டாகிப் பச்சைநிறந் தானாகி
ஆதிமுத லாகி நின்ற அம்பரமே-தீ திலா

31. நெற்றிதனிற் கண்ணாகி நிட்களரு பப்பொருளாய்
உற்றவெளி யாகிநின்ற உத்தமியே பற்றிநின்ற

32. ஆகாயத் தின்னொளியாம் அந்தரத்தின் ரூபமாய்
மேகாதிக் குள்ளே விளைபொருளாய்-வாகாம்

33. இடைபிங் கலை யிரண்டுக்கு மெட்டாக்
கடையுஞ் சுழுமுனையாய்க் காவாய்-மடலவிழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. மூலாதாரத் தொளியாய் மும்மண் டலங்கடந்த
மேலாதா ரத்திருந்த வெண்மதியாய்ப்-பாலூறல்

35. உண்ணுஞ் சிவயோக வுத்தமியே மெய்த்தவமே
பண்ணுமறை வேதப் பழம்பொருளே-எண்ணரிய

36. மெஞ்ஞான வித்தே விளக்கொளியே மெய்ச்சுடரே
அஞ்ஞான மே யகற்றும் அம்மையே-பைந்நாகம்

37. பூண்டசி வனாரிடத்துப் பூங்கொடியே
பாங்குடனே
தாண்டவமா டப்பவுரி தாளமொத்தி-யாண்டியுடன்

38. ஆடுங் கூத் தாடிச்சி யம்மனைபந் தாடிச்சி
தேடியுமால் காணாச் சிவசக்தி-நாடியுனைப்

39. போற்றுமடி யார்கள்வினை போக்கியே
யஞ்சலென்று
தோற்றுகின்ற வம்மை துடியிடைச்சி சாற்றரிய

40. பச்சை நிறத்தி பவளக் கொடியிடைச்சி
கச்சைப் பொருமுலைச்சி கைவளைச்சி-கொச்சை

41. மலையரையன் பெற்ற மலைச்சி கலைச்சி
நிலையறிவே தாந்த நிலைச்சி-அலையாத

42. அன்ன நடைச்சி அருமறைச்சி ஆண்டிச்சி
கன்னல் மொழிச்சி கருணைச்சி-பன்னு தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. வாய்ச்சி சடைச்சி வடிவுடை மங்கைச்சி
பேய்ச்சி யிளமுலைச்சி பேதைச்சி-காய்ச்சிய பால்

44. வெண்ணெய் மொழிச்சி வெளிச்சி வெளியிடைச்சி
அண்ணுபுரந் தீயிட்ட அம்படைச்சி-நண்ணவரும்

45. கொப்பு குழைச்சி குவளை பொருவிழிச்சி
அப்புச் சடைச்சி சிவாகமச்சி-மெய்ப்பாங்

46. கருப்புச் சிலைச்சி யலைச்சி வலைச்சி
மருப்புத் தனத்தி மவுனத்தி-பொருப்பிடத்தி

47. தாமப் புயத்தி சமர்த்தி தருமத்தி
நாமச் சிவபுரத்தி நாரணத்தி-தேமருவுங்

48. காரணத்தி பூத கணத்தி தனபார
வாரணத்தி யட்டதிக்கு மாரணத்தி-பூரணத்தி

49. பரதபரிபுரத்தி பங்கயத்தி செங்கரத்தி
சோதி மணிநிறத்தி சொப்பனத்தி-பாதிமதி

50. சூடுகின்ற சொக்கருடன் துய்யப் புலித்
தோலுடுத்திக்
காடுதனில் வீற்றிருக்கும் காரணியே-நாடறியுஞ்

51. சேணிச்சி நல்ல சிறுத்தொண்டன் பிள்ளையறுத்(து)
ஊணிச்சி நஞ்சமுதாம் ஊணிச்சி-பாணிச்சி

52. பாசாங் குசத்தி பரத்தி பருப்பதத்தி
காயாம்பூ மேனிக் கனதனத்தி மாசிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. அம்பரத்தி யைம்புலத்தி யானதொரு வேதாந்த
உம்பருக்கு மெட்டாத உத்தமத்தி செம்பொன்
வளைச்சி

54. செட்டிச்சி வைகைதனிற் சென்று வெட்டி
மண்சுமந்த
ஒட்டச்சி பூதியணி யுத்தளத்தி அட்டத்திக்கும்

55. மின்னே விளக்கே விலையில்லாச் சீவரத்னப்
பொன்னே நவமணியே பூங்கிளியே-இன்னமுதே

56. மாணிக்க வல்லியே மாமரக தப்பணியே
ஆணிக் கனகத் தரும்பொருளே மாணுற்ற

57. சிங்கார வல்லியே செம்பொற் சிலைவளைத்த
கங்காளற் கன்பான கண்மணியே-மங்காத

58. தெய்வக் குலக் கொழுந்தே செம்பட் டுடைத்திருவே
ஐவருக்குத் தாயாய் அமர்ந்தவளே-மெய்யருக்குச்

59. சித்தி கொடுக்குஞ் சிவானந்தி யன்பருக்கு
முத்திகொடுக் குஞ்ஞான(ம்) மூர்த்தியே எத்திசைக்கும்

60. தாயகமாய் சூழ்தா வரசங்க மம்விளக்குந்
தூயசுடர் மூன்றான சூக்குமமே-வேயீன்ற

61. நித்திலமே கற்பகமே நின்மனமே நன்மணியே
சுத்தபரி பூரணியே சுந்தரியே-அத்தருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. வாதாடு மங்கையே மாமந்த்ர ரூபியே
வேதாந்தி யேகமல மெல்லியலே-நாதாந்த

63. மாயேச் சுவரியே மங்கையே மாமறைக்குத்
தாயாகி நின்ற சரச்சுவதியே-காயாப்

64. பழுத்த பழமாய்ப் பழத்திரதந் தானாய்
முழுத்தபரா னந்த முதலாய்-எழுத்து முதல்

65. ஆறுசம யங்களுக்குள் அவ்வவர்க்கும் வெவ்வேறாய்
வேறுபல ரூப விகற்பமாய்க்-கூறரிதாய்

66. அங்கங்குந் தானா யிருந்தவளே யாதியந்தம்
எங்கெங்குந் தானா யிருந்தவளே-திங்கணுதல்

67. அஞ்சுகமே தேனே அணங்கே யமுதமொழிக்
கிஞ்சுகமே பிஞ்சுமதிக் கிள்ளையே-கொஞ்சுகுயில்

68. கன்னி திரிசூலி கபாலி சிவகாமி
மன்னு கவுரி மகமாயி-பொன்னின் மலர்த்

69. தாளரி சதுரி சவுந்தரிய முக் கண்ணுடைய
காளி பகவதி கங்காளி தூளியாத

70. தக்கன் றலைய றுத்த தத்துவத்தி தற்பரத்தி
அக்கினிகை யீர்ந்த அமர்க்களத்தி-மிக்கபுகழ்

71. வீரசத்தி மேருவினை வில்லா வளைத்தவொரு
பராசத்தி வேதப் பராசத்தி-தாரணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72. கொண்டகா ரிச்சிக்குங் குந்தளத்தி மாமதனன்
சண்டைகா ரிச்சி சகலத்தி-துண்டடிதிச்

73. செஞ்சடைச்சி கஞ்சுளிச்சி செம்படத்தி கங்கணத்தி
பஞ்சசக்தி கொந்தளத்தி பைம்பணத்தி-யஞ்சனத்தி

74. முத்துவடக் கொங்கைச்சி முல்லை மகிழ் நகைச்சி
பத்தரவர் நெஞ்சகத்தி பாரிடத்தி-சுத்த வெள்ளை

75. அக்கு வடத்தி அறம்வளர்த்தி யன்புடைச்சி
செக்க ரிளம் பிறைச்சி செண்பகத்தி-தக்கமணி

76. ஓலைக் குழைச்சி உபதேசக் குண்டலச்சி
மாலைக் கழுத்தி மவுனத்தி-ஞாலமெல்லாம்

77. அக்கரத்தி பொக்கணத்தி யண்டபகி ரண்டத்தி
முக்கணத்தி நிட்களத்தி மோட்சத்தி-மிக்க புகழ்

78. ஏகாக் கரத்தி இமயப் பருப்பதத்தி
நாகாதி பூண்டசிங்க நாதத்தி-வாகான

79. பத்மா சனத்தி பரிமளத்தி-பாம்பணைத்தி
கற்பாந் தரத்தி கறுநிறத்தி-விற்காம

80. வேடிச்சி நல்லதொரு மீனவனுக் கன்றுமுடி
சூடிச்சி கொக்கிறகு சூடிச்சி-நாடிச்சீர்

81. பாகந் தனைத்தேடும் பங்கயத்தில் வீற்றிருக்கும்
வேதன் றலையறுத்த வித்தகத்தி-நீதிபுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. பாடகத்தி கீதப்ர பந்தத்தி வெள்ளிமன்றுள்
ஆடகத்தி கூடலுக்கு ளாதியே-யேடெதிரே

83. ஏற்றுவித்து முன்சமணர் எண்ணா யிரர் கழுவில்
வீற்றிருக்க வைத்தமறை வித்தகியே-நாற்றிசையுங்

84. கொண்டாடப் பெற்றதொரு கோமளமே யாமளையே
தண்டாமரைத் திருவே தையலே-மண்டலங்கள்

85. வங்கு மொத்து நின்றருளும் ஈச்சுரியே மாமதுரை
அங்கயற்க ணாயகியே அம்மையே-துங்க

86. ஒளியே பெருந்திருவே ஓதிமமே யுண்மை
வெளியே பரப்பிரம வித்தே-அளிசெருந்

87. கொந்தளக பந்திக் குயிலே சிவயோகத்
தைந்துருவே மூவருக்கும் அன்னையே-யெந்தமிடா

88. அல்லல்வினை யெல்லாம் அகற்றியே யஞ்சலென்று
நல்லசவு பாக்கியத்தை நல்கியே-வல்லபத்தின்

89. ஆகமது ரஞ்சித்ர வித்தார மென்றறிஞர்
பேசுகின்ற வுண்மைப் பெருவாக்கு-நேசமுடன்

90. தந்தென்னை யாட் கொண்டு சற்குருவாயென்
னகத்தில்
வந்திருந்து புத்தி மதிகொடுத்துச்-சந்ததமும்

91. நீயே துணையாகி நின்றிரட்சி யங்கயற்கண்
தாயே சரணஞ் சரண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சக்தி கவசம்

## அதிவீர ராம பாண்டியர் எழுதிய காசி காண்டத்திலுள்ளது.

1. அங்கையிற் கரகந் தாங்கும்
    பிரமாணி யருளி னோடுந்
துங்கமென் சென்னி காக்க
    வயிணவி துகளி லாகம்
எங்கணுங் காக்க செய்ய
    வேந்தெழி லுருத்தி ராணி
தங்குமெண் டிசையு மன்பு
    தழைத்திட வினிது காக்க

2. கொன்னுனைச் சூலி சென்னி
    மயிரினைக் குறித்துக் காக்க
மன்னுவெண் பிறைதாழ் சென்னி
    வயங்கொளி நெற்றி காக்க
பன்மயிர்ப் புருவ நாளும்
    பரிவொடு முமையாள் காக்க
என்னையாண் முக்க ணீசன்
    இறைவிகண் ணிமைகள் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வயமிகு மிமய வல்லி
மூக்கினை மகிழ்ந்து காக்க
செயையோடு விசயை மேல்கீ
ழிதழினைச் சிறந்து காக்க
அயிலுடைச் சுருதி தூய.
அஞ்செவி காக்க தண்ணென்
பயின்மல குறையுஞ் செல்வி
பல்வினையு வந்து காக்க

4. சண்டிமென் கபோலங் காக்க
தவளநாண் மலரின் வைகும்
ஒண்டொடி நன்னாக் காக்க
விசயைமங் கலைமற் றொவ்வாக
கண்கவர் நாடி காக்க
காத்தியா யனிவெஞ் ஞான்றும்
முண்டக மலரிற் றூய
முகத்தினைச் சிறந்து காக்க

5. காளமுண் டிருண்டநீல
கண்டிமென் கழுத்துக் காக்க
கேளில்பூ தார சத்தி
சுவற்புறங் காக்க கூர்மி
நீளொளிச் சந்தி காக்க
வயிந்திரி நெறியி னோடுத்
தோளிணை காக்க பத்மை
துணைமல ரங்கை காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. கமலைகை விரல்கள் காக்க
விரசைகை யுகிர்கள் காக்க
திமிர முண்டொளிரும் வெய்யோன்
மண்டலத் துறையுஞ் செல்வி
எமதிரு வாகு மூலங்
காக்கவா னவர்க ளேத்த
அமிர்தல கரிநா ணாளு
மகன்மணு மார்பங் காக்க.

7. தரித்திரி யிதயங் காக்க
தயித்தியர்ச் செகுப்போன் மிக்க
கருத்தொடு முலைகள் சகத்தினி
லிறைமைபூ ண்டோன்
திருத்தகு வயிறு காக்க
திகழ்தபோ கதிதன் னுள்ளத்
தருத்தி யினுந்தி காக்க
அசைவளர் முதுகு காக்க.

8. கருதரு விகடை காக்க
கடிதடம் பாமை வாய்ந்த
குருமணிச் சகனங் காக்க
குகாரணி குய்யங் காக்க
அருடர வரும பாய
கந்தினி யபானங் காக்க
தெருளுடை விபுலை யென்றுஞ்
சிறப்புடைக் குறங்கு காக்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9\. இலனிதை மென் முழந்தாள் காக்க
வியற்சபை கணைக்கால் காக்க
களிதரு கோரை வாய்ந்த
பரட்டி னைக் காக்க மிக்க
அளிகொள்பா தலத்திற் செல்வோன்
அணிகெழு புறந்தாள் காக்க
ஒளிர் நகம் விரல்கள் சந்த்ரி
யுக்கிரி யுவந்து காக்க

10\. தலத்துறை மடந்தை யுள்ளங்
காலிணை காக்க தண்ணெண்
மலர்த்திரு மனையைக் காக்க
வயங்குகேத் திரதை யோங்கி
உலப்பில்கேத் திரங்கள் காக்க
பிரியகரை வொழிவ றாது
நலத்தகு மக்க டம்மை
நன்குறக் காக்க வன்றே

11\. உயர்சனா தனியெஞ் ஞான்று
மொழிவறு மாயுள் காக்க
மயர்வறு சீர்த்தி யாவு
மாதேவி காக்க மிக்க
செயிரறு தருமம் யாவுந்
தனுத்திரி சிறந்து காக்க
இயல்புடைக் குலத்தை வாய்ந்த
குலதேவி இனிது காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சற்கதி பிரதை நல்லோர்
இயைபினைத் தயாவிற் காக்க
விற்கொடும் போரி னீரில்
வெளியினில் வனத்திற் சூதில்
இற்புற மதனி லொங்கு
சரவரணி காக்க வென்னாப்
பொற்றரு மலர்க டூவிப்
புங்கவ ரேத்தினாரே

இந்த வச்சிர பஞ்சரத்தை எவர் ஓதினாலும் அவர்களுடைய உடலிலுண்டாகிய வெப்பு நோயொழியும். எட்டுத் தரம் நீரில் அபிமந்திரித்து அதனை உட்கொண்டால் வயிற்றிலே பொருந்திய குன்மம், சூலை முதலிய நோயனைத்தும் நீங்கும். இரவில் வழி நடக்கும் போது ஓதினால் பூதம், பேய் இவை தொடர மாட்டா. பிள்ளையைப் பெற மாட்டாமல் வருத்தப் படுகின்ற மாதருடைய அருகிலிருந்து ஓதினாலும் அல்லது நீரிலோதி உட்கொள்ளக் கொடுத்தாலும் விரைவிலே வருத்தம் நீங்கிப் பிள்ளைகளைப் பிரசவிப்பார்கள். போரிலே ஓதினால் பகைவர்கள் தோல்வியடைவார்கள். சிறு பிள்ளைகளுக்கு நீரிலோதி உட்கொள்ளக் கொடுத்தால் நோய்கள் நீங்கும். இதை எவரோதினாலும் அவர்களை உமாதேவியார் காப்பாற்றியருளுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமாட்சி அஷ்டகம்

குருவே சரணம்! குருவின் உருவில்
குவலயத்தே எனை ஆளவந்தாய்!
திருவே சரணம்! திருமால் சோதரி
திருவடி இணையே சரணம் அம்மா!
வருவாய் நினைவில் வந்தென்னை ஆள்வாய்
வடிவாம் பிகையே! சரணம் அம்மா!
அருள்வாய் எனையே! அனுதினம் பணிந்தேன்
அன்னை காமாட்சி உமையவளே!

களபமும் சந்தனம் கஸ்தூரி மஞ்சளும்
குங்குமம் நறுஞ் சாந்தும்!
பளபள வெனவே பேரொளி வீசிடும்
பொன்னா பரணமுந் திகழ்மேனி!
இளநகை யரும்பும் எழில் வதனந்தனை
என்ன வெனப் புகழ்வேன்
அளவிட முடியா ஆற்றலும் கருணைகொள்
அன்னை காமாட்சி உமையவளே!

சூரனை வென்றிடச் சரவண பவனெனும்
சூரனை ஈன்றவளே
கூரிய வேலைக் குமரனுக் கேயருள்
கோமகளே சிவ சக்தி!
தீர பராக்கிரமம் திக்கெல்லாம் பரவத்
தீனருக்கே சரண் நீயன்றோ!
ஆரமுதே! எங்கள் ஆனந்தமே! திரு
அன்னை காமாட்சி உமையவளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சரனும் எழிற்குஞ்சரி நாதனும்
கொஞ்சிடும் உமையே! மாகாளி!
வெஞ்சமரெதிலும் வெற்றியைத் தருமோர்
வீர வேல் தாங்கிடும் சாமுண்டி
பஞ்சமி பைரவி பார்வத புத்திரி
பஞ்சாட் சரனில் பாதியும் நீ
அஞ்சுதல் வேண்டாம்! அபயம் என்பாயே!
அன்னை காமாட்சி உமையவளே!

மரகதக் கொடியே! மந்த ஹாசனியே!
மங்கள சண்டி! மலை மகளே!
மரகத மயில்மேல் முருகனின் மாதா!
மாமறை போற்றிடும் மாதவமே!
பரகதிக் கொருதுணை யென நினைத் துன்பதம்
பற்றிடும் ஏழைஎனை
அரவணைத் தாண்டருள் புரிவாய் நீயே!
அன்னை காமாட்சி உமையவளே!

ஷண்முகன் தாயே! சஞ்சலந் தீர்ப்பாய்!
சக்தி மாகாளி! சாமுண்டி
எண்ணிய எல்லாம் எய்திட அருள்வாய்
எழிலுரு வாணியும் இலக்குமியும்
பண்ணுடன் போற்றிட ஸ்ரீ சக்ரந்தனில்
பரவசமாய் கொலு இருப்பவளே
அண்ணலாம் ஈசன் அருந்திருந்தேவி
அன்னை காமாட்சி உமையவளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயவேள் குமரனை ஈன்றவளே! பெருஞ்
சக்தியே!மகிஷனை மாய்த்தவளே
கொவ்வை நிகர்வாய்க் குமிழ் புன்சிரிப்பால்
குவலய மெல்லாம் ஆள்பவளே!
எவ்வாறுனை யான் ஏத்திடுவேன்! உனை
எப்பொழுதும் நினைத்திருப்பவன் யான்!
அவ்வா றெனையே ஆதரித் தருள்வாய்!
அன்னை காமாட்சி உமையவளே

ஜெய ஜெய சக்தி ஜெகமெலாம் போற்றும்
ஜெய ஜெய சங்கரி சிறீதேவி!
ஜெய ஜெய துர்க்கா ஜெய பரமேஸ்வரி
ஜெய ஜெய மாதா சிறீதேவி
ஜெய ஜெய சூர குலாந்தகன் ஷண்முகன்
ஜெயம் பெற அருளிய சிறீதேவி
அயனுடன் ஹரிஹரன் அனவரதமும் புகழ்!
அன்னை காமாட்சி உமையவளே!

# துக்க நிவாரண அஷ்டகம்

## (மகிஷாசுர மர்த்தினி விருத்தம்)

மங்கள ரூபிணி மதியணி சூலினி மன்மத
பாணியளே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும் சங்கரி
சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல் கற்பகக்
காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரிக் ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி
கானுறு மலரெனக் கதிர் ஒளி காட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்திட வந்திடுவாள்
தானூறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியால் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினிலே வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே;
எங்குவந் தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்தநல் துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

தண தண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கண கண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
பண பண பம்பண பறையொலி கூவிட
பண்மணி நீ வருவாய்:
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

பஞ்சமி பைரவ பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே:
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக்
கொடுத்தநல் குமரியளே:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தி யெனும் மாயே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

எண்ணியபடி நீயருளிட வருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்:
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே:
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

இடர்தரும் தொல்லை இனிமேல் இல்லை
என்றுநீ சொல்லிடுவாய்
சுடர் தரும் அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரும் இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

ஜெய ஜெய பால சாமுண்டேஸ்வரி
ஜெய ஜெய சிறீ தேவி:
ஜெய ஜெய துர்க்கா சிறீ பரமேஸ்வரி
ஜெய ஜெய சிறீ தேவி:
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய சிறீ தேவி:
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராகுகால சிறீ துர்க்கா அஷ்டகம்

## (சிறீ துர்க்கைச் சித்தர் அருளியது)

**(ஹரிவராஸனம் மெட்டில் பாடவும்)**

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீங்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெயதேவி துர்க்கையே

உலகை யீன்றவள் துர்க்கா உமையு மானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

செம்மை யானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மை யானவள் அன்புத் தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மை யானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலகமானவள் எந்தன் உடமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
மாண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்ப மற்றவள் துர்க்கா தூரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

குருவு மானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் துர்க்கா திரிசூலி மாயவள்
திரு நீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயே வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக் கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஹிஷாசுர மர்த்தினி தோத்திரம்

1. அயி கிரிநந்தினி நந்திதமேதினி
விச்வ வினோதினி நந்தநுதே
கிரிவர விந்தியசிரோ தினிவாசினி
விஷ்ணு விலாசினி ஜிஷ்ணுநுதே
பகவதிஹே சிதிகண்ட குடும்பினி
பூரி குடும்பினி பூரிக்ருதே
ஜயஜய ஹே மஹிஷா சுர மர்த்தினி
ரம்யக பர்த்தினி சைலசுதே.

2. சுரவரர்ஷிணி துர்தர தர்ஷிணி
துர்முக மர்ஹிணி ஹர்ஷரதே
திரிபுவன போஷிணி சங்கர தோஷிணி
கில்பிஷ மோஷிணி கோஷரதே
தனு ஜநி ரோஷிணி திதிசுத ரோஷிணி
துர்மத சோஷிணி சிந்துசுதே
ஜயஜய ஹே மஹிஷா சுரமர்த்தினி
ரம்யக பர்த்தினி சைலசுதே!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அயி ஜகதம்ப மதம்ப கதம்ப
வனப்ரிய வாசினி ஹாசரதே
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய
சிருங்க நிஜாலய மத்யகதே!
மதுமதுரே மதுகைடப கஞ்ஜினி
கைபட பஞ்ஜினி ராசரதே
ஜயஜய ஹே மஹிஷா சுரமார்த்தினி
ரம்யக பார்த்தினி சைலசுதே!!

4. அயி சதகண்ட விகண்டித ருண்ட
விதுண்டித சுண்ட கஜாதிபதே
ரிபுகஜ கண் விதாரணசண்ட
பராக்ரம கண்ட மிருகாதிபதே!
நிஜபுஜ தண்ட நிபாதித கண்ட
விபாதித நிண்ட படாதிபதே
ஜயஜயஹே மஹிஷாரசுர மார்த்தினி
ரம்யக பார்த்தினி சைலசுதே!!

5. அயி ரணதுர்மத சத்ருவ தோதித
துர்தர நிர்ஜர சக்திப்ருதே
சதிரவிசார துரீணம ஹாசிவ
தூதருக்த ப்ரம தாதிபதே!
துரித துரீஹ துராசய துர்மதி
தானவ தூதக்ருதா ந்தமதே
ஜயஜயஹே மஹிஷா சுரமார்த்தினி
ரம்யக பார்த்தினி சைலசுதே!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6\. அயி சரணாகத வைரி வதூவர
வராபய தாயகரே
த்ரிபுவன மஸ்தக சூலவிரோதி
சிரோதிக்ரு தாமல சூலகரே!
துமிதுமி தாமர துந்துமி நாத
மஹோ முசரீக்ருத் திக்மகரே
ஜயஜயஹே மஹிஷா சுரமர்த்தினி
ரம்யக பர்த்தினி சைலசுதே.

7\. அயி நிஜஹும் க்ருதிமாத்ர நிராக்ருத்
தூம்ர விலோசன தூம்ரசதே
சமர விசோஷித சோனித்பீஜ
சமுத்பவ சோணித பீஜலதே!
சிவசிவ சும்ப நிசும்ப மஹாகவ
தர்பித பூத பிசா சரதே
ஜயஜயஹே மஹிஷாசுர மர்த்தினி
ரம்யக பர்த்தினி சைலசுதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

## காப்பு

தாரமர் கொன்றையும் சண்பக மாலையும்
சாத்துந்தில்லை
யூரர்தம் பாகத் துமைமைந்த னேயுல கேழும் பெற்ற
சீரபி ராமியந் தாதியெப் போதுமென் சிந்தையுள்ளே
காரமர் மேனிக் கணபதி யேநிற்கக் கட்டுரையே

## நூல்

உதிக்கின்ற செங்கதிருச்சித் திலக முணர்வுடை யோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும
தோயமென்ன
விதிக்கின்ற மேனி யபிராமி யென்றன்
விழுத்துணையே

துணையுந் தொழுந்தெய்வ மும்பெற்ற தாயுஞ்
சுருதிகளின்
பணையுங் கொழுந்தும் பதிகொண்ட வேரும்
பனிமலர்ப்பூங்
கணையுங் கருப்புச் சிலையுமென் பாசாங்
குசமுங்கைபி
லணையுந் திரிபுர சுந்தரி யாவ தறிந்தனமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தே னெவரு மறியா மறையை யறிந்து கொண்டு
செறிந்தே னுனது திருவடிக் கேதிரு வேவெருவிப்
பிரிந்தேனின் னன்பர் பெருமை யெண்ணாத
கருமநெஞ்சான்
மறிந்தே விழுநர குக்குற வாய மனிதரையே

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்து சென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடை
மேற்
பனிதரும் திங்களும் பாம்பும் பகீரதி யும்படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே

பொருந்திய முப்புரை செப்புரை செய்யும்
புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குன் மனோன்மணி
வார்சடையோ
னருந்திய நஞ்சமு தாக்கிய வம்பிகை யம்புயமேற்
றிருந்திய சுந்தரி யந்தரி பாதமென் சென்னியதே

சென்னிய துன்பொற் றிருவடித் தாமரை
சிந்தையுள்ளே
மன்னிய துன்திரு மந்திரஞ் சிந்துர வண்ணப்
பெண்ணே
முன்னிய நின்னடி யாருடன் கூடி முறைமுறையே
பன்னிய தென்றுமுன் றன்பர மாகம பத்ததியே

ததியுறு மத்திற் சுழலுமென் னாவி தளர் விலதோர்
கதியுறு வண்ணங் கருதுகண் டாய்கம லாலயனு
மதியுறு வேணி மகிழ்நனு மாலும் வணங்கி யென்றுந்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரி யெந்தை துணைவியென் பாசத்
தொடரையெல்லாம்
வந்தரி சிந்துர வண்ணத்தி னாண்மகி டன்றலைமே
லந்தரி நீலி யழியாத கன்னிகை யாரணத்தோன்
கந்தரி கைத்தலத் தாண்மலர்த் தாளென் கருத்தனவே

கருத்தன வெந்தைதன் கண்ணன வண்ணக்
கனகவெற்பிற்
பெருத்தன பாலழும் பிள்ளைக்கு நல்கின பேரருள் கூர்
திருத்தன பாரமு மாரமுஞ் செங்கைச் சிலையுமம்பு
முருத்தன முரலு நீயுமம் மேவந்தென் முன்னிற்கவே

நின்று மிருந்துங் கிடந்து நடந்து நினைப்பதுன்னை
யென்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையி
லொன்று மரும்பொரு ளேயரு ளேயுமையே யிமயத்
தன்றும் பிறந்தவ ளேயழி யாமுத்தி யானந்தமே

ஆனந்த மாயென் னறிவாய் நிறைந்த வமுதமு மாய்
வானந்த மான வடிவுடை யாண்மறை நான்கினுக்குந்
தானந்த மான சரணார விந்தத் தவளநிறக்
கானந்த மாடரங் காமெம்பி ரான்முடிக் கண்ணியதே

கண்ணிய துன்புகழ் கற்பதுன் னாமங் கசிந்து பத்தி
பண்ணிய துன்னிரு பாதாம் புயத்திற் பகலிரவா
நண்ணிய துன்னை நயந்தோ ரவையத்து நான்முன்
செய்த
புண்ணிய மே தென்னம் மேபுவி யேழையும்
பூத்தவளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்தவளே புவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணங்
காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற் றோர்தெய்வம்
வந்திப்பதே

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க் கெளி தாமெம்பி ராட்டி நின்
றண்ணளியே

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம்
எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவி அடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசாங் குசமும் கரும்பும்
அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்(கு) ஒரு
தீங்கில்லையே

# துளசி ஸ்தோத்திரம்

சிறீமத் துளசியம்மா - திருவே - கல்யாணியம்ம
வெள்ளிக் கிழமை தன்னில் விளங்குகின்ற மாதாவே
செவ்வாய்க் கிழமை தன்னில் செழிக்க வந்த
செந்திருவே
தாயாரே யுந்தன் தாளிணையில் நான் பணிந்தேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைப் பசுமையுள்ள - துளசி நமஸ்தே
பரிமளிக்கும் மூலக் கொழுந்தே - நமஸ்தே
அற்பப் பிறப்பைத் தவிப்பாய் - நமஸ்தே
அஷ்ட ஐஸ்வர்யம் அளிப்பாய் - நமஸ்தே

ஹரியுடை - தேவி அழகி - நமஸ்தே
அடைந்தார்க்கு இன்பம் அளிப்பாய் நமஸ்தே
வனமாலை யென்னும் - மருவே - நமஸ்தே
வைகுண்ட வாசியுடன் மகிழ்வாய் - நமஸ்தே

அன்புடனே நல்ல அருந்துளசி கொண்டுவந்து
பிருந்தே என்னும் மண்ணில் மேல் நட்டு
மகிழ்ந்து நல்ல நீருற்றி
முற்றத்தில் - தான் வளர்த்து - முத்துப் போல்
கோலமிட்டு
செங்காவி சுற்றுமிட்டு - திருவிளக்கும் ஏற்றி வைத்து

பழங்களுடன் தேங்காயும் தாம்பூலம் தட்டில் வைத்து
புஷ்பங்களைச் சொரிந்து - பூஜித்த பேர்களுக்கு
என்ன பலன் என்று ஹருஷிகேசர் தான் கேட்க
மங்களமான - துளசி - மகிழ்ந்து தானே யுரைப்பாள்

மங்களமாய் என்னை வைத்து - மகிழ்ந்து
உபாசித்தவர்கள்
தீவினையைப் போக்கிச் சிறந்த பலன் நானளிப்பேன்
அரும்பிணி நீக்கி அஷ்ட ஐஸ்வர்யம் நானளிப்பேன்
தரித்திரத்தை நீக்கி - செல்வத்தை நான் கொடுப்பேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திர னில்லாதவர்க்கு - புத்திர பாக்கியம்
நானளிப்பேன்
கன்னிகைகள் பூஜை - செய்தால் நல்ல கணவரைக்
கூட்டுவிப்பேன்
கிரஹஸ்தர்கள் பூஜை - செய்தால் கீர்த்தியுடன்
வாழவைப்பேன்
முமூக்ஷுக்கள் பூஜை - செய்தால் மோட்சபதம் நான்
கொடுப்பேன்
கோடி காராம் பசுவை கன்றுடன் கொண்டு வந்து
கொம்புக்கு - பொன்னமைத்து - குளம்புக்கு
வெள்ளிகட்டி
கங்கைக் கரைதனிலே - கிரஹண புண்ணிய காலத்திலே
வாலுருவி - அந்தணருக்கு - மகா - தானம்
செய்தபலன்

நானளிப்பேன் - சத்திய மென்று - நாயகியும்
சொல்லுமே
அப்படியே யாகவென்று திருமால் அறிக்கை யிட்டார்
இப்படியே அன்புடனே ஏற்றித் தொழுதவர்கள்
அற்புதமாய் வாழ்ந்திடுவார் - பரதேவி தன்னருளால்

தாயே ஜெகன் 'மாதா' அடியாள் செய்கின்ற
பூஜையை
ஏற்றுக் கொண்டு அடியாள் செய்த சகல
பாவங்களையும்
மன்னித்து காத்து ரஷித்து கோரும் வரங்களைக்
கொடுத்து
அனுக்கிரகம் செய்யவேண்டும் துளசி மாதாவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றுப் பதிகம்

## திருஞானசம்பந்தர் பாடியருளியது

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான்
திருநீறே

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது
நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே

எயிலது வட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் திருநீறே

மாலொா டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் ஆல வாயான் திருநீறே

குண்டிகைக் கையகர்க ளோடு சாக்கியர் கூட்டமும் கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந்தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆலவாயான் திருநீறே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றல் அடல் விடையேறு மாலவாயான் திரு நீற்றை
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னனு டலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே

திருச்சிற்றம் பலம்

# குங்கும பஞ்சததி

குங்கும மாவது குறைகளைத் தீர்ப்பது
குங்கும மாவது குடியினைக் காப்பது
குங்கும மாவது குணமது அளிப்பது
குங்கும மாவது கொல்வினை தீர்ப்பதே

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நதிகளை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனை காப்பது பதிவிரதை குங்குமம்
கதிகளை ஆள்வதும் குங்கும மாமே

தஞ்சமென் றோரைத் தடுத்தாண்டு கொள்வது
பஞ்சமா பாதகம் பரிந்துமே தீர்ப்பதும்
அஞ்சின பேருக்கு அபய மளிப்பதும்
காஞ்சி காமாட்சியின் குங்கும மாமே

நற்பதமீவது நாரணிக் குங்குமம்
பொற்பினை ஈவது பூரணி குங்குமம்
சிற்பரமாவது சிறீ சக்ர குங்குமம்
கற்பினைக் காப்பதும் குங்குமமாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சுடர் போன்றது சீரான குங்குமம்
கொஞ்சம் அழகைக் கொடுப்பதும் குங்குமம்
ஐந்து புலன்கள் அடக்கி யருள்வதும்
காசி விசாலாட் சியின் குங்கும மாமே

நோயினைத் தீர்ப்பதும் நுண்ணறி யீவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அருச்சித்த குங்கும மாமே

சக்தி கொடுப்பதும் சத்தியம் காப்பதும்
பக்தி அளிப்பதும் பரகதி யீவதும்
முக்தி கொடுப்பதும் மும்மலம் தீர்ப்பதும்
சித்தி தருவதும் குங்கும மாமே

நெஞ்சிற் கவலைகள் நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடும் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டியருள்வதும்
மதுரை மீனாட்சியின் குங்கும மாமே

சிவ சிவ என்றுமே திரு நீறணிந்தபின்
தவமான மேலோருந் தரித்துக் களிப்பதும்
சிவகாமியே யென சிந்தித் தணிவதும்
பலவினை தீர்ப்பதும் குங்கும மாமே

எவை யெவை கருதிடின் அவையவை யீவதும்
நவவ்கை சக்தியின் நலனைக் கொடுப்பதும்
குவி செய் கரத்துடன் கும்பிட்ட பேருக்கு
குவிநிதி யீவதும் குங்கும மாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ட லெஷ்மி அருள் தந்தளிப்பதும்
இஷ்டங்க ளீவதும் ஈடற்ற குங்குமம்
கஷ்டம் தவிர்த் தென்னைக் காத்தருள்வதும்
அஷ்ட சிறீ சக்ர குங்கும மாமே

குஷ்ட முதலான மகாரோகந் தீர்ப்பதும்
நஷ்டம் வராதொரு நலனைக் கொடுப்பதும்
எட்டிரண்டோர் அறிவித்தோர் வீடினை
கிட்டவே செல்வது குங்கும மாமே

பட்ட காலிலே படுமென கஷ்டங்கள்
விட்டிடாமலே வந்துமே வாட்டினும்
பட்டனா பார்வதி பாதம் பணிந்தே
இட்டார் இடர் தவிர்த்த குங்கும மாமே

சித்தந்தனை சுத்தி செய்வதற்க் கெளிய தோர்
எத்துந் தெரியாதே ஏமாந்த மாந்தரே
நித்தம் தொழும் அன்னை குங்குமம் தன்னை
நித்தியம் தரித்துமே மேன்மை அடைவீரே

மிஞ்சும் அழகுடன் குங்கும ஆடைகள்
செஞ்சுடர் ஆகுமோர் சிறீ சக்ரம் ஈஸ்வரியின்
கஞ்சமலர் முகம் தன்னில் திகழ்வதும்
பஞ்ச நிதிதரும் குங்கும மாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வெங்கடேச சுப்ரபாதம்

ஓம் கோசலை குமாரா சிறீராமா
பொழுது புலர்கின்றதே
தெய்வீகத் திருச்சடங்குகள் செய்ய
எழுந்தருள் புருஷோத்தமா
எழுந்தருள் எழுந்தருள் கருடக்கொடி
ஏந்தும் கோவிந்தனே
திருமகள் கணவா கண்மலர்க
மூன்றுலகும் செழித் தோங்கவே!

சுழலும் உலகம் முழுதும் சுமக்கும் தாயே
திருமால் மார்பில் சிங்காரச் செல்வி நீயே
சரண்யனின் சகலமும் தரும் தயாசாகரி
மதுகைடபரை வதைத்தாய் எழு மகாலட்சுமி

கலைவாணி கௌரி இந்திராணி போற்றுவார்
முழுநிலா எனக் குளிர் முகம் காட்டுவாய்
ரிஷபாத்ரி நாதனின் நாயகி
விழித் தாமரைகள் காட்டியே அருள்புரி!

அத்ரி முதல் சப்தரிஷிகள் நித்ய கர்மா முடித்தார்
ஆகாய கங்கை வளர் தாமரையால் பூஜை செய்வார்
தேவா! நின் பாதங்கள் ஆராதனைக்கு நின்றார்
சேஷாத்திரி வாழ்வோனே .திருப்பள்ளி எழுக!

அரன் அயன் இந்திரன் கந்தனும் உனைப் புகழ்ந்தார்
திரிலோகம் அனந்த பாதம் போற்றுகின்றார்
ஐகத்பதி வந்தே பஞ்சாங்கம் சொல்லு கின்றார்
...ஷாத்திரி வாசா உன் செவி கேட்கவிலையோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்து கொண்டிருக்கும் தாமரை மணம் வீசுதே
விரிந்து கொண்டிருக்கும் பாளைகளும் கமழுதே
அடிமேல் அடிவைத்துத் தென்றலும் நடைபோடுதே
திருவேங் கடத்தானே உடன் எழுந்து வா நீ!

அழகான கூண்டில் வளர் கிளிகளும் உனைத்தேடுதே
விழி மலர்ந்து வாழைப்பழம் பாயசம் உண்ணுதே
பழகிய திருநாமம் முரளி கோவிந்தா என்றதே
திருவேங்கடம் உடையாய் கிளி மொழி கேட்கவா!

நிலையாக நிற்காத நாரதர் வந்து விட்டார்
கலையாத சுகவீணையை மீட்டுகின்றார்
அழியாத தமிழிலே ஆழ்வார்கள் அருள்மொழிகள்
சுவையாகப் பாடுவார் திருமுகம் காட்டுக!

குறையேதும் இல்லை குணமே நிறைந்த கடலே
பிறவிக்கடல் தாண்ட அணையாகின்ற துணையே
உபநிஷதம் சொல்லும் ஒப்பற்ற உண்மைப் பொருளே
திருத்தொண்டர்கள் மகிழவே வந்து சேவை சாத்து!

நாளும் திருவேங்கடநாதனின் பாதம் நாடி
சூரியன் உதிக்கும் அதிகாலை சுப்ரபாதம் பாடி
பாராயணம் செய்வார் பரமஞானம் அடைவார்
வாழ்க திருமலை வள்ளல் அவன் திருப்பாதமே!

ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த
# திருப்பாவை

1. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல்கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

2. வையத்து வாழ்வீர்காள் நாமும்நம் பாவைக்கு
செய்யும்கிரி சைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளைச்சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்

3. ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந் நெலூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஆழி மழைக் கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி
ஊழிமுதல்வ னுருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழை போல்
வாழவு லகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

5. மாயனை மன்னுவட மதுரை மைந்தனை
தூயபெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை
தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரனை
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித் தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்.

6. புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ!
பிள்ளாய் எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும்யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்

7. கீசுகீசென்றெங்கும் ஆனைச் சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ?
பேய்ப்பெண்ணே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாசநறுங் குழலாச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும் நீகேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய் திறவேலோ ரெம்பாவாய்.

8. கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள
பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து
உன்னை
கூவுவான் வந்து நின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறை கொண்டு
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தாய்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

9. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர் அவளை யெழுப்பீரோ? உன் மகள் தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டானோ
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால்
பண்டொருநாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகர்ணனும்
தோற்று முனக்கே பெருந்துயில், தான்
தந்தானோ?
ஆற்ற வனந்த லுடையாய்! அருங்கலமே
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய்.

11. கற்றுக் கறவைக் கணங்கல் பலகறந்து
செற்றார் திறவழியச் சென்று செருச் செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குல் புனமயிலே போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்லப் பெண்டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

12. கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்று பால்சோர
நனைத் தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்
பனித்தலைவீழ நின்வாசற் கடைபற்றி
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும் நீவாய்
திறவாய்
இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத் தாரு மறிந்தேலோ ரெம்பாவாய்.

13. புள்ளின் வாய்கீண்டானைப் பொல்லா அரக்கனை
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைகளெல்லாரும் பாவைக் களம் புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய்
கூம்பினகாண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய் எழுந்திராய் நாணாதாய்! நாவுடையாய்
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக் கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ
ரெம்பாவாய்.

15. எல்லே இளங்கிளியே! இன்ன முறங்குதியோ!
சில்லென் றழையேன்மின் நங்கையீர்
போதருகின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லை நீபோதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார்
போந்தெண்ணிக்கொள்
வல்லானைக் கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.

16.நாயகனாய் நின்ற நந்த கோபனுடைய
கோயில் காப்பானே! கொடி தோன்றும்
தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர்சிறுமி யரோமுக்கு அறைபறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே யம்மா! நீ
தேய நிலைக் கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்

17.அம்பரமே தண்ணீரே சோறே யறஞ் செய்யும்
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய்
அம்பரமூ டறுத் தோங்கி உலகளந்த
உம்பர் கோமானே! உறங்கா தெழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்.

18. உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்;
நந்த கோபாலன் மருமகனே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்;
பந்தார் விரலிஉன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

19. குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தமலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்ப! வாய்திறவாய்;
மைத்தடங் கண்ணினாய்! நீ இன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்;
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்;
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. முப்பத்துமூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்ப முடையாய்! திறலுடையராய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய்.

21. ஏற்ற கமலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல்
பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகளே! அறிவுறாய்;
ஊற்ற முடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற்கண்
ஆற்றாது வந்துன் அடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ
ரெம்பாவாய்.

22. அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக் கட்டிற்கீழே
சங்க மிருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்;
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்
அங்க ணிரண்டுங்கொண் டெங்கள் மேல்
நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துயங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமா போலே நீ பூவைப்பூ வண்ணா உன்
கோயில் நின் றிங்ஙனே போந்தருளிக்
கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்

24. அன்றிவ் வுலகம் அளந்தாய்! இடி போற்றி!
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்
போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ் போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி!
குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி!
வென்று பகைகெடுக்கும் நின்கையில்
வேல்போற்றி
என்றென்றும் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்
இன்றுயாம் வந்தோம்; இரங்கேலோ
ரெம்பாவாய்.

25. ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளிந்து வளரத்
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கம்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்; பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன
கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே கொடியே விதானமே
ஆலி னிலையாய் அருளேலோ ரெம்பாவாய்.

27. கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சன்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே! தோடே செவிப்பூவே
பாடகமே என்றனையப் பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.

28. கறவைகள் பின்சென்று கானம் சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து
உன்றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்;
குறைவொன்று மில்லாத கோவிந்தா!
உன்தன்னோடு
உறவேல் நமக்கிங் கொழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால்
உன்தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறி யருளாதே,
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துஉன்
பொற்றா மரையடியே போற்றும்
பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு!
உற்றோமே யாவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

30. வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார்
சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர் பிரான்
கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு
மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ
ரெம்பாவாய்.

பெரியாழ்வார் பெற்ற பெண்கொடி யாகிய ஆண்டாள் அருளிச் செய்த மேலேயுள்ள திருப்பாவைப் பாடலை பக்தர்கள் நாள்தோறும் விடியற்காலையில் பாடுதல் நல்லது. அவ்வாறு பாடுபவர்கள் திருமாலின் திருவருளைப் பெற்று இன்புறுவர் என்று அம்மையாரே கூறியுள்ளார். ஆண்டு முழுவதும் பாட முடியாதவர்கள் மார்கழி மாதத்திலேனும் நாள்தோறும் விடியற் காலையில் பாடுதல் வேண்டும். அதுவும் இயலாதவர்கள் அம்மாதத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பாடல் வீதமாவதேனும் பாடுதல் பயன் தரும். திருப்பாவைப் பாடல்களின் இனிமையும் எளிமையும் அழகும் ஆழமும் நுகர்ந்து இன்புறத் தக்கன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்த

# திருப்பள்ளியெழுச்சி

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச்செய்த திருப்பள்ளி யெழு ச்சிப் பாடல்களை மக்கள் விடியற் காலையில் பாடுதல் மிகவும் சிறந்தது. திருப்பாவைப் பாடல்களைப் பாடுவதற்கு முன்னதாகவே இவற்றைப் பாடுதல் வேண்டும். பக்தியோடு பாடிவரின் கண்ணன் அருள் கிட்டும். "நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும்" கிடைக்குமென்பதில் ஐயமே இல்லை.

1. கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
 கனவிரு ளகன்றது காலையம் பொழுதாய்
மதுவிருந் தொழுகின மாமல ரெல்லாம்
 வானவ ரரசர்கள் வந்துவந் தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
 இருங்களிற் றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுள தெங்கும்
 அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே.

2. கொழுங்கொடி முல்லையின் கொழுமல ரணவிக்
 கூர்ந்தது குணதிசை மாதரும் இதுவோ
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்
 ஈன்பனி நனைந்தது மிருஞ்சிற குதறி
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
 வெள்ளெயி றுறஅதன் விடத்தினுக் கனுங்கி
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
 அரங்கத் தம்மா! பள்ளி யெழுந்தருளாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சுடரொளி பரந்தன சூழ்திசை யெல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கிப்
படரொளி பகத்தனன் பனிமதி இவனோ
பாயிருள் அகன்றது பைம்பொழிற் கமுகின்
மடலிடைக் கீறிவண் பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ
அடலொளி திகழ்தரு திகிரயந் தடக்கை
அரங்கத் தம்மா பள்ளி யெழுந்தருளாயே

4. மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழ லோசையும் விடைமணிக்குர லும்
ஈட்டிய விசைதிசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை
வாட்டிய வரிசிலை வானவ ரேறே
மாமுனி வேள்வியைக் காத்தவ பிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தியெம் மரசே!
அரங்கத் தம்மா! பள்ளி யெழுந்தருளாயே

5. புலம்பின புட்களும் பூம்பொழில் களின்வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி
கலந்தது குணதிசைக் கனைகட லரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த
அலங்கலந் தொடையல் கொண்ட டியிணை
பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலின் அம்மா
இலங்கையர் கோன்வழி பாடுசெய் கோயில்
எம்பெருமான் பள்ளி யெழுந்தருளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இரவியர் மணிநெடுந் தேரொடும் இவரோ
இறையவர் பதினொரு விடையரும் இவரோ
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ
மருதரும் வசுக்களும் வந்துவந் தீண்டிப்
புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்
அருவரை யனையநின் கோயில்முன் இவரோ
அரங்கத் தம்மா! பள்ளி யெழுந்தருளாயே.

7. அந்தரத் தமரர்கள் கூட்டங்கள் இவையோ
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ
இனிதிர னானையும் தானும்வந் திவனோ
எம்பெருமான்! உன் கோயிலின் வாசல்
சுந்தரர் நெருக்கவிச் சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடி தொழுவான்
அந்தரம் பாரிடமி ல்லைமற் றிதுவோ
அரங்கத் தம்மா! பள்ளி யெழுந்தருளாயே.

8. வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையொன் கண்ணாடி முதலா
எம்பெருமான்! படிமைக் கலம் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டுநன் முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ
தோன்றின இரவியும் துலங்கொளி பரப்பி
அம்பர தலத்தினின் றகல்கின்ற திருள்போய்
அரங்கத் தம்மா! பள்ளி யெழுந் தருளாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9\. ஏதமில் தண்ணுமை ஏக்கம் மத்தளி
யாழ்குழல் முழவமோ டிசைதிசை கெழுமி
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தரு வரவர் கங்குலு மெல்லாம்
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடி தொழுவான்
ஆதலில் அவர்க்குநா ளோக்கம் அருள
அரங்கத்தம்மா! பள்ளி யெழுந் தருளாயே.

10\. கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ
துடியிடை யார்சுரி குழல் பிழிந் துதறித்
துகிலுடுத் தேறினர் சூழ்புன லரங்கா!
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள் தொண்டரடிப்
பொடியென்னும்
அடியனை அளியனென் றருளி உன்னடி யார்க்
காட் படுத்தாய்! பள்ளி யெழுந்தருளாயே.

## ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த
## வாரணமாயிரம்

மாயவனை மணந்து மகிழ்ந்தமை போல் தாம் கண்ட கனா நிகழ்ச்சியை சிறி ஆண்டாள் இப்பகுதியில் பாடியுள்ளார். திருமணம் நடைபெற மகளிர் இப்பகுதியை ஒரு மனதுடன் படித்து ஆண்டாளின் திருவடிகளைத் துதித்தால் அவர்களுக்கு விரைவில் திருமணம் நிகழும் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வாரணம் ஆயிரம் சூழ வலம்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி
நான்

2. நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளை கமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பானோர்
காளை புகுதக் கனாக் கண்டேன் தோழி!நான்

3. இந்திரன் உள்ளிட்ட தேவர் குலமெல்லாம்
வந்திருந் தென்னை மகள்பேசி மந்திரித்து
மந்திரக் கோடி உடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழி!நான்

4. நால்திசைத் தீர்த்தங் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லார் எடுத்தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோ டென்தன்னைக்
காப்பு நாண் கட்டக் கனாக்கண்டேன்
தோழி!நான்

5. கதிரொளி தீபம் கவசமுடன் ஏந்திச்
சதிரின் மங்கையர் தாம்வந் தெதிர் கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டெங்கும்
அதிரப் புகுதக் கனாக் கண்டேன் தோழி!நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன்
தோழி!நான்

7. வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்துக்
காய்சின மாகளி றன்னான் என் கைபற்றித்
தீவலம் செய்யக் கனாக்கண்டேன் தோழி!நான்

8. இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்
நம்மை உடையவன் நாராயணன் நம்பி
செம்மை உடைய திருக்கையால் தாள் பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழி!நான்

9. வரிசிலை வாள்முகத்து என்னைமார் தாம்
வந்திட்டு
எரிமுகம் பாரித்து என்னை முன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைகம்மேலென் கைவைத்து
பொரிமுகம் தட்டக் கனாக் கண்டேன்
தோழி!நான்

10. குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து
மங்கல வீதி வலம் செய்து மணநீர்
அங்கவனோடும் உடன் சென்றங் காளைமேல்
மஞ்சன மாட்டக் கனாக்கண்டேன்· தோழி!நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஆயனுக் காகத் தான்கண்ட கனாவினை
வேயர் புகழ்வில்லி புத்தூர்கோன் கோதை
சொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லார்
வாயு நன் மக்களைப் பெற்று மகிழ்வரே.

திருவாடிப் பூரத்துச் செகத் துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள்
வாழியே
ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயரரங்கர்க் கேகண்ணி யுகந்தளித்தாள்
வாழியே
மருவாருந் திருமல்லி வளநாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப் பதங்கள்
வாழியே.

## பைரவர் துதி

பரமனை மதித்திடாப் பங்கயாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயனார் துதிப் பாடல்

பையரா அமளி யானும் பரம்பொருள்
முதலும் நல்கும்
ஐயனே ஒலம் விண்ணோர்க்
காதியே ஒலம் செண்டார்
கையனே ஒலம் எங்கள்
கடவுளே ஒலம் மெய்யர்
மெய்யனே ஒலம் தொல்சீர்
வீரனே ஒலம் ஒலம்.

ஆரணச் சுருதி யோர்சார்
அடலுருத் திரனென் றேத்தும்
காரணக் கடவுள் ஒலம்
கடல் நிறத் தெந்தாய் ஒலம்
பூரணைக் கிறைவா ஒலம்
புட்கலை கணவா ஒலம்
வாரணத் திறைமேற் கொண்டு
வரும்பிரான் ஒலம் என்றார்

கந்தபுராணம்

# ஐயனார் துதி

பூரணைக் கிறைவா போற்றி! புட்கலை கணவா
போற்றி
வாரணம் ஏறி எங்கள் வருந்துயர் களைவாய் போற்றி
ஆரணச் சுருதிஎல்லாம் அடல் உருத்திர
அண்ணலென்று
காரணம் கருதி ஏத்தும் கடவுளே போற்றி! போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிஅரன் புதல்வா போற்றி! ஐங்கரன் துணைவா
போற்றி!
சபரிமா மலையில் வந்தே தண்ணருள் பொழிவாய்
போற்றி
உரிமையாய் எம்மைக் காத்து எமக்கருள் புரிவாய்
போற்றி
திரிபுரம் எரித்த எங்கள் சிவன் திருமகனே போற்றி!

வெள்ளை வாரணத்து அமர்ந்து
வினையெல்லாம் களைவாய் போற்றி
கள்ளத்தை மனத் தகற்றி
கருணையைப் பொழிவாய் போற்றி!
உள்ளத்துள் உண்மை என்ற
ஒளியினைத் தருவாய் போற்றி!
பள்ளத்தில் வீழ்ந்திடா துன்னன்புப்
பாதத்திற் சேர்ப்பாய் போற்றி!

அரகர குமாரா அடியனே னழைக்க
வருவா யுன்றன் மனமுவந் தென்முன்
மாயவன் சிவன் மகன் வருக வருக
நேயமாய்ப் பூரணை நினைவோன் வருக
புட்கலை மணாளா போற்றிட வேவருக
முக்கணன் தந்த மூர்த்தியே வருக
செக்கர் வானிறைச் சடைச் செம்மலே வருக
செண்டாயுதனே சீக்கிரம் வருக
வண்டார் துளபமணி மகனே வருக
அண்டர்கள் போற்றும் ஐயா வருக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நலம் சேர்க்கும் நந்தீஸ்வரர்

## பிரதோஷ விரதப் பாடல்

*சிவனாரை என்றைக்கும் சுமக்கும் நந்தி*
*சேவித்த பக்தர்களைக் காக்கும் நந்தி*
*கவலைகளை எந்நாளும் போக்கும் நந்தி*
*கயிலையிலே நடம்புரியும் கனிந்த நந்தி*
*பள்ளியறைப் பக்கத்தில் இருக்கும் நந்தி*
*பார்வதியின் சொல்கேட்டு சிரிக்கும் நந்தி*
*நல்லதொரு ரகசியத்தைக் காக்கும் நந்தி*
*நாள்தோறும் தண்ணீரில் குளிக்கும் நந்தி*
*செங்கரும்பு உணவுமாலை அணியும் நந்தி*
*சிவனுக்கே உறுதுணையாய் விளங்கும் நந்தி*
*மங்களங்கள் அனைத்தையுமே கொடுக்கும் நந்தி*
*மனிதர்களின் துயர் போக்க வந்த நந்தி*
*அறுகம்புல் மாலையையும் அணியும் நந்தி*
*அரியதொரு வில்வமே ஏற்ற நந்தி*
*வருங்காலம் நலமாக வைக்கும் நந்தி*
*வணங்குகிறோம் எமைக்காக்க வருக நந்தி*
*பிரதோஷ காலத்தில் பேசும் நந்தி*
*பேரருளை மாந்தருக்கும் வழங்கும் நந்தி*
*வரலாறு படைத்து வரும் வல்ல நந்தி*
*வறுமையினை எந்நாளும் அகற்றும் நந்தி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்ட கனா அத்தனையும் மாற்றும் நந்தி
கீர்த்தியுடன் குலம் காக்கும் இனிய நந்தி
வெற்றிவரும் வாய்ப்பளிக்க உதவும் நந்தி
விதியினைத்தான் மாற்றிவிட விளையும் நந்தி
வேந்தன் நகர் நெய்யினிலே குளிக்கும் நந்தி
வியக்க வைக்கும் தஞ்சாவூர்ப் பெரிய நந்தி
சேர்ந்த திருப்புன் கூரிலே சாய்ந்த நந்தி
செவிசாய்த்து அருள் கொடுக்கும் செல்வ நந்தி
கும்பிட்ட பக்தர் துயர் நீக்கும் நந்தி
குடம் குடமாய் அபிஷேகம் பார்த்த நந்தி
பொன் பொருளை வழங்கிடவே வந்த நந்தி
புகழ்குவிக்க எம்இல்லம் வருக நந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சிவலிங்காஷ்டகம்

பிரம்ம முராரியர் போற்றிடு லிங்கம்
நிர்மல நல்லொளி தோற்றிடு லிங்கம்
கர்மதுக் கவினை நீக்கிடு லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

தேவர் முனிவரர் போற்றிடு லிங்கம்
நாமத கண்கரு ணாகர லிங்கம்
ராவண கர்ப்ப மறுத்திடு லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

கனக மகாமணி பூசைகொள் லிங்கம்
மங்களத் தாமரை மாலைகொள் லிங்கம்
வஞ்சனை பாபம் அகற்றிடும் லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்,

மொத்த சுகத்தையும் தந்திடு லிங்கம்
புத்தி மிகுத்தருள் காரண லிங்கம்
சித்த சுரரசு ராதியர் கொள்ளும்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ கணங்களும் போற்றிடு லிங்கம்
தேய்வறு பக்தி ஈவது லிங்கம்
ஆதவர் ஆயிரர் அவிரொளி லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

எட்டொடு பத்தெனும் தத்துவ லிங்கம்
எனைத்துமாம் தோற்றமுட் காரண லிங்கம்
எட்டெனும் வறுமைகள் நீக்கிடு லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

வியாழனும் தேவரும் போற்றிடு லிங்கம்
வில்வமதை மலர் எனக் கொள்ளும் லிங்கம்
பராத்பர மகிபர மாமிந்த லிங்கம்
காட்சிய தாமிச் சதாசிவ லிங்கம்

# ஆஞ்ச நேயர் துதி

## கம்ப நாட்டாழ்வார் துதிகள்

அஞ்சிலே ஒன்று பெற்றான்
அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றா றாக
ஆசியர்க் காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற
அணங்கைக் கண்டய லாரூரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான்
அவன் எம்மை அளித்துக் காப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால்விசைத் தொடுத்து
வன்றாண் மடக்கி மார்பொடுக்கி மானத்
தோள்விசைத் துணைகள்
பொங்கக் கழுத்தினைச் சுருக்கித் தூண்டும்
கால்விசைத் தடக்கை நீட்டிக்
கட்புலங் கதுவா வண்ணம்
மேல் விசைத் தெழுந்தா னுச்சி
விரிஞ்சனா டிரிஞ்ச வீரன்

மீட்டு முறை வேண்டுவன
வில்லையென மெய்ப்போர்
தீட்டியது தீட்டரிய
செய்கையது செவ்வே
நீட்டிதென நேர்ந்தனனெனா
நெடிய கையால்
காட்டின ஏனாராழியது
வாணுதலி கண்டால்!

கட்டினன் நின்றனன் தொழுத கையினன்
விட்டுயர் தோளினன் விசும்பின் மேக்குயர்
எட்டரு நெடுமுக டெய்தி நீளுமேல்
முட்டுமென் றுருவொடும் வளைந்த
மூர்த்தியான்

சூடையின் மணி கண்மணி யொப்பது தொன்னாள்
ஆடையின் கண்ணிருந்தது பேரடையாளம்
நாடி வந்தென தின்னுயர் நல்கிய நம்மா
கோடி யென்று கொடுத்தனன் மெய்ப்புகழ்
கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமான சுவாமி பாடல்

திருச்சிற்றம்பலம்

அங்கிங் கெனாதபடி யெங்கும்பிர காசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளோடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினிற்
தட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாம்
தந்தெய்வ மெந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந் ததிர் வழக்கிடவு
நின்றதெது வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ள தெதுமேற்
கங்குல் பகலற நின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்ட வெலாம் மோனவுரு வெளிதாகவுங்
கருதி யஞ்சலி செய்குவாம்.

எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதா
னியாதினும் மரிதரிதுகா
ணிப்பிறவி தப்பினா லெப்பிறவி வாய்க்குமோ
எதுவருமோ வறிகிலேன்
கண்ணக னிலத்துநா னுள்ளபொழு தேயருட்
ககன வட்டத் தினின்று
கா லூன்றி நின்று பொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவச முறவே
பண்ணுவது நன்மையிந் நிலைபதியு மட்டுமே
பதியா யிருந்த தேகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி
பண்ணவி தனருளி னாலே
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
வேண்டு வேனும தடிமைநான்
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை
பெற்ற வித்தகச் சித்தர் கணமே.

எத்தனை விதங்கடான் கற்கினும் கேட்கினும்
என்னிதயமு மொடுங்க வில்லை
யானெனு மகந்தைதா னெள்ளளவும் மாறவில்லை
யாதினு மபிமா னமென்
சித்தமிசை குடிகொண்ட தீகையொ ரக்க மென்
சென்மத்து நான றிகிலேன்
சீலமொடு தவவிரத மொருகனவி லாயினுந்
தெரிசனங் கண்டு மறியேன்
பொய்த்த மொழியல்லான் மருந்துக்கு மெய்ம்மொழி
புகன்றிடேன் பிறர் கேட்கவே
போதிப்ப தல்லாது சும்மா விருந்தருள்
பொருந்திடாப் பேதை நானே
அத்தனை குணக்கேடர் கண்டதாக் கேட்டதா
வனிமிசையு முண்டோ சொலா
யண்டபகி ரண்டமு மடங்கவொரு
நிறைவாகி யானந்த மான பரமே

கல்லாத அறிவும் மேல் கேளாத கேள்வியும்
கருணை சிறிது ஏதும் இல்லாக்
காட்சியும் கொலை களவுகள் காமம்
மாட்சியாக் காதலித்திடு நெஞ்சமும்
பொல்லாத பொய்ம் மொழியும் அல்லாது நன்மைகள்
பொருந்து குணம் ஏதும் அறியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷர் வடிவு ஆனதே அல்லாது கனவிலும்
புருஷார்த்தம் ஏதும் இல்லேன்
எல்லாம் அறிந்த நீ அறியாதது அன்று எனக்கு
எவ்வண்ணம் உய் வண்ணமோ
இருளை இருள் என்றவர்க்கு ஒளி தாரகம் பெறும்
எனக்கு நின் அருள் தாரகம்
வல்லான் எனும் பெயர் உனக்கு உள்ளதே இந்த
வஞ்சகனை ஆள நினையாய்
மந்திர குருவே யோக தந்திர குருவே மூலன்
மரபில் வரு மௌன குருவே

ஐந்துவகை ஆகின்ற பூதபேதத்தினால்
ஆகின்ற ஆக்கை நீர்மேல்
அமர் கின்ற குமிழி என நிற்கின்றது என்ன நான்
அறியாத காலம் எல்லாம்
புந்திமகிழ் உற உண்டு உடுத்து இன்பம் ஆவதே
போந்த நெறி என்று இருந்தேன்
பூராயம் ஆக நினது அருள்வந்து உணர்ந்த
இவை போனவழி தெரிய வில்லை
எந்த நிலை பேசினும் இணங்க வில்லை அல்லால்
இறப்பொடு பிறப்பை உள்ளே
எண்ணினால் நெஞ்சது பகீரெனும் துயில் உறாது
இருவழியும் இரவு பகலாய்ச்
செந்தழலின் மெழுகானது அங்கம் இவை
என் கொலோ சித்தாந்த முக்தி முதலே
சிர கிரி விளங்கவரு தஷிணா மூர்த்தியே
சின்ம யானந்த குருவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோகரராய ஸாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்
ஜெய் கணேச மங்களம்
ஸ்ரீ கணேச மங்களம்
ராஜா ராம மங்களம் ராதேஸ் யாம மங்களம்
சீதா ராம மங்களம் ராதா கிருஷ்ண மங்களம்
கன்னி வள்ளி நேசர் பாவ நாசருக்கு மங்களம்
கதிர் காம வேலரீழ தேசருக்கு மங்களம்
மன்னு மடியார்க் கருளூ மாசில் குமரேசருக்கு
துன்னிய வனந்த கோடி சூரியப்ர காசருக்கு

மங்கை யுமை பாலர் வடி வேலருக்கு மங்களம்
மன்னுமறை நூலரணு கூலருக்கு மங்களம்
புங்க மிகு சிவகாம போதக சுசீலருக்கு
செங்கையில் விளங்கு வளைத் தெய்வயானை
லோலருக்கு
சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரி மனோகரராய சாஸ்வதாய மங்களம்

## ஏழாலை வடக்கு மாணிக்கப் பிள்ளையார் திரு ஊஞ்சல்

செல்வமிகு ஒரு கொம்பாய் சிகரமீது
செழு மறையை வரைந்தவனே
தெய்வப் பொன்னி நல் வளங்கள் நயந்தவனே
பெருந்திரளாய் பாய ஞாலமிசை தந்தவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமசிவாய சொல்வழங்கும் சுந்தரனும்
உமையும் பெற்ற தும்பிமுக நாயகனே
சோதி ஞானக் கல்கி நயம் சொரிபவனே
ஸ்ரீ மாணிக்க கணபதியே நின் திருத்தாள் காப்பு

தான தவ நல மோங்க சைவம் ஓங்க
சகல கலைநிலை ஓங்க தமிழ் பழுத்த
ஞானசுகம் பெரும் உயர் நன்மை ஓங்க
நண்ணு திருத்தொண்டர் புரிபணிகள் ஓங்க
கானமிகு திருமுறையின் கருணை ஓங்கக்
கழனி யொடு பழமுதிரும் சோலை ஓங்க
வானமழை பொழியும் ஏழாலை வாழ்
மாணிக்க விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

திருமலரும் நான்குமறை தூண்களாக
சிவமலரும் ஆகமங்கள் நாண்களாக
குருமலரும் தத்துவங்கள் பீடமாக
குணமலரும் பிரணவமா மாடமாக
உருமலரும் புராணமெலாம் மாலையாக
ஒளி மலரும் கலைகள் அருள் சோலையாக
மருமலரும் செல்வ ஏழாலை வாழ்
மாணிக்க விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

பொன்னு திரும் திருமுடியில் சோதிவீச
புகழதிக சேவடியில் சுரும்பு மூச
கன்னி மகா வல்லபையார் திருக்கண் நோக்க
கௌரி யொடு கையிலை அரன் உவகை பூக்க
வண்ண மயில் வாகனனார் வடிவு பார்க்க
யாதவரும் அடியாரும் இசைக ளார்க்க
மன்னு புகழ் விளங்கும் ஏழாலை வாழ
மாணிக்க விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணனாய் திருமுறைகள் காட்டித் தந்த
புண்ணிய னாய்த் திருநாரை ஊரில் வந்த
காரணனே கோகர்ண கோயில் பொங்க
கவின் மிகுந்த இராவணர்க்குக் காட்சி நல்கும்
ஆரணனே அரனேறும் அச்சிறுத்த
ஐங்கரனே ஔவை தரும் கவி நயந்த
வாரணனே ஆதி ஏழாலை வாழ்
மாணிக்க விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

குன்றாடும் குகனாடக் கிருபை வண்ணக்
குறத்தி யொடு குஞ்சரியு மாடத் தில்லை
நின்றாடும் சிவனாட நிமலி ஆட
நெடுஞ் சூலமுடன் ஐயன் வீரன் ஆட
கன்றாலின் விழ வெறிந்த மாயனாட
அம்புயனும் கலைமகளும் ஆடத் தொண்டர்
மன்றாட அருளும் ஏழாலை வாழ
மாணிக்க விநாயகரே ஆடீர் ஊஞ்சல்

## வாழி

எங்கணும் நம் சைவமதம் பயின்று வாழி
ஏத்தும் அடியார்கள் குழாம் இனிது வாழி
தங்கும் உயிர்க் காருண்யம் நிறைந்து வாழி
தவம் உடையோர் குலம் காக்கும் சால்பு வாழி

மங்கையரின் பொற்புயரும் வண்மை வாழி
மழைவாழி மன்னர் மனுநீதி வாழி
மங்களம் சேர்ந்திலங்கும் ஏழாலை வாழ
மாணிக்க விநாயகர் தாழ் வாழி வாழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வ வழிபாடு

தெய்வ வழிபாட்டை உபாசனை என்றும் சொல்வர். ஒவ்வொருவரும் அவரவருக்கு பிரியமான தெய்வத்தை உபாசனை செய்வர். அதாவது அந்தத் தெய்வம் அவரது உபாசனா தெய்வம். தெய்வம் எப்படி இருக்கும் என்பது தெரியாது.

சாஸ்திரங்களில் இன்ன உருவத்தில் தியானித்தால் இன்ன பலன் கிடைக்குமென்று சொல்லப் பட்டுள்ளது. அதை மனதால் உருவகப் படுத்திக் கொண்டு தியானம் செய்கிறோம். இப்படித் தியானம் செய்வதற்கு ஏதாவது ஒன்றை மனதில் நிலை நிறுத்தி அதையே உள்ளத்தில் வைத்துத் தியானிக்க வேண்டும் என்பதற் காகவே தெய்வங்களைப் பல உருவங்களாக வடித்து வணங்குகிறோம்.

கோயிலுக்குப் போய் சுவாமி தரிசனம் செய்கிறோம். கண்ணை மூடிக் கொண்டு கன்னத்தில் போட்டுக் கொள்கிறோம். கண்ணை மூடியதும் தெய்வத்தின் உருவம் இதயத்தில் படிந்து விடுகிறது. கன்னத்தில் போட்டுக் கொள்வது தவறு செய்திருந்தால் மன்னிப்புக் கேட்பது. ஆகியவற்றைச் செய்யும் போது ஒரு ஆத்ம திருப்தி ஏற்படுகிறது.

மூலஸ்தானத்தில் இருப்பது தெய்வம் என்ற நினைப்போடு கோவிலுக்குப் போகிறோம். உள்ளே இருப்பது வெறுங் கருங்கல்தானே என்று நினைப்பதில்லை. அந்தக் கருங்கல்லில் தெய்வீகம் உள்ளது. இப்படி ஒரு கருங்கல்லைத் தெய்வ உருவமாக்கி அதற்குச் செய்ய வேண்டிய கிரியைகளைக் குறைவறச் செய்து பிரதிஷ்டை செய்த பிறகு அந்தக் கருங்கல் தெய்வமாகி விடுகிறது. அதற்குச் சகல விதமான உப சாரங்களும் விழாக்களும் நடை பெறுகிறது.

ஆக உபாசனை என்பதற்கு ஒரு உருவத்தை முதலில் உள்ளத்தில் உருவகப்படுத்திக் கொள்ள வேண்டும். அதையே தியானித்துக் கொண்டிருக்கலாம். பக்தி விருத்தியடைய உருவம் ஒரு சாதனம். இந்த சாதனத்தைப் பிடித்துக்கொண்டு மேல் நிலைக்கு அதாவது முக்தி லோகத்திற்குப் போக வேண்டும். தீவிர பக்தி இருந்தால் இது சாத்தியம்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாலைப் பதியில் வாழ்ந்த செட்டியார் திரு.இளையதம்பி அவர்களின் அருமை மனைவி திருமதி. தெய்வானை அம்மையாரின் வாழ்க்கை வரலாறு

அலைமகளும், கலைமகளும், மலைமகளும் ஒன்றிணைந்து குறைவின்றி அரசோச்சும் அவனி போற்றும் அழகுமிகு நாடாம் ஈழத் திருநாட்டின் சிரமென வட பால் அமைந்துள்ள யாழ்நகரில் அணிகலன்களென அறிஞர்கள், ஆற்றல் மிக்கோர், பாவலர், கலைஞர், வர்த்தகர், வணிகர், விவசாயிகள் போன்ற இன்னோரன்ன பல்கலை விற்பன்னர்கள் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் ஏழாலைப் பதியில் வாழ்ந்தவர்-செட்டியார் காசி நாதர். செட்டியார் பரம்பரை என்றால் உயர் குடிச் சிறப்பும் - கொடைச் சிறப்பும் - ஒழுக்க முடைமையும் - கிராம மக்களுக்கு நீதி வழங்கும் நியாயச் சிறப்பும் மிகுந்த பரம்பரை என்று அவ்வூர் மக்கள் சொல்வர். காசிநாதரின் தந்தை முருகர். அவரின் தந்தை கதிர்காமர்.

ஏழாலையிலேயே பெரிய நிலச்சுவாந்தார். பதின் மூன்று கிணற்றடி நில முடையார் என்று பெயர் பெற்றவர்கள். விவசாயம் அவர்களின் சிறந்த தொழில். விவ சாயத்தில் அவர்கள் செய்யும் பயிர்கள் மரவள்ளி, கத்தரி, மிளகாய்த்தோட்டம், வாழைத் தோட்டம், புடோல், பாகற் பந்தல் பார்க்கக் கண்குளிரும். செம்மண் பூமியும், சிறந்த நன்னீரும் விவசாயத்தை வளம் படுத்தின. சாமி, தினை, வரகு கோடைப் பயிராகும்.

காசிநாதர் வளர்த்த கறவையினங்கள் பாலாய்ச் சொரியும். பால், தயிர், நெய், மோர் இவற்றிற்குக் குறைவேயில்லை. மோரைப் பெரிய அண்டாவில் கரைத்து வீட்டுப் படலையில் வைத்து விவசாயம் செய்து களைப்புற்றுப் போகும் மக்களுக்கும், கூலியாட்களுக்கும் தாகம் தீரக் கொடுப்பார் என்று அவ்வூர் மக்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

காசிநாதருக்குச் செல்லப்பா, இளையதம்பி என்று இரண்டு ஆண்பிள்ளைகளும், சின்னப்பிள்ளை, பொன்னு என்று இரண்டு பெண் பிள்ளைகளும் பிறந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கந்தர் என்ற பெரியார் உமையம்மையைத் திருமணம் செய்து ஆறுப்பிள்ளை, வேலுப்பிள்ளை வயிரவப் பிள்ளை என்ற மூன்று ஆண்களையும், தெய்வானை என்ற பெண்ணையும் பெற்றெடுத்தனர். இவர்களும் சீரும் சிறப்புமாக அவ்வூரிலேயே வாழ்ந்தனர்.

காசிநாதர் •அவர்களின் மகன் இளையதம்பிக்குக் கந்தர் உமையம்மை தம்பதியினரின் மகள் தெய்வானையை 1923ம் ஆண்டு அவரது பதினேழாவது வயதில் திருமணம் செய்து வைத்தனர். இளைய தம்பி தெய்வானை தம்பதியினர் சீரும் சிறப்பும், பேரும் புகழும், செல்வச் செழிப்புமாக வாழ்ந்தனர். இல்லற வாழ்க்கையின் பெறு பேறாக புதல்வர்கள் எழுவரையும், புத்திரிகள் மூவரையும் பெற்றெடுத்தனர்.

மூத்த தலைப் பிள்ளையாக சற்குணம் என்ற பெண்ணையும் அடுத்து இராசையா, தம்பிஐயா, நடராஜா, செல்வபாக்கியம், சிவராஜா, தங்கராஜா, செல்வராஜா, சின்னராஜா, ஈஸ்வரதேவி என்று மக்களைப் பெயரிட்டழைத்தனர். பிள்ளைகளும் வளர்ந்து கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கினர். தந்தையார் இளையதம்பி விவசாயம் செய்து பொருளீட்டினார். ஆண்பிள்ளைகளுக்கும் விவசாயத் தொழிலை நன்கு கற்றுக் கொடுத்தார். பதின்மூன்று கிணற்றடி நிலம் பூராவும் கமஞ் செய்தனர்.

இந்நிலையில் மூத்தமகள் சற்குணத்திற்கு இலங்கை அரசு காவற் துறையிற் கடமை புரிந்த ஏழாலையைச் சேர்ந்த கனகசுந்தரம் என்பவருக்கு 1953ம் ஆண்டில் திருமணம் செய்து வைத்துச் சிறப்புக் கண்டனர். கனகசுந்தரம்-சற்குணம் தம்பதியினர் மகிழ்வுடன் வாழ்ந்து இரண்டு மகளையும், இரண்டு மகனையும் பெற்றெடுத்தனர். தற்பொழுது அவர்கள் இருவரும் அமரத்துவம் அடைந்துள்ளனர்.

அடுத்து மூத்தமகன் இராசையாவிற்கு ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.சண்முகத்தின் மகள் தவமணியைத் திருமணம் செய்து வைத்து மகிழ்ந்தனர். அவர்களுக்கும் ஒரு ஆண், ஒரு பெண் பிள்ளைகள் உள்ளனர். தற்பொழுது இராசையாவும் தவமணியும் சிவபத மடைந்துள்ளனர்.

அடுத்து தம்பிஐயா ஏழாலையைச் சேர்ந்த செல்லத்துரை என்பவரின் மகள் இராசகிளியைத் திருமணம் செய்து மகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரையும், மகன் இருவரையும் பெற்றெடுத்தனர்.

மகள் செல்வபாக்கியம் தாய்மாமன் வயிரவப்பிள்ளையின் மகன் குமரையா என்பவரைத் (இலங்கை புகையிரத ஸ்தாபனத்தில் வேலை செய்தவர்) திருமணம் செய்து குஞ்சரக் கன்று போல் ஒரே ஒரு ஆண்மகனைப் பெற்று வாழ்கின்றனர்.

அடுத்து நடராஜாவும், சிவராஜாவும் உயர்கல்வி கற்று ஆசிரியர்களாக வேலை பார்த்தனர். நடராஜா ஆசிரியர் பண்ணாகத்தைச் சேர்ந்த திரு. பரமு+சோதிமுத்து தம்பதியினரின் மகள் செல்வி ஆச்சிப்பிள்ளை ஆசிரியரைத் திருமணம் செய்து ஆண் குழந்தைகள் மூவர், பெண் குழந்தைகள் மூவரைப் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தனர். நடராஜா ஆசிரியர் சிவபத மடைந்துள்ளார். ஆசிரியரின் மகள்கள் இருவர் உயர்கல்வி கற்று ஆசிரியராகப் பணிபுரிகின்றனர். இப்படி இளையதம்பி தெய்வானை குடும்பஸ்தினரின் வாழ்க்கை கலகலப்பாகவும், குதூகலமாகவும் ஓடிக் கொண்டிருக்கையில் 1967ம் ஆண்டு பங்குனித் திங்கள் 3ம் நாள் திரு. இளையதம்பி சிவபத மடைந்துவிட்டார். அவர் போனபின் குடும்பப் பொறுப்பு முழுவதும் திருமதி. தெய்வானை அம்மையாரே பார்த்து வந்தார்.

சிவராஜா ஆசிரியர் ஏழாலையைச் சேர்ந்த செல்லத்துரை என்பவரின் மகள் மனோன்மணியைத் திருமணம் செய்து மாத்தளை மலைநாட்டில் இருவரும் ஆசிரியர்களாகப் பணி புரிந்தனர். அவர்களுக்கு ஆண்பிள்ளைகள் நால்வரும் பெண்பிள்ளை ஒருவரும் உள்ளனர். பெண்பிள்ளை சிவபத மடைந்து விட்டார்.

அடுத்த மகன் தங்கராஜா ஏழாலையைச் சேர்ந்த நாகலிங்கம் என்பவரின் மகள் தவமணியைத் திருமணம் செய்து ஆண்பிள்ளைகள் இருவரும், பெண் பிள்ளைகள் நால்வரையும் பெற்றெடுத்தனர். தங்கராஜா அமரத்துவம் எய்திவிட்டார்.

அடுத்த மகன் செல்வராஜா ஏழாலையைச் சேர்ந்த உறவினரான சின்னத்துரை என்பவரின் மகள் நாகேஸ்வரியைத் திருமணம் செய்து ஆண்பிள்ளைகள் இருவரையும் பெண்பிள்ளை ஒருவரையும் பெற்றனர். செல்வராஜா ஆனையிறவு உப்புக் கூட்டுத் தாபனத்தில் சாரதியாக வேலை செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கடைசி மகன் சின்னராஜா ஏழாலையைச் சேர்ந்த மயில்வாகனம் என்பவரின் மகள் ஞானமலரைத் திருமணம் செய்து சிறப்பாக வாழும் நாளையில் பெண்கள் மூவரும், ஆண்கள் இருவரும் பெற்றனர். ஓமந்தையில் விவசாயம், வர்த்தகம் செய்து வாழ்ந்தனர் சின்னராஜா+ஞானமலர் தம்பதிகள். தங்கள் மூத்த மகளைத் திருமணம் செய்து கொடுத்த சிறிது காலத்தில் சின்னராஜா அமரத்தும் அடைந்துவிட்டார்.

கடைசி மகள் ஈஸ்வரதேவியைப் பண்ணாகத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் அவர்களின் மகன் பாலசுப்பிரமணியத்திற்கு (இலங்கைப் போக்குவரத்துக் கூட்டுஸ்தாபன நடத்துனர் (C.T.B.) திருமணம் செய்து சிறப்புக் கண்டனர். அவர்கள் மூன்று ஆண் மக்களைப் பெற்றெடுத்தனர். சிறிது காலத்தில் ஈஸ்வரதேவி இறை அடி சேர்ந்துவிட்டார். பிள்ளைகள் கல்வி கற்று இருவர் சுவிற்சலாந்தில் வேலை செய்கிறார்கள்.

பெரிய குடும்பத்தை மிகவும் கண்ணியமாகவும், அன்பு பாசத்துடனும் வழி நடத்தி நற்பேறு கண்ட அன்னார் தனது தளர்ந்த வயதில் மகள் பாக்கியத்துடன் ஏழாலையில் வாழ்ந்து வந்தார். நிறைந்த கடவுள் பக்தியும், ஈகைத்திறனும், அன்பான அழைப்பும் , இனிய பேச்சும், அழகு முகமும், நீதி தவறா வாழ்க்கையும், பிற உயிர்களை நேசித்துப் பாதுகாக்கும் பெருந்தன்மையும் அவரோடு பழகியோரை ஆற்றுப் படுத்தும்.

தளர்ந்த நேரத்தில் மக்களிடம் கை நீட்டுவது கௌரவக் குறைவு என்று எண்ணித் தன்மானத்தோடு பசுமாடு, ஆடு, கோழி வளர்த்து அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் தன் தேவைகளைப் பூர்த்தி செய்தார். தன் பேரப்பிள்ளைகளுக்குத் தான் வளர்க்கும் பிராணிகளில் ஒவ்வொன்று தவறாது கொடுப்பார். எல்லாப் பேரப்பிள்ளைகளும் அவரில் "ஆச்சி!ஆச்சி"! என்று அன்பும் பாசமும் மதிப்பும் வைத்திருந்தனர்.

அவருடைய பேரப்பிள்ளைகளும், பீட்டப்பிள்ளைகளும் அனேகர் வெளிநாட்டில் வாழ்கிறார்கள். பேத்திக்கு நிறையப் பணம் அனுப்புவார்கள்.

நாட்டுப் பிரச்சினை காரணமாகச் சேதமடைந்த தங்கள் வீட்டை விட்டு அம்மையாரும், மகளும், மருமகனும் ஏழாலையில் வேறொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் வாழ்ந்து வந்தனர். ஒருநாள் திடீரென இலங்கை இராணுவம் சுற்றி வளைத்த காரணத்தால் எல்லோரும் பயத்தில் தெறிகெட்டு அயற்கிராமத்திற்கு ஓடிவிட்டனர். அம்மையார் சற்றுப் பார்வை குறைந்த காரணத்தாலும், நடை தளர்ந்த காரணத்தாலும் வீட்டிலேயே இருந்து விட்டார்.

சுற்றி வளைத்த இராணுவத்தினர் உள்ளத்தில் நல்லெண்ணம் தோன்றிய காரணத்தாலும், அவர் செய்த புண்ணிய கருமங்களாலும் அவரையும் ஏனைய முதியவர்களையும் கூட்டிச் சென்று இளவாலை "கொண்வென்ற்" (Convent) பாடசாலையில் வைத்து நல்லபடி பராமரித்தனர். தர்மம் செய்தவரை தர்ம தேவதை எப்பொழுதும் காப்பாற்றுவாள் என்பது அவரின் வாழ்க்கையில் உண்மையாயிற்று. "செய்த தர்மம் தலைகாக்கும் தக்க சமயத்தில் உயிர்காக்கும்". யாழ்குடாமக்கள் வடமராட்சி, தென்மராட்சியை விட்டு 20-4-96ல் யாழிற்குத் திரும்பினார்கள். அப்பொழுது இராணுவம் யாழை விட்டு வடமராட்சி சென்று விட்டனர். இராணுவத்தின் பாதுகாப்பிலிருந்த கொண்வென்ற (Convent) முதியவர்களை அவரவர் உறவினர் அழைத்துச் சென்று பராமரித்தனர். திருமதி. தெய்வானை அம்மையாரை அவரின் மருமகன் பண்ணாகம் பாலசுப்பிரமணியமும், பேரன் ஜெயபாஸ்கரும் கூட்டிச் சென்று அன்போடு பாதுகாத்தனர். தனது இறுதி நேரத்தில் அன்புடனும், பாசத்துடனும் வளர்த்த பேரனோடு வாழ்ந்தது அவருக்குப் பெரிய ஆறுதலைக் கொடுத்தது. அந்நேரம் அவரின் மக்கள் அனைவரும் வட்டக்கச்சியில் வாழ்ந்தனர். பெற்ற தாயைப் பார்க்க முடியாத நிலை. 9-1-97ல் தனது 91 வயதில் திருமதி தெய்வானை அம்மையார் பேரன் முன்னிலையில் சிவபத மடைந்தார். மரணக் கிரியைகள் மிகச் சிறப்பாகச் செய்தனர். நீர்க்கடன் தீக்கடனைப் பேரன் செய்து முடித்தார். அந்தியேட்டிக் கிரியையும் முறையாகவும், ஒழுங்காகவும் செய்து அன்னக் கொடையும் கொடுத்தனர். அவர்கள் கொடுத்து வைத்த பூர்வ புண்ணியம் அவர் பெற்றெடுத்த மக்களுக்குக் கிடைக்கவில்லை.

இவ்வளவு பெரிய சேவை செய்து பெரிய ஒரு சமூகம் போன்ற குடும்பத்தை நிர்வகித்து நலமுறப் பேணிய அன்னாரின் ஆன்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தியடையும். ஏனெனில் அவர் உலக வாழ்க்கையில் பழுத்த பழம். இவ்வாழ்க்கை வேண்டாம் என்று வெறுத்த நிலையில் அவர் வாழ்வு முடிவுற்றது. அவரின் சிறப்பையும் சேவையையும் பாராட்டாமல் இருக்க முடியாது. அவரின் மருமகளாகிய திருமதி. நடராஜா ஆசிரியர் இந்நூலைத் தயாரித்து நன்றியுணர்வோடு அவரின் பாத கமலங்களிலும், அவரது மகன் திரு.இ. நடராஜா ஆசிரியரது பாத கமலங்களிலும் சமர்ப்பிக்கின்றார். அவர்களின் ஆன்மா இறையோடு இரண்டறக்கலந்து இன்புற்றிருக்க.

திருவான்மியூர் நன்றியுடன்
சென்னை திருமதி.ஆ. நடராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

ஆறாத் துயர் தந்து மீளாத் துயில் கொண்ட எமது குடும்பத் தலைவி எங்கள் அருமைத் தாயார் அருமை மாமி அன்புப் பேத்தி அமரர் திருமதி. இளையதம்பி, தெய்வானை அம்மையார் 9-1-1997 அன்று சிவபத மடைந்த செய்தி கேட்டு எம் துயரைத் தம் துயராய்க் கொண்டு செயலாற்றிய பண்ணாகம் வாழ் உறவினர்களுக்கும், நண்பர் கட்கும், இத்துயர்ச் செய்தியை அறிந்து சென்றவர்களுக்கும், பாசத்தைக் கடிதங்கள் மூலம் தெரிவித்த எம் பாசமுள்ளோர்க்கும் - கருத்துணர்ந்து தக்க சமயத்தில் உதவிகளைச் செய்த அயலவர்கள்- உறவினர்கள்-அன்பர்களுக்கும் நேரில் சென்று அன்னாரின் துன்பத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், வெளிநாடுகளில் அமரர் தம் பேரப்பிள்ளைகள் இல்லங்களுக்குச் சென்று அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், வன்னியில் வாழ்ந்த அமரரின் மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், நேரில் பண்ணாகம் சென்று அஞ்சலி செலுத்திய வர்களுக்கும், ஈமக் கிரியைகளில் பரமன் புகழ் பாடியவர்களுக்கும், சகல கிரியைகளிலும் பங்கு கொண்ட சைவப் பெரியார்களுக்கும், அம்மையாருக்கு நீர்க்கடன் தீக்கடன் செய்த மருமகன் பேரனுக்கும்,நூல் திறம் பட அமையத் தேடற்கரிய இறை அருட்பாற் பொக்கிஷங்களைத் தேடி இந்நூலைத் தொகுத்த அன்னாரின் மருமகளாகிய எனக்கு, இந்நூலை ஆக்க எனக்கு உதவியாக வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பிய அமரரின் பேரப்பிள்ளைகளான திருமதி.அ.சறோஜினிதேவி, செல்வன் சி.மனோ ரஞ்சிதராஜா, செல்வன்.சி.நகுலேஸ்வரன் ஆகியோருக்கும், மலர்தனை அச்சிட்டுத் தந்துதவிய மாசறு அச்சகத்தாருக்கும், இன்னும் எவருக்காவது நன்றி கூறத் தவறி இருப்பின் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றிகளை நவில்கின்றோம்.

திருவான்மியூர்
சென்னை-41
இந்தியா
25-5-98

இங்ஙனம்
திருமதி.ஆ.நடராஜா
பேரப்பிள்ளைகள்,
பண்ணாகம்,
சுளிபுரம்,
யாழ்ப்பாணம்
இலங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

பிரணவத்திலிருந்து சகல பிரபஞ்சமும் ஜீவராசிகளும் தோன்றின அந்தப் பிரணவத்தின் ஸ்வரூபம் பிள்ளையார்.

○○○

ஜீவனுக்கு அறிவு வேறு எங்கோ இருந்து வரவில்லை. இந்தப் பேரறிவின் திவலைதான் என்று தெரிகின்றது.

○○○

தர்மத்துக்காக நியாயத்துக்காக வித்தைக்காக எதையும் தியாகம் பண்ணவேண்டும் என்றுதானே தந்தத்தை ஒடித்து தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறார் பிள்ளையார்.

○○○

கஷ்டங்களைக் கண்ட இடத்தில் போய்ச் சொல்லிக் கொள்ளாமல் கேட்பவர்கள் எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்றில்லாமல் பகவானிடம் கஷ்டத்தைச் சொல்லிக் கொள்ளலாம்.

○○○

பிரபஞ்சத்தை நடத்தி இத்தனை காரியங்களைச் செய்தும் கவனித்தும் பலனளித்தும் வந்தாலும் ஸ்வாமி இதனாலெல்லாம் மனம் சலிக்காமல் சாந்தமாக இருக்கிறார்.

○○○

"ஒரு ஜன்மாவில் இவன் பண்ணிய பாவங்களை இன்னொரு ஜன்மாவிலாவது தீர்த்துக் கொள்ளட்டும்" என்கிற மகா கருணையினாற்றான் ஈசுவரன் மறுபடி ஜன்மா தருகிறார்.

○○○

நன்மைகளும், நல்லவைகளும் செய்வதற்கான எல்லா சக்திகளும், திறமைகளும் உன்னுள்ளே அடங்கி இருக்கிறது. அதை நம்பு, நிமிர்ந்து நின்று, பயமின்றி அந்தத் திறமைகளைப் பயன்படுத்தி நல்ல காரியங்களைச் செய். அப்போது உன் அமானுஷ்ய சக்தியும், தெய்வீகத் தன்மையும் உலகுக்குத் தெரியும்.

○○○

கடமையோடு அன்பும் செலுத்தினால் அது நல்லது. அன்பில்லாமல் செலுத்தும் கடமை பயனற்றது. கடமை இல்லாத போதும் அன்பு செலுத்துவது தெய்வீக குணமாகும்.

○○○

பிறர் துன்பமும் துயரமும் கண்டு மனமிரங்கிப் பிரார்த்தனை செய்யும் உதடுகளைவிட அவர்களுக்காக மனமுவந்து சேவை செய்யும் கைகள் புனிதமானது.

○○○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளோடு சேர்ந்து வாழ்வது உண்மையான அறிவாற்றல் ஆகும். கடவுளுக்காக வாழ்வது தூய பக்தியாகும். கடவுளின் உள்ளே வாழ்வது ஆன்மீக விடுதலையாகும்.

OOO

பணம் வரும் போகும். ஆனால் ஒழுக்கம் வரும். நம்மிடையே தங்கும் மேலும் வளரும்.

OOO

இந்த உலகம் நிரந்தரமானது அல்ல. இறைவன், தர்மம், தாயின் அன்பு ஆகியவையே நிரந்தர மானவை.

OOO

நிரந்தரமில்லாத உலகை நம்பாதே. மரணத்திற்கு அஞ்சாதே இறைவனை மறவாதே.

OOO

கல்வியின் எல்லை ஒழுக்கமுள்ள வாழ்க்கை. அறிவின் எல்லை விவேகமான சிந்தனை. விவேகத்தின் எல்லை ஆன்மாவின் விடுதலை.

OOO

அன்பு என்ற எண்ணமே சத்தியம். அன்பு என்ற செயலே தர்மம். அன்பைப் புரிந்து கொள்வதே சாந்தி. அன்பெனும் உணர்வே அஹிம்சை.

OOO

விஞ்ஞானமும், பொறியியலும் வளர்ந்துவிட்டால் மட்டும் போதாது. அன்பும், மனிதாபிமானமும் அவற்றிற்கு ஈடாக வளர வேண்டும். அப்போதுதான் உண்மையான சமுதாய வளர்ச்சி ஏற்படும்.

OOO

ஒரு பந்தின் உள்ளேயும் வெளியேயும் காற்று இருப்பதுபோல இறைவன் நம்முள்ளும் வெளியிலும் வியாபித்திருக்கிறான்.

OOO

உன்னுடைய மனதை இந்திரியங்களுக்கு அடிமை யாக்கி விடாதே. அதை இறைவனுக்கு அடிமை யாக்கி விடு. அப்போது இந்திரியங்கள் உனக்கு அடிமையாகி விடும்.

OOO

தூய்மையை விட உயர்ந்த பலம் எதுவும் இல்லை. அன்பை விட திருப்தி தரக்கூடிய செல்வம் எதுவும் இல்லை. தூய பக்தியைவிட சிறந்த மகிழ்ச்சி வேறெதுவுமில்லை.

OOO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org